பொதுசன நூலகம்
தாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

Regested No. QD/130/News/2011

YARL OSAI
யாழ் ஓசை
வார இதழ்

ஓசை : 01 | நாதம் : 29 | வெள்ளிக்கிழமை 20.05.2011 | வார இதழ் | விலை ரூபா: 15.00

ராஜீவ் கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட நளினி உள்ளிட்டோரை விடுவியுங்கள்

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து சொந்த இடமான மாதகல் சகாயபுரத்தில் மீளக் குடியமர்ந்துள்ள எட்டு அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பம் ஒன்று அடிப்படை வசதிகளற்ற நிலையில் குடிசையில் வசிப்பதைப்படத்தில் காணலாம். (படம் - வண்ணார்பண்ணை நிருபர்)

தமிழகம் வந்த இலங்கை அகதிகள் சிறப்பு முகாம் என்ற பெயரில் அநியாயச் சிறை

- நாம் தமிழர் கட்சி தெரிவிப்பு

வேலூர்,

ராஜீவ் கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு, 20 ஆண்டுகளுக்கும் மேல் சிறையில் உள்ள நளினி, முருகன், பேரறிவாளன் உள்ளிட்டோரை விடுவிக்குமாறு முதல்வர் ஜெயலலிதாவுக்கு நாம் தமிழர் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

ஐ.நா.நிபுணர் குழு அறிக்கைக்கு ஆதரவு கோரி வேலூரில் நடந்த நாம் தமிழர் கட்சி பொதுக் கூட்டத்தில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

(6ஆம் பக்கம் பார்க்க)

இராணுவப் புலனாய்வு பிரிவினரால் அச்சுறுத்தல்

மாநகரசபை உறுப்பினர் புகார்

இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் தனக்கு உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக யாழ். மாநகர சபை உறுப்பினர் க. விந்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக இவர் யாழ். மாவட்ட இராணுவத் தளபதியிடம்

(6ஆம் பக்கம் பார்க்க)

யுத்தத்தின் உயிரிழப்புக்களை மூடிமறைக்கவே கொடுப்பனவுகளும் சலுகைகளும் வழங்கப்படுகின்றன

- அரச சார்பற்ற நிறுவனப் பணிப்பாளர்

வண்ணார்பண்ணை,

வன்னியில் இறுதி யுத்தத்தின்போது நடைபெற்ற மனித உயிரிழப்புக்களை மூடி மறைத்து எதுவும் நடைபெறவில்லை என்ற நிலையை உருவாக்கவே கொடுப்பனவுகளும் சலுகைகளும் வழங்கப்படுகின்றன. எனினும், இவையெல்லாம் தாண்டி வன்னியில் இறுதியில் நடைபெற்ற அனைத்து விடயங்களும் வெளிவரத் தொடங்கியுள்ளன என அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் பணிப்பாளர் தெரிவித்

(6ஆம் பக்கம் பார்க்க)

உள்நாட்டலுவல்கள் அமைச்சர் இன்று யாழ்ப்பாணம் விஜயம்

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் டபிள்யூ. டி. ஜோன் செனவிரட்ன இன்று யாழ்ப்பாணம் விஜயம் செய்யவுள்ளார்.

(6ஆம் பக்கம் பார்க்க)

யாழ். ஊரெழுவை பூர்வீகமாகக்கொண்ட தர்மன் சிங்கப்பூரின் பிரதி பிரதமராக தெரிவு

சிங்கப்பூரின் நிதியமைச்சராக விளங்கிய தர்மன் சண்முகரட்ணம் சிங்கப்பூரின் பிரதி பிரதமராக கடந்த புதன்கிழமை நியமிக்கப்பட்டுள்ளார். புதிய அமைச்சரவையின் நியமனங்களின்போதே அவருக்கு பிரதி பிரதமர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

2007 ஆம் ஆண்டு தொடக்கம் நிதியமைச்சராக சண்முகரட்ணம் சேவையாற்றியுள்ளார். சிங்கப்பூரில் சிரேஷ்ட அரசியல்வாதியான சண்முகரட்ணம் சர்தேச நாணய நிதியம் சர்வதேச நாணய மற்றும் நிதிக்குழு என்பவற்றின் பணிப்பாளராகவும் இருந்துவருகின்றார்.

இந்தக் குழுவே நிதிக் கொள்கையில் பிரதான பங்களிப்பை வழங்குவது குறிப்பிடத்தக்கது.

1957 ஆம் ஆண்டு பிறந்த இவர்

(6ஆம் பக்கம் பார்க்க)

ஜெயசந்திரன்ஸ் பட்டாடைகளால் உங்கள் திருமண விழாவை அலங்கரித்திடுங்கள்

JEYECHANDRANS
The Art of Fashion

No.433,Galle Road,Colombo-06 Tel:011-4528438/0114528435
www.jeyechandrans.com

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

புலிகளுக்கான நிதி சேகரிப்பு நடவடிக்கைக்கு எதிராக நோர்வேயில் வழக்கு விசாரணை

ஒஸ்லோ,

நோர்வேயில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு நிதி சேகரித்தமை தொடர்பாக ஒஸ்லோ மாவட்ட நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கிற்கான விசாரணை மூன்று தினங்களுக்கு நடைபெறவுள்ளது. இந்த வழக்கிற்கான விசாரணை நேற்று ஆரம்பமாகியுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் பல நாடுகளில் புலிகள் அமைப்பு மீது தடைவிதிக்கப்பட்டுள்ளது. இந் நிலையில் நெதர்லாந்தில் புலிகளுக்கு நிதி சேகரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் சிலர் கைதாகியிருந்தனர். அவர்களுக்கெதிரான விசாரணைகளின் போது தமக்கும் நோர்வேயில் இருக்கும் புலிகளின் நிதி சேகரிப்பாளர்களுக்கும் இடையில் தொடர்பிருப்பதாகத் தெரிவித்தனர். இதனையடுத்தே நோர்வேயில் புலிகளின் நிதிசேகரிப்புக்கு எதிராக வழக்கு விசாரணை நடைபெற்று வருகிறது.

இந்த வழக்கு விசாரணையில் நெதர்லாந்து பொலிஸார், அந்நாட்டு நீதித்துறை அதிகாரிகள் மற்றும் சர்வதேச இன்ரபோல் பொலிஸார் என 10 இற்கும் மேற்பட்ட அதிகாரிகள் ஒஸ்லோ நீதிமன்றில் ஆஜராகியுள்ளனர்.

அதேவேளை, நெதர்லாந்து நீதிபதிகள் குழு ஒன்றும் புலிகளின் நிதி சேகரிப்புத் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக நோர்வேக்கு வந்துள்ளது. அவர்கள் நோர்வேயில் உள்ள புலிகள் தொடர்பாக விசாரணைகளை நடத்துவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

புலிகளுக்கெதிரான பயங்கரவாத வழக்கு ஒன்று நெதர்லாந்து அரசால் நோர்வே நாட்டில் தொடுக்கப்பட்டுள்ளது எனவும் கடந்த வருடம் நெதர்லாந்தில் கைதான புலிகளின் செயற்பாட்டாளர்களுடன் சம்பந்தப்பட்டது எனவும் நோர்வே வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, இந்த வழக்கிற்கு நோர்வே அரசு பூரண ஒத்துழைப்பை வழங்கும் என அந் நாட்டு நீதியமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

தஞ்சையில் முள்ளிவாய்க்கால் நினைவு நிகழ்ச்சி தள்ளிவைப்பு

தஞ்சை,

சோழ மாமன்னன் இராஜராஜன் தஞ்சையில் மாபெரும் கற்கோயிலை எழுப்பினான். ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகும் அது கம்பீரமாகக் காட்சி தருகிறது. தமிழர்களின் சிற்பத்திறனுக்கு எடுத்துக்காட்டாக அது திகழ்கிறது.

அதே தஞ்சையில் மற்றொரு கற்கோயில் எழுப்பப்பட்டு வருகிறது. அது முள்ளிவாய்க்காலில் பலியான தமிழர்களின் நினைவாகவும், ஈழத் தமிழர்களுக்காகத் தீக்குளித்துத் தியாகம் செய்த முத்துக்குமார் உட்பட 19 தியாகிகளின் நினைவாகவும் சிற்ப நுணுக்கம் மிகுந்த நினைவுச் சின்னம் எழுப்பப்பட்டு வருகிறது.

இராஜராஜன் எழுப்பிய தஞ்சைக் கற்கோயிலுக்குப் பயன்படுத்திய அதே இரகக் கற்கள் கண்டறியப்பட்டு தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து பெரும் பொருட் செலவில் தஞ்சைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

50 தொன்னிற்கு மேலான எடையும் 40 அடி நீளமும் 10 அடி உயரமும் 3 அடி கனமும் கொண்ட பெரும் கற்களில் நூற்றுக்கு மேற்பட்ட சிற்பிகள் இரவு பகலாக அற்புதமான சிற்பங்களைச் செதுக்கி வருகின்றனர்.

இதில், முள்ளிவாய்க்காலில் வீழ்ந்து கிடக்கும் மக்களின் அவலக் காட்சியும், முகாம்களில் அடைக்கப்பட்டுப் புலம்பும் மக்களின் துயரக் காட்சியும், முத்துக்குமார் உட்பட தமிழகத்திலும் உலக நாடுகளிலும் உயிர்த் தியாகம் செய்த தியாகிகளின் சிலைகளும் செதுக்கப்பட்டு வருகின்றன.

மேலும், ஓவிய மண்டபம் ஒன்றும் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அதில், தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் முக்கிய நிகழ்ச்சிகள் ஓவியங்களாக வரையப்பட்டு இங்கு வைக்கப்படவுள்ளன.

தமிழகத்தில் இதுவரை இத்தகைய சிற்ப நினைவகம் அமைக்கப்பட்டதில்லை என்று சொல்லுமளவிற்கு இது உருவாக்கப்பட்டு வருகிறது.

பல இலட்சம் தமிழர்களின் துயரங்களை புதிய தலைமுறையினர் அறிந்து கொள்ளும் வகையில் அமைக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், தஞ்சையில் உருவாகி வரும் முள்ளிவாய்க்கால் நினைவக வேலைகள் இன்னும் முழுமையாக நிறைவடையவில்லை.

எனவே, இந்த வேலைகள் முழுமையாக முடிந்த பின்னரே திறப்பு விழாவும், உலகத் தமிழர் பேரமைப்பின் 9 ஆம் ஆண்டு நிறைவு விழாவும் நடைபெறும். இதற்கான திகதி பின்பு அறிவிக்கப்படும் என கூறப்படுகின்றது.

முசலி பிரதேச செயலக ஊழியர்கள் பணி பகிஷ்கரிப்பு போராட்டம்

(எம்.பி.எம். பைறூஸ்)

முசலி பிரதேச செயலாளர் எஸ்.கேதீஸ்வரன், சிலாவத்துறை கிராம சேவையாளர் ஏ.எஸ். ஆப்தீன் ஆகியோர் அரசாங்க ஊழியர் ஒருவரால் தாக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று முசலி பிரதேச செயலக ஊழியர்கள் ஒரு மணி நேர அடையாள பணி பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அத்துடன் பிரதேச செயலக ஊழியர்கள் பாதுகாப்பான முறையில் பணி புரிவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் எனக் கோரும் மகஜர் ஒன்றையும் முசலி பிரதேச செயலாளர் மற்றும் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோரிடம் கையளித்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

மன்னார் பிரதேசத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராகப் பணி புரியும் அரசாங்க ஊழியர் ஒருவர் கடந்த வாரம் முசலி பிரதேச செயலகத்திற்கு வருகை தந்து தனது காணியில் மின்சார இணைப்பை பெறுவதற்கான அனுமதிப் பத்திரத்தில் கையெழுத்திடுமாறு பிரதேச செயலாளரிடம் கேட்டுள்ளார்.

இருப்பினும் குறித்த காணி தொடர்பில் வழக்கு ஒன்று நிலுவையில் உள்ளதால் வழக்கு முடிவடையும் வரை தன்னால் அனுமதி வழங்க முடியாது என பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதனால் ஆத்திரமடைந்த குறித்த அரசாங்க ஊழியர் தகாத வார்த்தைகளால் பேசியதுடன் பிரதேச செயலாளரை தாக்கியுள்ளார்.

அச்சமயம் அங்கு வந்த சிலாவத்துறை கிராம சேவையாளர் ஆப்தீன் மீதும் அவர் தாக்குதல் நடத்தியுள்ளார். இதனால் காயமடைந்த கிராம சேவையாளர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வெளியேறியுள்ளார்.

பின்னர் தாக்குதல் நடத்திய நபர் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்ததாகவும் தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் குறித்த தாக்குதல் சம்பவமானது தமது பாதுகாப்பை கேள்விக்குள்ளாக்கியுள்ளதாகக் கூறி நேற்றுக் காலை 11 மணி முதல் 12 மணி வரை முசலி பிரதேச செயலக ஊழியர்கள் ஒரு மணி நேர அடையாள பணி பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பாக கருத்து வெளியிட்ட முசலி பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்க தலைவர், அரசாங்க ஊழியர் ஒருவர் சட்டதிட்டங்களை மீறும் வகையில் நடந்து கொண்டுள்ளதுடன் எனைய அரச அதிகாரிகள் மீதும் தாக்குதல் நடத்தியுள்ளார். இது பொது மக்களுக்கு தவறான முன்மாதிரியாக அமைவதுடன் எதிர்காலத்தில் பொது மக்களும் அதிகாரிகளை அச்சுறுத்தி தமது காரியங்களை முடித்துக் கொள்ள ஏதுவாக அமையக் கூடும்.

எனவேதான் தாக்குதல் நடத்திய அரசாங்க ஊழியருக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுப்பதுடன் முசலி பிரதேச செயலகத்தில் பணிபுரியும் ஊழியர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு உயரதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுக்கிறோம் என்றார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மீள்குடியமர்ந்துள்ள பிரதேசத்தில் காணிகளை துப்புரவு செய்யும் மக்கள்

தெல்லிப்பழை,

வலி. வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்து விடுவிக்கப்பட்டு அண்மையில் மீள் குடியமர அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள தமது காணிகளை துப்புரவு செய்யும் மக்களுக்கு 'என்றிப்' திட்டத்தின் கீழ் பரப்பு ஒன்றுக்கு 950 ரூபா வீதம் நிதி உதவி வழங்கப்படவுள்ளது.

அண்மையில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட வறுத்தலைவிளான், மாவிட்டபுரம், பளை -வீமன்காமம் உள்ளிட்ட 9 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கே இத்திட்டத்தின் கீழ் நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

வெளிநாடு செல்ல முயன்ற இலங்கையர் கொச்சின் விமான நிலையத்தில் கைது

இந்தியாவின் கொச்சின் சர்வதேச விமன நிலையத்திலிருந்து ஓமானுக்கு செல்லவிருந்த முன்னாள் புலி உறுப்பினர் எனச் சந்தேகத்தின் பேரில் ஒருவர் அந் நாட்டு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பீற்றர் ஜீவதாஸ் மாரிமுத்து என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார். திருச்சி தமிழ்நாடு என்ற விலாசம் கொண்ட கடவுச்சீட்டை வைத்திருதார்.

அதுடன் புலிகளின் செயற்கை கால் தாயரிக்கும் தொழிற்சாலையில் வேலை செய்தவர் என்றும் அவர் தமிழ்நாட்டில் உள்ள அகதி முகாம் ஒன்றில் வசித்தவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தான் அரசியல் அடைக்கலம் கோருவதற்காக பிரான்ஸுக்குச் செல்ல விரும்பியதாகவும் தமிழகத்தை சேர்ந்த கடவுச்சீட்டு முகவரிடமிருந்து பயண ஆவணங்களை பெற்றுக் கொண்டதாகவும் அவர் கூறியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலைக்கு உதவுமாறு அமைச்சரிடம் கோரிக்கை

ஏழாலை,

பாடசாலையின் முன்னேற்றத்திற்கு உதவிசெய்யுமாறு ஈவினை அ.த.க. பாடசாலை அதிபரினால் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பாடசாலைக்கு அவசியம் மேற்கொள்ளப்பட வேண்டிய வேலைகள் மற்றும் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குத் தேவைப்படுவனவற்றை விரைவாக நிறைவேற்றவேண்டியுள்ளது. குறிப்பாக, 80 அடி நீளமான வகுப்பறைக் கட்டடத்திற்கு முன் விறாந்தை அமைத்தல், புதிய கட்டடத்திற்கு மின்சார இணைப்பை ஏற்படுத்தல் மற்றும் ஆசிரியர்களுக்கான மல சல கூடம் அமைத்தல் ஆகியன மேற்கொள்ளப்பட வேண்டிய வேலைகள்.

நூல் நிலையத்திற்குரிய தளபாடம், கணினி மற்றும் தொலைபேசி இணைப்பு என்பன தேவைப்படுகின்றன.

இத் தேவைகளை தாங்கள் தங்கள் அமைச்சின் ஊடாகவும் ஏனைய நிறுவனங்களிடம் இருந்து பெற்றுத் தர நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுவிக்கின்றோம் என அதிபர் தெரிவித்துள்ளார்.

கும்பழாவளை பிள்ளையார் ஆலயத்துக்கான விசேட இணையத்தளம் அங்குரார்ப்பணம்

தெல்லிப்பழை,

கும்பழாவளைப் பிள்ளையார் ஆலயத்தின் செயற்பாடுகளுக்காக விசேட இணையத்தளம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது.

www.kumpilavalai.com என்ற புதிய இணையத்தள முகவரியில் ஆலயத்தின் வரலாறு, ஆலயத்துடன் தொடர்புடைய விடயங்கள், கிராமத்தின் வரலாறு, தர்ம கர்த்தா சபை, உபயகாரர்கள், பிரதமகுரு, ஆலயத் திருப்பணிகள், பூஜைகள், உற்சவங்கள் என்பனவற்றைப் பார்வையிட முடியும்.

இவ் இணையத்தளம் ஊடாக ஆலய மஹோற்சவத்தின் புகைப்படங்கள், காணொளிகள் என்பவற்றைப் பார்வையிடலாம். இவ் இணையத்தள அறிமுகம் மூலம் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையாருடைய தரிசனைத்தைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கின்றது என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.

விஞ்ஞான வினாடிப் போட்டி

ஏழாலை,

வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையிலான வலய மட்ட விஞ்ஞானப் போட்டி நாளை 21 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு மருதனார்மடம் - இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வலய மட்ட விஞ்ஞான வினாடிப்போட்டிக்கு ஏற்றவாறு மாணவர்களைத் தயார் படுத்துமாறு வலயக் கல்விப் பணிப்பாளரினால் அதிபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

நாடகப்போட்டியில் வெற்றி

தெல்லிப்பழை,

உடுவில் கோட்ட மட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற நாடகப் போட்டியில் சுன்னாகம் - ஸ்கந்தவரோதயாக் கல்லூரி வெற்றிபெற்று வலய மட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளது.

மருதனார்மடம் - இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற நாடகப் போட்டியிலே ஸ்கந்தவரோதயாக் கல்லூரி முதலாமிடத்தையும், உடுவில் மகளிர் கல்லூரி இரண்டாமிடத்தையும், மயிலணி சைவ மகா வித்தியாலயம் மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டன.

63 வீதமான தனியார் மருந்தகங்கள் யாழ்ப்பாணத்தில் பதியப்படவில்லை

அச்சுவேலி,

யாழ். மாவட்டத்தில் 63 வீதமான தனியார் மருந்தகங்கள் உரியமுறையில் பதிவுகள், அனுமதி இன்றி செயற்பட்டுவருகின்றன. இதனால், பொது மக்களுக்கு தீங்கு விளைவிக்கக் கூடிய ஏதுநிலை அதிகரித்திருப்பதாகக் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். மாவட்டத்தில் செயற்படும் தனியார் மருந்தகங்கள் தொடர்பான 2010 ஆம் ஆண்டுக்கான மதிப்பீடுகளின் பிரகாரம் 35 மருந்தகங்கள் மட்டும் உரிய முறையில் பதிவுசெய்யப்பட்டு அனுமதி பெறப்பட்ட நிலையில் செயற்படுகின்றன. 56 மருந்தகங்கள் எதுவிதமான பதிவும் செய்யப்படாமல் உரியமுறையில் அனுமதி பெற்றுக் கொள்ளாத நிலையில் செயற்படுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் 91 தனியார் மருந்தகங்கள் செயற்படுகின்றன. ஏறத்தாழ 63 வீதமான மருந்தகங்கள் பதிவுகள், அனுமதியின்றி செயற்படுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. தனியார் மருந்தகங்கள் உரியமுறையில் பதிவுசெய்யப்பட்டு அனுமதி பெறப்படவேண்டும். மருந்தகங்களில் பணியாளர்கள், மருந்தாளர் பயிற்சிபெற்றவர்களாகவும் அவர்களது தகைமைகள் சுகாதாரத் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டு கடமை புரிவதற்கான அனுமதியை பெற்றிருக்கவேண்டுமென அறிவித்து பதிவு செய்வதற்கான முன்னறிவித்தல்களும் பிராந்திய சுகாதாரப் பணிப் பாளர் அலுவலகத்தினால் விடுக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில், 63 வீதமான மருந்தகங்கள் பதிவுசெய்யப்படாமல் இருப்பதும் அவை பெருமளவில் மருந்துவகைகளை விற்பனை செய்துவருவதும் பொது மக்களுக்கு தீங்கு விளைவிப்பவையாகவும் அமைந்துள்ளன. பதிவுசெய்யப்பட்ட மருத்துவர்களின் இறப்பர் முத்திரையுடன் கூடிய கையொப்பமிடப்பட்ட மருந்துச் சீட்டுக்களுக்கே மருந்து வகைகள் விற்பனை செய்யப்படவேண்டும் என்ற இறுக்கமான கட்டுப்பாடும் உள்ளது.

அதனால், மருத்துவர்களின் மருந்துச் சீட்டு இன்றி மருந்துகள் விற்பனைசெய்யப்படுவது மட்டுமல்ல, மருந்தகங்களில் நோய்களைக்கூறி மருந்து பெற்றுச்செல்கின்ற எதிர்மாறான விளைவுகளை தரக்கூடிய செயற்பாடுகளும் பெருமளவில் நடைபெற்று வருகின்றன என பொது மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பெற்றோருக்கான கல்வி விழிப்பூட்டல் கருத்தரங்கு

ஏழாலை,

சென்.மேரிஸ் வித்தியாலயத்தின் பெற்றோருக்கான கல்வி விழிப்பூட்டல் கருத்தரங்கு அதிபர் எஸ்.கியூ.பி. மொறாயஸ் தலைமையில் அண்மையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ்.கல்வி வலய வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. அ. வேதநாயகம் கலந்துகொண்டு 'பெற்றோருக்கான கல்வி விழிப்பூட்டல்' என்னும் தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்வில் யாழ். கல்வி வலய முறைசாராக் கல்வி ஆசிரிய ஆலோசகர், முறைசாராக் கல்வித் திட்ட அலுவலர் மற்றும் பெற்றோர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

துரித மீட்சித் திட்டத்தின் கீழ் வகுப்பறைகள் புனரமைப்பு

ஏழாலை,

வடக்கின் துரித மீட்சித்திட்டத்தின் கீழ் திருநெல்வேலி - முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் வகுப்பறைக் கட்டடங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டுவருகின்றன.

யாழ். கல்வி வலயப் பிரிவிலுள்ள இப் பாடசாலை வகுப்பறைக் கட்டடத்திற்கு திருத்த வேலைக்காக துரித மீட்சித் திட்டத்தினால் 46 இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மீசாலை பரணி பாலர் பாடசாலை மாணவர்களின் மெய்வல்லுநர் போட்டியின் போது சிறார்களின் உடற்பயிற்சி நிகழ்வையும் கலந்துகொண்ட விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Yaazh Osai
யாழ் ஓசை
2011 மே 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை
இல.117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021-2222730, Fax: 0212222730
E-mail-jaffna@virakesari.lk

இனப் பிரச்சினைக்கு வித்திட்ட மொழிப் பிரச்சினைக்கு தீர்வு எப்போது?

இலங்கையில் இனப் பிரச்சினை தோற்றம் பெற்றதற்கான மூல காரணத்தை தேடுபவர்களுக்கு விடையாகக் கிடைப்பதுதான் மொழிப் பிரச்சினை.

இந்த நாட்டில் அமுல்படுத்தப்பட்ட தனிச் சிங்களச் சட்டம்தான் தமிழ் மக்களை கொதித்தெழச் செய்ததுடன் பல்வேறு போராட்டங்களுக்கும் வித்திட்டது. அகிம்சைப் போராட்டங்கள் வெற்றியைத் தராத நிலையில் அவை பின்னாளில் வன்முறையாக மாறியதும் அதன் விளைவாக ஆயிரக் கணக்கான உயிர்கள் பலி கொள்ளப்பட்டதும் நாம் அறிந்த விடயங்கள்.

இந்த இனப் பிரச்சினையின் விளைவாகத் தோற்றம் பெற்ற போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுவிட்ட போதிலும் இனப் பிரச்சினைக்கோ அல்லது அதன் அடிப்படையான மொழிப் பிரச்சினைக்கோ தீர்வு எட்டப்படாமை கவலைக்குரியதாகும்.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கில் அரசாங்கத்துக்கும் தமிழ் அரசியல் கட்சிகளுக்குமிடையில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்ற நிலையில் அதற்குச் சமாந்தரமாக மொழிப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாகவும் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும்.

அந்தவகையில்தான் நேற்று முன்தினம் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவைச் சந்தித்துள்ள இந்து மற்றும் கிறிஸ்தவ மதகுருமாரும் வடக்கு சிவில் உரிமை செயற்பாட்டாளர்களும் சிவில் யுத்தத்திற்கு வித்திட்ட மொழிப் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளனர்.

அரச கருமம் மொழிக் கொள்கை அமுல்படுத்தப்பட்டதன் காரணமாக தமிழ் பேசும் மக்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகளை அமைச்சரிடம் எடுத்துக் கூறிய இக் குழுவினர் அது தொடர்பில் தீவிர கவனம் செலுத்துமாறும் அமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சிங்களமும் தமிழும் அரச கருமமொழிகளே என்பதை இலங்கையின் அரசியலமைப்பு ஏற்றுக் கொண்டுள்ள போதிலும் அதனை அமுல்படுத்த முடியாமல் போனதன் விளைவாகவே 1958 முதல் இன்று வரை பல்வேறு போராட்டங்கள் தோற்றம் பெற்றன என்பதையும் இக் குழுவினர் அமைச்சரிடம் எடுத்துக் கூறியுள்ளனர்.

இதேவேளை கொழும்பு பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழி திணைக்களம் ஒன்றை நிறுவுமாறும் அதன் மூலம் சிங்கள மாணவர்கள் தமிழ் மொழியைக் கற்பதற்கு வழிவகுக்க முடியும் எனவும் இச் சந்திப்பில் கலந்து கொண்ட யாழ்ப்பாண பல்கலைக்கழக பேராசிரியர் பி.பாலசுந்தரம்பிள்ளை அமைச்சரிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

இக் கலந்துரையாடலின் போது, உயர் கல்வி பயிலும் மாணவர்களுக்கு மொழி தொடர்பான கற்கை நெறிகளை பயில்வதற்கு வாய்ப்பளித்தல், மொழி ஆய்வுகூடம் ஒன்றினை அமைத்தல், மொழிகளைக் கற்றுக் கொள்ள ஆர்வமுடையவர்களின் நலன்கருதி அரச கருமமொழி திணைக்களத்தினால் நூலகம் ஒன்றை அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு செயற்திட்டங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மிக முக்கியமான விடயம் ஒன்று தொடர்பில் அமைச்சருக்கும் இக் குழுவினருக்குமிடையில் இடம்பெற்ற சந்திப்பு வரவேற்கத்தக்கதாகும். இச் சந்திப்பில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை நிறைவேற்றுதற்கான உடனடி நடவடிக்கைகளை அமைச்சர் வாசுதேவ நாணயக்கார முன்னெடுப்பார் என்ற நம்பிக்கை எமக்கிருக்கிறது.

இலங்கையின் மொழிப் பிரச்சினை என்பது வரலாறு நெடுகிலும் ஒரு தொடர் கதையாக இருந்து விடக் கூடாது என்பதே அனைவரதும் விருப்பமாகும். வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் பேசும் மக்கள் இன்றும் கூட பல்வேறு அரச அலுவலகங்களில் சிங்கள மொழி மூலமாகவே தமது கருமங்களை ஆற்ற வேண்டியிருப்பதும் விண்ணப்பப் படிவங்களைக் கூட சிங்கள மொழியிலேயே பூர்த்தி செய்ய வேண்டியிருப்பதும் துரதிஷ்டவசமானதாகும்.

ஒரு மனிதன் தனக்குத் தெரிந்த மொழியிலேயே தனது காரியங்களை ஆற்றுவது என்பது அவனது அடிப்படை உரிமையாகும். அந்த அடிப்படை உரிமையை பெற்றுக் கொள்வதற்கான பூரண சுதந்திரத்தை வழங்க வேண்டியது அரசாங்கத்தினதும் சம்பந்தப்பட்ட அமைச்சரினதும் பொறுப்பாகும் என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

அன்று தொடக்கம் இன்று வரை துரோகம் இழைக்கும் கருணாநிதி

தமிழக முன்னாள் முதல்வர் கருணாநிதி அன்று முதல் இன்றுவரை ஈழத்தமிழர்களுக்கு துரோகம் இழைத்து வருகிறார் என்று சாரப்பட பழ. நெடுமாறனால் எழுதப்பட்ட கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.

இந்த உடன்பாட்டை ஆதரித்து அறிக்கை வெளியிடும்படி இந்திய உளவுத்துறை அதிகாரிகள் தன்னை வற்புறுத்தினர் எனவும் அவ்வாறு தான் அறிக்கை வெளியிட்டால் தி.மு.க. தலைவர் கருணாநிதி தன்னைக் கண்டிப்பார் என வும் கூறியுள்ளார். அத்துடன், உளவுத்துறையினரின் வற்புறுத்தலை மறுத்துள்ளார். இதன்போது அந்த அதிகாரிகள் தி.மு.க. தலைவர் ஒருபோதும் உங்களைக் கண்டித்து அறிக்கை விடமாட்டார் என உறுதி கூறினர். அவர்கள் கூறியதில் அமிர்தலிங்கத்திற்கு நம்பிக்கையில்லை. எனவே தி.மு.க. தலைவர் கருணாநிதி யை நேரில் சந்தித்துப் பேசினார்.

ராஜீவ்-ஜெயவர்த்தன உடன்பாட்டை ஆதரிக்குமாறு கருணாநிதி வற்புறுத்தல்

அப்போது கருணாநிதி அவரிடம் பின் வருமாறு கூறினார்.

''தலைவர் செல்வா காலத்திலிருந்து நீங்களும் உங்களைப் போன்ற பல தலைவர்களும் ஈழத் தமிழர்களுக்காக எண்ணற்ற தியாகம் செய்திருக்கிறீர்கள். ஆனால், நேற்றுப் பிறந்த பிரபாகரன் உங்களையெல்லாம் புறந்தள்ளி தன்னை முன்நிறுத்தப் பார்க்கிறான். இதை ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது. இந்திய இராணுவம் இலங்கை சென்றுவிட்டது. இன்னும் ஒரு வார காலத்தில் பிரபாகரனுக்கு சரியான பாடத்தைப் புகட்டும். நீங்கள் எதைப்பற்றியும் கவலைப்படாதீர்கள். இந்த உடன்பாட்டை வரவேற்று அறிக்கைக் கொடுங்கள்'' என்று கருணாநிதி கூறினார். அதன் பிறகே அமிர்தலிங்கம் அத்தகைய அறிக்கையை விடுத்துள்ளார்.

ராஜீவ்-ஜெயவர்த்தனா உடன்பாட்டை இதுவரை தி.மு.க. தலைவர் கருணாநிதியோ, அவரது கட்சியின் செயற்குழுவோ, பொதுக்குழுவோ கண்டிக்கவில்லை என்பதை நாம் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். இந்த உடன்பாடு செய்வதற்கு முன்னாலேயே இந்திய உளவுத்துறை உயர் அதிகாரிகள் கருணாநிதியைச் சந்தித்து அவரது சம்மதத்தைப் பெற்றுவிட்டார்கள் என்பதுதான் உண்மை. இந்திய இராணுவம் விடுதலைப் புலிகளின் முக்கியத் தலைவர்களைத் தேடித் தேடி அழிப்பு வேட்டை நடத்திய காலத்தில் அதிலிருந்து தப்பி பாலசிங்கமும் அவருடைய துணைவியாரும் பெங்களூரில் தலைமறைவாக வாழ்ந்து கொண்டிருந்த னர்.

புலிகள் ஆயுதங்களை கையளிக்குமாறு பாலசிங்கத்திடம் கருணாநிதி வலியுறுத்து

அப்போது 1988 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் தமிழக முதல்வர் கருணாநிதியிடமிருந்து ஓர் அவசரச் செய்தி பாலசிங்கத்திற்கு கிடைத்தது. தமிழ் நாட்டில் அப்போது இரகசியமாக இயங்கிக்கொண்டிருந்த புலிகள் மூலமாக இந்தச் சந்திப்பிற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. பாலசிங்கத்தை சென்னையில் தனது அலுவலகத்திலோ அல்லது வீட்டிலோ சந்திக்க கருணாநிதி விரும்பவில்லை. சேலத்தில் சந்திக்கும்படி கூறினார். அதற்கிணங்க சேலத்தில் ஒரு விடுதியில் நள்ளிரவில் யாரும் அறியாதவண்ணம் மிக இரகசிய மாக நடந்த இந்தச் சந்திப்பில் கருணாநிதியுடன் அவருடைய மருமகன் முரசொலி மாறனும் உடனிருந்தார்.

தமிழீழத்தில் நிலவும் போர் சூழ்நிலை குறித்தும் விடுதலைப் புலிகளின் தலைமை எந்த நேரத்திலும் அழிக்கப்படும் ஆபத்து இருப்பது குறித்தும் தனக்கு மிகுந்த கவலையும் வேதனையும் ஏற்பட்டிருப்பதாகக் கருணாநிதி கூறினார். வலிமை வாய்ந்த இந்திய இராணுவத்துடன் மோதி அழிந்து போவதைவிட ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டுச் சரணடைவது நல்லது என்றும் தமிழீழத் தனிநாடு கோரிக்கையைக் கைவிட்டு மாகாண அரசுத் திட்டத்தை ஏற்றுக் கொள்வதே சிறந்ததாகும் என்றும் அறிவுரை கூறினார். அத்துடன், அவர் நிற்கவில்லை. ''தி.மு.க.வைத் தடைசெய்ய இந்திய அரசு சட்டம் கொண்டு வந்தபோது இலட்சியமா? கட்சியா? என்ற கேள்வி எழுந்தது. அப்போது கட்சியைக் காப்பாற்றுவது என முடிவு செய்து திராவிடத் தனிநாடு கோரிக்கையை நாங்கள் கைவிட்டதால்தான் இன்றைக்கு தமிழகத்தின் ஆட்சிபீடத்தில் அமர்ந்திருக்கிறோம் என்பதையும் எண்ணிப்பாருங்கள்'' என்று கூறினார்.

சரணாகதி என்ற பேச்சுக்கு இடமில்லை என புலிகள் கருணாநிதியிடம் எடுத்துரைப்பு

அவரது இந்தச் சந்திப்பின் உள்நோக்கம் என்ன என்பது பாலசிங்கத்திற்கும் அவருடன் சென்றிருந்த புலிகளுக்கும் புரிந்தது. பாலசிங்கத்துடன் வந்திருந்த மூத்த புலிகளின் உறுப்பினர் ஒருவர் இலட்சியத்திற்காகத்தான் இயக்கம் கண்டோம். இலட்சியத்தையே கைவிட்டால் இயக்கம் எதற்கு? இத்தனை பேர் உயிர்த்தியாகம் செய்தது எதற்காக? என்று கேட்டார். அவர் இவ்வாறு கூறியதும் கருணாநிதி கடும் கோபமடைந்தார்.

அப்போது பாலசிங்கம் குறுக்கிட்டுப் பின்வருமாறு கூறினார்:

'விடுதலைப் புலிகளின் வீரம் செறிந்த போரியல் மரபில் சரணாகதி என்ற பேச்சுக்கே இடமில்லை. பிரபாகரனும் அவரது தோழர்களும் உன்னத இலட்சியத் திற்காக உயிரைத் துறக்கவும் தயாராக இருப்பார்களேயன்றி எந்தச் சூழ்நிலையிலும் எதற்காகவும் சரணடைந்து இழிவைத் தேடிக்கொள்ளமாட்டார்கள். தமிழீழ சுதந்திரப் போராளிகளாக விளங்கும் விடுதலைப் புலிகள் அஞ்சா நெஞ்சம் படைத்த வீரர்கள். இலட்சிய உறுதி கொண்டவர்கள். எத்தகைய துன்பங்களையும் சுமந்து நின்று போராடும் திராணி படைத்தவர்கள். இந்திய இராணுவத்திற்கெதிராக நீண்ட கால கொரில்லாப் போரை நடத்துவதற்கு அவர்கள் உறுதிபூண்டு நிற்கிறார்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத் தமிழர் உரிமைகளை மீட்டெடுக்கும் அ.தி.மு.க. அரசின் நடவடிக்கைகளுக்கு ஆதரவு

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பாண்டியன்

சென்னை:

இலங்கைத் தமிழர்களின் உரிமைகளை மீட்டெடுப்பதற்காக அ.தி.மு.க. அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு ஆதரவாக இருப்போம் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தா. பாண்டியன் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில்,

தமிழகத்தின் முதல்வராக ஜெயலலிதா பொறுப்பேற்றவுடன் தேர்தல் அறிக்கையில் தந்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில் நலத் திட்டங்களை அறிவித்துள்ளார். இதனை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது.

குடும்ப அட்டை மூலம் அரிசி பெறுவோர் அனைவருக்கும் மாதம் 20 கிலோ அரிசி இலவசம், படித்த பெண்களின் திருமணத்துக்கு நிதியுதவியுடன் நான்கு கிராம் தங்கம் இலவசம் உள்ளிட்ட அறிவிப்புகளுக்கு பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். அதேபோல் சட்டம், ஒழுங்கு நிலைநாட்டப்படும் என்றும், பள்ளிக் குழந்தைகளுக்குப் பாதுகாப்பு பலப்படுத்தப்படும் என்றும் அறிவித்துள்ளதை வரவேற்கிறோம்.

மேலும் மின்வெட்டு பிரச்சினைக்கு தீர்வு காண முதல்வர் ஜெயலலிதா மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் வெற்றி பெற வாழ்த்துகிறோம்.

இலங்கைத் தமிழர்களின் மனித உரிமைகளை மீட்டுக் கொடுப்பதற்காகத் தமிழக அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கும் என்று முதல்வர் அறிவித்துள்ளார். இதற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தனது முழு ஆதரவைத் தெரிவித்துக் கொள்கிறது என்று தெரிவித்துள்ளார்.

ரஜனிக்கு சிறுநீரக கோளாறு தீவிர சிகிச்சை பிரிவுக்கு மாற்றம்

சென்னை:

சென்னை போரூர் ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவமனையில் நடிகர் ரஜனிக்கு 'டயாலிசிஸ்' சிகிச்சை நடந்தது. இதையடுத்து அவர் தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப் பட்டுள்ளார்.

அவரது சிறுநீரகங்கள் சரியாக செயற்படாததால், ரத்தம் சுத்திகரிக்கப்படுவதில் சிக்கல் எழுந்தது. இதையடுத்து ரத்த சுத்திகரிப்புக்காக அவருக்கு நேற்றுமுன்தினம் 'டயாலிசிஸ்' சிகிச்சை தரப்பட்டது. இதையடுத்து அவர் தீவிர சிகிச்சை பிரிவுக்கு மாற்றப் பட்டார்.

ஆனால், நேற்று முன்தினம் நள்ளிரவில் மருத்துவனை வெளியிட்ட செய்திக் குறிப்பில், மூச்சு விடுவதை எளிதாக்குவதற்காக தீவிர சிகிச்சைப் பிரிவில் அவர் அனுமதிக்கப்பட்டுள்ளார். தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட பிறகு அவரது உடல் நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

நுரையீரல், சிறுநீரகங்கள், இதயம் உட்பட பல்வேறு துறை சார்ந்த மருத்துவ நிபுணர்கள் மூலம் அவருக்கு தொடர்ந்து சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது என்று மட்டும் கூறப்பட்டுள்ளது.

சுவாசப் பாதை நோய்த் தொற்று, நிமோனியா காய்ச்சல் காரணமாக இரண்டு வாரங்களுக்கு முன்பு ரஜனிக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டது. இதையடுத்து அவர் மைலாப்பூரில் உள்ள இசபல் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பினார். ஆனால், மீண்டும் அதே மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று மீண்டும் வீடு திரும்பினார். எனினும், நுரையீரல் பாதிப்பின் விளைவால் ஏற்பட்ட நிமோனியா காய்ச்சல் காரணமாக கடந்த வெள்ளிக்கிழமை இரவு சென்னை போரூர் ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

அங்கு 7 ஆவது மாடியில் உள்ள தனி அறையில் அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. இதன்போது நுரையீரல் பாதிப்பு காரணமாக அவருக்கு அடிக்கடி மூச்சுத் திணறல் ஏற்பட்டு வந்ததாகவும் இதனால் ரத்தம் சுத்திகரிக்கப்படுவதில் எழுந்த சிக்கலையடுத்து நுரையீரலில் தேங்கியுள்ள நீரை அகற்ற சிறிய அறுவை சிகிச்சை செய்யப்பட்டதாக தெரிகிறது.

இந் நிலையில் சிறுநீரகங்களிலும் பிரச்சினை ஏற்பட்டதால் 'டயாலிசிஸ்' சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

1008 பெண்கள் சிறப்பு பிரார்த்தனை

இதனிடையே ரஜனிகாந்த் விரைவில் குணமடைய வேண்டி திருப்பூர் ஓம் சக்தி கோவிலில் 1008 பெண்கள் சிறப்பு பிரார்த்தனை செய்தனர். இத்துடன் 51 பக்தர்கள் தீர்த்தக்குடத்துடன் பாதயாத்திரையும் சென்றனர்.

திருப்பூர் மனித தெய்வம் ரஜனிகாந்த் மகளிர் சேவை மையம் மற்றும் தமிழ்நாடு ரஜனிகாந்த் பொது தொழிலாளர் சங்கம் நடத்திய இருவேறு நிகழ்வுகளில் ரசிகர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தமிழக தலைவர்களுடன் சோனியா தீவிர ஆலோசனை

புதுடில்லி:

தமிழக சட்டசபை தேர்தலில், காங்கிரஸுக்கு ஏற்பட்ட தோல்வி குறித்து, ஒவ்வொருவராக அழைத்து சோனியா ஆலோசனை மேற்கொண்டு வருகிறார். அதன்படி சோனியாவை தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணைய உறுப்பினர் கார்வேந்தன் சந்தித்து பேசினார்.

தமிழக சட்டசபை தேர்தலில், காங்கிரஸ் கட்சி மிகப்பெரிய தோல்வியை அடைந்தது. தலைமை தாங்கிய தங்கபாலுவில் ஆரம்பித்து, ராகுலின் நேரடி தேர்வாக நிறுத்தப்பட்ட வேட்பாளர்கள் வரை படுதோல்வி அடைந்தது அக்கட்சியின் தலைமைக்கு பெரும் அதிர்ச்சியை அளித்தது. இந் நிலையில், சட்டசபை தேர்தல் தோல்வி குறித்தும், தமிழகத்தில் காங்கிரஸ் கட்சியை பலப்படுத்துவதற்கு உண்டான நடவடிக்கைகள் குறித்தும், தமிழகத்தை சேர்ந்த முக்கிய காங்கிரஸ் தலைவர்களை அழைத்து, சோனியா ஆலோசனை நடத்தி வருவதாக தெரிகிறது. இதன்படி சோனியாவை மத்திய அமைச்சர் வாசன் சந்தித்து பேசினார். இதனைத்தொடர்ந்து முன்னாள் எம்.பி.யும், தற்போது தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணைய உறுப்பினராகவும் உள்ள கார்வேந்தனுக்கும் அழைப்பு வந்ததையடுத்து, அவரும் சோனியாவை சந்தித்தார்.

தி.மு.க. அரசு கொண்டு வந்த சமச்சீர் கல்வி புத்தகங்களை அழிக்க உத்தரவிட்டதாக தகவல்

பலகோடி ரூபா அரச பணம் வீணாவதாக விசனம்

முந்தைய தி.மு.க. அரசு மாணவர்களின் நலன் கருதி கொண்டுவந்த சமச்சீர் கல்வி புத்தகங்களை அழிக்க அ.தி.மு.க. அரசு உத்தரவிட்டுள்ளதாக பரபரப்பு தகவலொன்று வெளியாகியுள்ளது.

இதனால் புதிய புத்தகங்கள் கிடைக்க தாமதமாகும் என்பதுடன் பலகோடி ரூபாய் அரசு பணம் வீணடிக்கப்படும் நிலையும் ஏற்பட்டுள்ளதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது.

தி.மு.க. அரசு கடந்த ஆண்டு, 1 ஆம் வகுப்பு மற்றும் 6 ஆம் வகுப்புக்கு சமச்சீர் கல்வியை அறிமுகப்படுத்தியது. இதனைத் தொடர்ந்து இந்த கல்வி ஆண்டில் 2 ஆம் வகுப்பு முதல் 11ஆம் வகுப்பு வரை சமச்சீர் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டு புத்தகங்கள் விநியோகிக்கப்பட்டு வந்தது. இப் புத்தகங்கள் இணையதளங்களிலும் வெளியாகி உள்ளன.

இந்நிலையில் திடீரென சில பகுதிகளில் சமச்சீர் கல்வி புத்தக விநியோகத்தை

நிறுத்துமாறு அரசிடமிருந்து வாய்மொழி உத்தரவு வந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. தமிழ் மற்றும் சமூக அறிவியல் பாடங்களில் செம்மொழி மாநாடு மற்றும் முதலமைச்சராக இருந்த கலைஞரின் வாழ்க்கை வரலாறு ஆகியவை இருப்பதால், இதை நீக்குவதற்கு உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

மேலும் ஏற்கனவே அச்சடிக்கப்பட்ட புத்தகங்களை அழிக்கவும் உத்தரவு வந்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைப்பாமாலை எனும் பாடல்கள் இறுவட்டு வெளியீடு

தெல்லிப்பழை, அளவெட்டி - கும்பழாவளை பிள்ளையார் ஆலயத்தின் பெருமைகளைப் பேசும் கும்பழாவளை ஐங்கரனின் இசைப்பாமாலை வெளியீட்டு நிகழ்வு கடந்த புதன் கிழமை இரவு 9.00 மணிக்கு ஆலய முன்றலில் இடம்பெற்றது.

அளவெட்டியைச் சேர்ந்த செல்லையா சிறிகாந்தனின் தயாரிப்பில் உருவாக்கப்பட்டுள்ள இவ் இசைப்பேழையின் பாடல் வரிகளை அருட்கவி விநாசித் தம்பிப் புலவர், ஆசிரியர் மு. செல்லையா, நோர்வே வாழ் அளவெட்டி மைந்தன் இளையதம்பி யோகேந்திரன் ஆகியோர் பாடியுள்ளனர்.

இசையமைப்பினை தென்னிந்திய இசையமைப்பாளர் வீரமணி கண்ணன் செய்திருந்தார். பாடல்களை தென்னிந்திய பிரபல இசைப்பாடகர்கள் உன்னிகிருஷ்ணன், உன்னி மேனன், சீர்காழி சிவசிதம்பரம், மது பாலகிருஷ்ணன், பாடகிகள் சுவேதா, திருமதி ரூபா ஆகிய பாடகர்கள் பாடியுள்ளனர்.

உள்நாட்டு...(தொடர்ச்சி)

யாழ். வரும் அமைச்சர் அரச அலுவலகங்கள் பலவற்றைத் திறந்து வைக்கின்றார். யாழ். அரச செயலகத்திற்கு முன்னால் பழைய பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள சுற்றுலா விடுதியை காலை 9.00 மணிக்குத் திறந்து வைக்கின்றார். காலை 10.00 மணிக்கு வலி. தெற்குப் பிரதேச சபையின் புதிய கட்டடத் தொகுதியை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு திறந்து வைக்கின்றார்.

பிரதேச செயலர் திருமதி மஞ்சுளா தேவி சதீசன் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் கலந்து கொள்கின்றார்.

மதியம் 2.00 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் யாழ். மாவட்ட அபிவிருத்திகள் தொடர்பாக அரச அதிகாரிகளுடனான கலந்துரையாடலில் கலந்து கொள்கின்றார்.

யுத்தத்தின்...(தொடர்ச்சி)

துள்ளார்.

துக்கதினமான மே 18 இன் 2 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றபோது உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும்அங்கு அவர் உரையாற்றுகையில்,

வன்னி இறுதி யுத்தம் நடைபெற்ற காலத்தில் அங்கு நடைபெற்ற சம்பவங்கள், உயிரிழப்புக்கள், அங்வீன இழப்புக்கள், பட்டினிச்சாவுகள் போன்ற எவையும் நடைபெறவில்லை என்ற மாயை உருவாக்கப்பட்டுள்ளது. அதனை வெளிப்படுத்துபவர்களுக்கு சலுகைகளையும் கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனால், இவை அனைத்தும் தவிடுபொடியாக்கப்பட்டு அங்கு நடைபெற்ற அனைத்து விடயங்களும் உலக நாடுகளில் வெளிப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

முள்ளிவாய்க்காலில் எம்மால் இறைவனிடமே முறையிட சந்தர்ப்பம் கிடைத்தது. இன்றும் அப்படியான சந்தர்ப்பங்களே கிடைக்கின்றன. எனவே, நாம் இறைவனிடத்தே முறையிட வேண்டும். விசேடமாக, இனங்களும் மதங்களும் மனங்களும் இணைந்திடவேண்டி சமாதானம் மண்ணில் மலர இறைவனிடத்தில் முறையிடுவோம் என தெரிவித்தார்.

இராணுவப்...(தொடர்ச்சி)

தொலைபேசி மூலம் முறையிட்டபோது அவரின் பணிப்புக்கமைய விந்தன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாகத் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு அனுப்பிவைத்த செய்திக்குறிப்பில், கடந்த 17 ஆம் திகதி பிற்பகல் 4.30 மணியளவில் அரியாலை- புங்கன்குளம் வீதியில் அமைந்துள்ள தனது வீட்டிற்கு அருகிலுள்ள ஒழுங்கையில் இராணுவப் புலனாய்வாளர்கள் மூவர் சைக்கிளில் வந்து அங்குவந்த மக்களிடம் இதுதானா விந்தனின் வீடு எனக் கேட்டுள்ளனர். எத்தனை மணிக்கு வெளியே போவார்; வருவார் என விசாரணை செய்துள்ளார்கள் என குறிப்பிட்டுள்ளார்.

இப்புலனாய்வாளர்களை யாழ். அரசியல்கட்சி ஒன்றின் அலுவலகத்திலும், யாழ். முக்கியஸ்தர் ஒருவரின் முதல்வரின் வீட்டிலும் பல தடவைகள் பார்த்திருப்பதாக விந்தன் தெரிவிக்கின்றார்.

கடந்த 12 வருடங்களாக யாழ்ப்பாணத்தில் வசித்துவரும் தான் எச்சந்தர்ப்பத்திலும் மக்களுக்கோ முப்படையினருக்கோ நாட்டுக்கோ விரோதமாக நடந்ததில்லை எனவும் தனக்கு யாரிடமும் தனிப்பட்ட விரோதமும் இல்லை எனவும் கூறும் அவர், நாட்டில் சமாதானச் சூழ்நிலை ஏற்பட்டுள்ள இவ்வேளையில் ஆளும் கட்சியினரின் இத்தகைய செயற்பாடுகள் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல எனவும் சுட்டிக்காட்டுகின்றார்.

இதேவேளை, கடந்த மாதம் 28 ஆம் திகதி நடந்த யாழ். மாநகர சபையின் மாதாந்தப் பொதுக்கூட்டத்தில் ஆறு இராணுவப் புலனாய்வாளர்களால் அச்சுறுத்தப்பட்டமை மற்றும் தனக்கெதிராக மாநகர சபை உறுப்பினர்களின் மேசைகளில் அநாமதேய துண்டுப்பிரசுரங்களைப் பரப்பிவைத்தமை அனைத்தும் ஆளும் கட்சியினரால் அரங்கேற்றப்பட்டவை என தாம் சந்தேகிப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனிடம் விந்தன் தெரிவித்துள்ளார். மேலும், இது தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழு யாழ். செயலகத்திலும் நேற்று முறைப்பாடு செய்துள்ளார்.

யாழ். ஊரெழுவை...

இலங்கை பூர்வீகத்தைக்கொண்டவர். அவரது பாட்டனார் யாழ்ப்பாணம் ஊரெழுவை சேர்ந்தவர். இவர் இலங்கையில் ஏற்பட்ட சுனாமி தாக்கத்தின் பின்னர் 2005 ஆம் ஆண்டு இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார். அப்போது சிங்கப்பூரின் கல்வி அமைச்சராக விளங்கியமை குறிப்பிடத்தக்கதாகும்.

பொருளியல் பட்டதாரியான தர்மன் சண்முகரட்ணம் கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தில் முதுமாணி பட்டத்தை பெற்றவராவார். அத்துடன் ஹவார்ட் பல்கலைக்கழகத்தில் பொது நிர்வாகத்துறையில் முதுமாணிப் பட்டம் பெற்றவர். தர்மன் சண்முகரட்ணத்தின் தந்தையான கே. சண்முகரட்ணம் மருத்துவ பேராசிரியாராவார்.

சிங்கப்பூரில் கடந்த ஏழாம் திகதி பாராளுமன்ற தேர்தல் நடைபெற்றது. ஆளும் மக்கள் செயல் கட்சி வெற்றிபெற்று மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது. சிங்கப்பூரின் முதல் பிரதமரும் அந்நாட்டின் தந்தை என அழைக்கப்படுபவருமான லீ. குவான் யூ அரசியலில் இருந்து ஓய்வு பெறப்போவதாக அறிவித்து அமைச்சரவையில் இருந்து விலகினார்.

இதேபோன்று மற்றுமொரு முன்னாள் பிரதமரான கோ சோக் தாங்குங் அமைச்சரவையிலிருந்து விலகினார். இதனையடுத்து 14 பேர் கொண்ட புதிய அமைச்சரவையை பிரதமர் லீ ஹீசின் லூங்ன் உருவாக்கினார். இவர் முன்னாள் பிரதமர் குவான் யூவின் மகனாவார்.

புதிய அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள 14 பேரில் ஏழு பேர் புதிய முகங்கள். தமிழ் வம்சாவளியை சேர்ந்த கே. சண்முகம் சட்டத்துறை அமைச்சராக இருந்தவர். இவருக்கு தற்போது மேலதிகமாக வெளியுறவுத் துறை அமைச்சுப் பதவி வழங்கப்பட்டுள்ளது.

ராஜீவ்...(தொடர்ச்சி)

இதன்போது முதல்வர் ஜெயலலிதாவுக்கும் நாம் தமிழர் கட்சி சில கோரிக்கைகளை முன்வைத்து தீர்மானம் நிறைவேற்றியது. அதன் விபரம் வருமாறு,

இலங்கையில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

பத்தாயிரக்கணக்கான தமிழப் பெண்கள் விதவையாக்கப்பட்டுள்ளனர். தெற்காசிய வல்லாதிக்கங்களின் பேராதரவுடன் நடத்தப்பட்ட இனப் படுகொலைப் போரில் தமிழினம் சிதைக்கப்பட்டு, சிதறடிக்கப்பட்டுள்ளது. தமிழ்நிலம் ஆக்கிரமிக்கப்பட்டு வருகிறது. இன்னமும் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் முள்வேலி முகாம்களுக்குள் அடிப்படை வசதிகள் ஏதுமின்றி வாழ்ந்து வருகின்றனர். அவர்களுக்கும், அங்கிருந்து வெளியேற்றப்பட்ட மக்களுக்கும் தேவைப்படும் அத்தியாவசிய உதவிகளை அளிக்க முன்வரும் சர்வதேச தன்னார்வ தொண்டு நிறுவனங்களை தமிழர் பகுதிகளுக்குள் அனுமதிக்க அரசு மறுத்து வருகிறது. அவர்களுக்கு நிதி அனுப்பினாலும் அதனை அனுமதிக்க மறுத்து வருகிறது.

தமிழ் மக்களின் காணிகள் (நிலங்கள்) பறிக்கப்பட்டு தமிழ் மண்ணில் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. தமிழர் வாழ்ந்த நகரங்களின் பெரும் பகுதிகள் இன்று இராணுவப் பகுதிகளாக அறிவிக்கப்பட்டு, பெரும் முகாம்களும், இராணுவக் குடியிருப்புகளும் கட்டப்படுகின்றன. பிழைக்க வழியேதுமற்ற நிலையில், மிக ஆபத்தான கண்ணி வெடி அகற்றலில் பல்லாயிரக்கணக்கான தமிழப் பெண்கள் தாங்களாகவே முன்வந்து ஈடுபட்டு வருகின்றனர். மொத்தத்தில் வாழ வழியுமின்றி, உழைக்க காணியுமின்றி அரசின் திட்டமிட்ட இன அழித்தலிற்கு இன்றளவும் ஆட்படுத்தப்பட்டு வருகிறது.

இந்தச் சூழலில்தான், தமிழர்களுக்கு எதிரான போரில் மக்கள் கொல்லப்பட்டது தொடர்பாக விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று ஐ.நா.பொதுச் செயலர் பான் கீ மூன் அமைத்த நிபுணர் குழு பரிந்துரையளித்துள்ளது.

ஐ.நா.நிபுணர் குழுவின் பரிந்துரையின்படி, சுதந்திரமான பன்னாட்டு விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை உலக அளவில் எழுந்துள்ளது. அந்தக் கோரிக்கைக்கு வலுச் சேர்க்கும் வகையில் தமிழக அரசு, இலங்கையில் நடந்தது தமிழினப் படுகொலையே என்றும், அந்த மக்களுக்கு அரசியல் ரீதியான நியாயம் கிடைக்க பன்னாட்டு விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும், அதற்கு இந்திய அரசு முழுமையாக துணை நிற்க வேண்டும் என்றும் கோரும் விரிவான தீர்மானத்தை தமிழக சட்டப் பேரவையில் நிறைவேற்ற வேண்டும் என்று தமிழக முதலமைச்சருக்கு நாம் தமிழர் கட்சி வேண்டுக்கோள் விடுக்கிறது.

ஈழத்தில் கால் நூற்றாண்டுக்கு மேலாக நடந்துவந்த இனப் படுகொலைப் போர் முடிந்துவிட்டதாக அந்நாட்டு அரசு அறிவித்தாலும், இன்னமும் அதன் நடவடிக்கைகள் பல்வேறு வடிவங்களில் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றனது. இந்த நிலையில், போரின் போது தாய்த்தமிழ் மண்ணான நமது தமிழ்நாட்டிற்கு அகதிகளாக வந்து தஞ்சமடைந்த ஈழத் தமிழர்கள் மிகவும் கேவலமாக நடத்தப்பட்டு வருகின்றனர்.

அவர்கள் வாழ்க்கை அவலம் நிறைந்ததாக உள்ளது. அவர்களை தமிழக காவல் துறையின் கியூ பிரிவு காவல் துறையினர் இழிவுபடுத்துகின்றனர். அவர்கள் வெளியில் சென்று பணி புரிய சுதந்திரம் அளிக்கப்படுவதில்லை. அவர்களின் பிள்ளைகள் விரும்பும் கல்வி பயில வாய்ப்பும் இல்லை, வசதிகளும் இல்லை. மொத்தத்தில் ஐ.நா.மனித உரிமைப் பிரகடனத்தின் அனைத்து உரிமைகளும் மறுக்கப்பட்டவர்களாக அம்மக்கள் நடத்தப்படுகிறார்கள். இந்நிலையை 3 ஆவது முறையாக பதவியேற்றுள்ள தமிழக முதலமைச்சர் இதை மாற்றிட வேண்டும். அவர்களும் கௌரவமான ஒரு வாழ்க்கை நடத்திட எல்லா விதத்திலும் உதவி புரிந்திட வேண்டும்.

தமிழ்நாட்டிற்கு அகதிகளாக வந்த ஈழத் தமிழர்கள் பலரை ஐயத்தின் பேரில் வழக்கேதுமின்றி, வழக்கு இருந்தாலும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அவர்களை நீதிமன்றத்தில் நிறுத்தாமலும், நீதிமன்றத்தில் அவர்கள் பிணை விடுதலை பெறுவதை தடுப்பது உள்ளிட்ட சட்ட ரீதியான உரிமைகளை மறுத்து, சிறப்பு முகாம் என்ற பெயரில் அநியாயமாக சிறைப்படுத்தி வைத்திருக்கின்றனர்.

அவர்களை, நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்து அல்லது விடுதலை செய் என்று நாம் தமிழர் உள்ளிட்ட தமிழத் தேச அரசியல் இயக்கங்கள் பலவும் பல முறை போராட்டம் நடத்தியுள்ளன. அதன் விளைவாக 60க்கும் மேற்பட்டோர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். ஆயினும் இன்னும் சிலர் பூந்தமல்லி, செங்கல்பட்டு சிறப்பு முகாம்களில் சிறைப்படுத்தி வைக்கபட்டுள்ளனர். இந்த சிறைப்படுத்தல் சட்ட விரோதமானது, மனித உரிமைகளுக்கு எதிரானது. எனவே இதற்கு மேலும் அவர்களை சிறையில் வைத்திருக்காமல் உடனடியாக விடுதலை செய்து, இதர முகாம்களில் உள்ள அவர்களின் உறவினர்களோடு வாழ தமிழக அரசு ஆணையிட வேண்டும் என்று நாம் தமிழர் இயக்கம் தமிழக அரசிற்கு கோரிக்கை விடுக்கிறது.

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தூக்கு தண்டனை உறுதி செய்யப்பட்ட அறிவு என்கிற பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகியோரும், ஆயுள் தண்டனை உறுதி செய்யப்பட்ட நளினி, ரவி, ராபர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகியோரும் வேலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

1991ஆம் ஆண்டு கைது செய்து சிறை அடைக்கப்பட்ட இவர்கள் அனைவரும் 20 ஆண்டுகளாக தொடர்ந்து சிறையில் உள்ளனர். நளினி, ரவி, ராபர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகிய ஆயுள் தண்டனைக் கைதிகள் சிறைவாச விதிகளின்படி தங்களை விடுவிக்க வேண்டும் என்றும், அதற்குத் தாங்கள் தகுதியானவர்களே என்றும் நீதிமன்றம் சென்று சட்ட ரீதியாக நிரூபித்தும் உள்ளனர்.

ஆனால் தமிழக அரசு கூட்டணி அரசியல் தர்மம் என்ற பெயரில் இல்லாத பொல்லாத காரணங்களைக் கூறி, நியாயமாக அவர்கள் பெறக்கூடிய விடுதலையை தடுத்து வந்தது. இந்த நிலை தொடர்வது மானுட மனப்பாங்கிற்கு உகந்ததல்ல. மகாத்மா காந்தி படுகொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்ற காந்தியை சுட்டுக்கொன்ற நாதுராம் கோட்சேயின் தம்பி-கோபால் கோட்சே விடுவிக்கப்பட்டு புனேயில் வாழ்ந்து வருகிறார். எனவே ஆயுள் தண்டனை என்ற காரணத்தைக் காட்டி எந்த ஒரு குற்றவாளியையும் நிரந்தரமாக சிறைப்படுத்தி வைத்திருப்பது சிறைப்படுத்தலின் அடிப்படையாகத் திகழும் தத்துவத்திற்கு முரணானது ஆகும்.

எனவே இந்த நால்வரையும் விடுதலை செய்வதில் அரசுக்கு ஆட்சேபனை ஏதுமில்லை என்பதை நீதிமன்றத்திற்குத் தெரிவித்திடல் வேண்டும். அதன் மூலம் மனிதாபிமானத்தை தமிழக அரசு நிலைநிறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

குளிர்காலத்தில் இதய நோயாளிகளே உஷார்!



(சென்ற வாரத் தொடர்ச்சி...)

இடம் மாறலாமா?

குளிர் அதிகம் உள்ள டெல்லி, பெங்களூர் போன்ற இடங்களில் இருந்து சென்னை, கொல்கத்தா, மும்பை போன்ற இடங்களுக்கு மாறினால், இதய பாதிப்பில் இருந்து தப்பிவிடலாமா என்று கேட்கலாம். வெப்ப இடங்களுக்கு சென்றால் பாதிப்பு வரவே வராது என்று சொல்லமுடியாது. குறிப்பிட்ட இடத்தில் உள்ள வானிலையில் பழக்கப்பட்டவர்கள் வேறு இடங்களுக்கு சென்றால் அங்கு 'பொடி க்ளொக்' சீராக சில மாதம் பிடிக்கும். அந்த காலகட்டத்தில் வைரஸ் தொற்று நோய் மூலம் இதயப் பாதிப்புள்ளவர்களுக்கு பிரச்சினை வரலாம். இருக்கும் இடத்திலேயே பாதுகாப்பாக, டாக்டர் சொற்படி நடப்பதே நல்லது.

யாருக்கு பாதிப்பு அதிகம்?

அறுபது வயதைக் கடந்தவர்கள் பொதுவாகவே குளிர் காலத்தில் அதிகாலையில் எழுவது, வேலை செய்வது, வெளியில் வாக்கிங் போவது போன்றவற்றை 'மூட்டை' கட்டி வைக்க வேண்டும்.

சர்க்கரை நோய், இரத்த அழுத்தம் இருப்பவர்கள் குளிர் காலத்தில் குளிரில் எந்த வேலையையும் வைத்துக்கொள்ளக் கூடாது. அதிகாலையில் எழுந்து போகும் பழக்கத்தை குளிர்காலம் போகும் வரை மாற்றிக்கொள்ள வேண்டும்.

தடுக்க முடியாதா?

குளிர் காலத்தில் குளிரைத் தடுக்க முடியாது. ஆனால், இதயப் பாதிப்பைத் தவிர்க்க சில நடைமுறைகளைக் கடைபிடிக்க வேண்டும். அப்படிச் செய்தால், இதயப் பாதிப்பில் இருந்து தப்பிவிடலாம்.

நீங்கள் உடற்பயிற்சி செய்பவராக இருக்கலாம். குளிர்காலத்திலும் அதிகாலையில் செய்யவேண்டிய அவசியம் இல்லை. வெயில் வந்தவுடன் செய்யலாம்.

காய்கறிகள், பழங்கள் அதிகம் உணவில் சேர்க்க வேண்டும். குளிர்பானங்களை விட அதிக தண்ணீர் குடிக்க வேண்டும்.

குளிர் பருவம் வரை, டாக்டரின் ஆலோசனை மிகவும் முக்கியம். அப்போது தான் இரத்த அழுத்தம் நோர்மலாக இருக்கும்.

100ஐ தாண்டினால்...

இரத்த ஓட்டம் ஏற்படுத்த இதய சுருக்கியக்கத்தின் போது எவ்வளவு அழுத்தம் உள்ளது என்பதை அறிவதுதான் 'சிஸ்டாலிக் பிளட் பிரஷர்' இது 100 ஐ தாண்டக் கூடாது. எதுவும் சாப்பிடாமல் இருக்கும்போது எடுக்கப்பட்ட சர்க்கரை அளவு 100 மில்லியைத் தாண்டக்கூடாது.

எல்.டி.எல்., கொலஸ்ட்ரால் (கெட்ட கொழுப்பு) 100 தாண்டக்கூடாது. அதுபோல, ட்ரை கிளிசரைட்ஸ் 100 ஐ தாண்டக் கூடாது. அதனால், குளிர் காலத்தில் டாக்டரின் ஆலோசனைப்படி பரிசோதனை செய்து மிகவும் உஷாராக இருப்பது முக்கியம்.

எக் ஐஸ்கிரீம்

தேவையான பொருட்கள்:

ரின்பால் - ஒரு ரின், பால் - 1 1/2 போத்தல், தண்ணீர் -ஒரு தம்ளர், சீனி - 1/4 கிலோ கிராம், ஜெலற்றின் - ஒரு தேக்கரண்டி, வனிலா - 2 மேசைக்கரண்டி, கலரிங் - ஒரு தேக்கரண்டி, முட்டை - 2, பனானா எசன்ஸ் - ஒரு தேக்கரண்டி, சிறிதாக வெட்டிய கஜூ - 100 கிராம், கொதிநீர் - 1/2 தம்ளர், கஸ்ராட் பவுடர் - ஒரு தேக்கரண்டி.

செய்முறை:

கஸ்ராட் பவுடரை 2 மேசைக்கரண்டி தண்ணீர் விட்டுக் கரைத்துக் கொள்க. ஜெலற்றீனைப் பாத்திரத்திலிட்டு கொதிநீர் விட்டு கரைத்து வைத்துக் கொள்க.

முட்டைகளைப் பாத்திரத்தில் உடைத்து விட்டு வனிலாவும் தண்ணீரும் சேர்த்து நன்றாக அடித்துவைத்துக் கொள்க.

பாத்திரத்தில் பாலையூற்றிக் கொதிக்க வைத்து நன்றாகப் பொங்கிக் கொதித்ததும் சீனி, ரின்பால் என்பவற்றைச் சேர்த்து சீனி கரையும் வரை காய்ச்சிக் கரைத்த கஸ்ராட் சேர்த்து இறக்கிக் கொள்க.

பின்பு பால் ஓரளவு சூடாக இருக்கும் போது அடித்துவைத்துள்ள முட்டையை அதனுள் ஊற்றிக்கொண்டு பீற்றரரால் முட்டை அவிந்து விடாமல் நன்றாக அடித்து ஜெலற்றீன் கலவை கலரிங், பனானா எசன்ஸ் என்பனவும் சேர்த்துக் கலந்து நன்கு ஆறிய பின்பு பாத்திரத்திலூற்றி 3 மணிநேரம் உறைப்பெட்டியில் வைத்தெடுத்து மீண்டும் நன்றாக அடித்துப்பாத்திரத்தின் வாய்ப் பகுதியை இறுகமூடி மீண்டும் உறைப்பெட்டியில் வைத்து இறுகியதும் எடுத்து ஐஸ்கிறீம் பரிமாறும் கிண்ணங்களில் நிரப்பி ஒரு கரண்டி சொக்கலற் சோஸை மேலே ஊற்றி வறுத்த கஜூவை தூவிக் கொண்ட பின் பரிமாறாலாம்.



அப்பிள் சுவிற்

தேவையான பொருட்கள்:

பால்மா - கிராம் சீனி - 125 கிராம், மாஜரீன் - ஒரு மேசைக்கரண்டி, தேங்காய்ப் பூ - 3 மேசைக்கரண்டி, தண்ணீர் - 5 மேசைக்கரண்டி, கராம்பு - 20, வனிலா - ஒருமேசைக்கரண்டி, பச்சை கலரிங் - ஒரு தேக்கரண்டி, ஏலப் பொடி -ஒரு தேக்கரண்டி.

செய்முறை: பால்மாவை உலர்ந்த பாத்திரத்திலிட்டு தேங்காய்ப்பூவும் சேர்த்து நன்கு கலந்துவைத்துக் கொள்க, கராம்பை கழுவிக் காய வைத்து எடுங்கள். தாச்சியை அடுப்பில் வைத்து சீனியையிட்டு 6 மேசைக்கரண்டி தண்ணீர்விட்டு காய்ச்சுக. பாகு காய்ச்சும் போது முதலில் சீனி முழுவதும் கரைந்து வெளு வெளுப்பான நுரைப்பதம் தோன்றி மறைந்து பாகு பொங்கிக் கொதித்துத் தடிக்கத்தொடங்கியதும் மாஜரினை அதனுள் போட்டு உருகவிடவும்.மாஜரின் உருகியதும் பால்மா, தேங் காய்ப்பூ கலந்துவைத்துள்ள கலவையைக் கொட்டி கரண்டியால் அடிப்பிடிக்கா வண்ணம் இடைவிடாது கிளறி கலவை திரளத்தொடங்கியதும் வனிலா, ஏலப்பொடி, கலரிங் என்பன சேர்த்து கலந்து இறக்கிக் கொள்க. கலவை சூட்டுடன் இருக்கும் போது கைகளில் மாஜரின் பூசிக் கொண்டு நெல்லிக்காயளவு உருண்டைகளாக உருட்டிக்கொண்டு கராம்பைக் காம்போடு எடுத்து நடுவே குற்றிக் கொள்க.

மங்கையரே உங்களின் சமையற் கலை, அழகுக் குறிப்புக்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்
யாழ்.ஒசை வீரகேசரி கிளைக் காரியாலயம்
117, ஸ்ரேசன் வீதி, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களின் ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டாக அல்லைப்பிட்டி குடியேற்ற திட்டம்

யாழ். ஆயர் அதி.வண. தோமஸ்சவுந்தரநாயகம் ஆண்டகை குறிப்பிட்டது போன்று ஒரு பயனுள்ள தேவையான நல்ல காரியம் தான் குருநகர் மக்களுக்கென அல்லைப்பிட்டியில் கரித்தாஸ் நெய்தலம் அமைப்புக்கள் வழங்கிய சுனாமி போர் தாக்கங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வீட்டுத்திட்டம்.

பாதிப்பு ஒருபுறம் இருக்க சனச் செறிவு மிதமிஞ்சிய பகுதியாக ஒரு நெருக்கடியான பகுதியில் மக்கள் நிம்மதியாக இருக்கக்கூட இடமில்லாதவாறு அமைந்த குடியிருப்புக்களில் இருந்து நிம்மதியாக ஆசுவாசமாக நீட்டி நிமிர்ந்து உட்காரக்கூடிய வீடு ஒவ்வொரு குடும்பத்திற்கும் தேவையான ஒன்று. கூடுதல் உறுப்பினர்களைக் கொண்ட குடும்பங்கள் படும் அவதியும் அல்லல்களும் கரிதாஸ்-நெய்தலம் அமைப்புக்களின் கவனத்திற்குள் வந்ததில் இன்று குருநகரில் உள்ள ஒரு தொகுதி மக்கள் வசதியாக நீட்டி நிமிர்ந்து உட்காரக்கூடியதான வீடுகளைச் சொந்தமாக எவ்வித செலவுமின்றி பெறமுடிந்தது. இது ஒரு நல்ல விடயம் தான்.

குருநகரின் குடியிருப்புக்களின் நெருக்கம் குறைக்கப்பட வேண்டியது தவிர்க்க முடியாதது. தற்போது அல்லைப்பிட்டியில் அமைக்கப்பட்ட வீடுகளைப் போன்று அந்த மக்கள் தமது தொழிலை மேற்கொள்ளக்கூடியதாக தொடர்ந்தும் இது போன்ற வீடுகளைக் கட்டி வழங்க கரிதாஸ் நிறுவனமும் நெய்தலமும் தயாராகவே உள்ளது என கையளிப்பு நிகழ்ந்த சமயம் உரையாற்றிய திருச்சபைப் பெருமக்கள் கூறியிருந்தனர். மேலதிகமாக வீடுகளுக்கான பதிவுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகின்றது.

அல்லைப்பிட்டியில் அமைக்கப்பட்ட வீடுகளுக்கான செலவு ரூபா 5 கோடி 60 லட்சம் இதற்கான உதவிகளை வெளிநாடுகளான பிரான்ஸ், அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த சாதாரணமக்களே தம்மை இணைத்துக் கொண்டுள்ளார்கள் என்பதைக் கேட்கும் போது பெரும்பாலும் வசதி குறைந்த சாதாரண மக்களிடம்தான் பிறருக்கு உதவ வேண்டும் என்ற மனப்பாங்கு அன்பு, கருணை என்ற உயரிய குணங்கள் கூடுதலாக இருப்பது போல் எமது மக்களுக்கு மற்றவர்களும் வாழவேண்டும் என நினைக்கின்ற மக்கள் வழங்கிய மனிதர் அவர்கள்.

நாங்கள் நினைத்தாலும் எங்களால் இது போன்ற வீடுகளைக் கட்டமுடியாது. இடம்பெயர்ந்து வாடகை வீட்டில் பல்வேறு கஷ்டங்களையும் அனுபவித்த இந்த மக்கள் நாங்கள் நல்ல தண்ணீர் அழகான இல்லம் என்று கூறிச் சந்தோஷப்படாத குருநகர் மக்கள் அல்லைப்பிட்டியில் காணமுடியவில்லை.

அல்லைப்பிட்டியில் வீடு ஒன்றைப் பெற்றுக் கொண்ட குருநகர் இளைஞரான சு.ரஞ்சன் தனது கருத்தில் இடம்பெயர்ந்து வாடகை வீடுகளில் குடியிருந்த நாங்கள் எந்த நேரத்திலும் வீட்டை விட்டு எழும்புங்கள் என்ற வார்த்தைகளைக் கேட்ட படியே இருந்தோம். தொழில் வசதியிருந்தும் நிம்மதியாகப் படுக்கக்கூட முடியாமல் இருந்தது. சின்னப்பிள்ளைகள் அதை இதைச் செய்யுங்கள் வீட்டுக் காரருக்குப் பயந்து பிள்ளைகளை அச்சுறுத்த வேண்டிய நிலையில் நாங்கள் இந்த துன்பமெல்லாம் இப்போது எமக்கு இல்லை என்று கூறிப் புன்னகைக்கிறார்.

கடற்தொழிலாளர் சங்கத்தலைவர் இ.அந்தோனிப்பிள்ளை 'இது எங்களுக்கு இறைவன் தந்த வரம் கரித்தாஸ் நிறுவனம் நெய்தலம் எங்களது ஆயர் அவர்கள் எங்களுக்கு பணச் செலவின்றி ஒரு சொந்த வீடு கிடைக்க உதவியுள்ளார். இவருக்கு நன்றி கூறுவதைத் தவிர மேற்கொண்டு எங்களால் என்ன செய்ய முடியும் என்கிறார்.

அல்லைப்பிட்டி அழகான நிம்மதியம் சந்தோஷமும் தரும் கிராமம். குருநகர்ப்பகுதி மக்கள் இனிமேல் இந்தக் கிராம மக்கள். இந்த நிறைவுடன் கிராம மக்களுடன் ஒற்றுமையாகவும் ஐக்கியமாகவும் கிராமத்தின் அபிவிருத்தியில் தம்மையும் ஈடுபடுத்திக் கொண்டு அதன் வளர்ச்சிக்காக உழைக்க வேண்டிய பொறுப்பு அவர்களுக்குரியது. இங்கு பெரும்பாலும் மீனவர்கள் என்பதால் குடியமர்ந்துள்ள குருநகர் மீனவர்கள் தொழில் தொடர்பான விடயங்களில் அங்குள்ள மீனவர்களை அணுகி பிரச்சினைகளின்றி ஒற்றுமையுடன் தமது தொழிலை முன்கொடுக்க வேண்டும். நல்ல தண்ணீர் நிறைந்த பூமி. அதனைப் பாதுகாப்பதுடன் வருங்காலத்திலும் வளமான அல்லைப்பிட்டியை ஒப்படைக்க வேண்டிய கடப்பாடுகளைக் கொண்டவர்களாக தமது செயற்பாடுகளை நகர்த்த வேண்டும்.

குடும்பங்களை நிம்மதியாக வாழ்வதற்கு இது போன்ற வீடுகளை அமைத்துக் கொடுக்க தம்மை அர்ப்பணித்துள்ள யாழ்.ஆயர் தோமஸ்சவுந்தரநாயகம், கரித்தாஸ் நிறுவனத்தின் முன்னாள் இயக்குநர் அருட்திரு கே.ஜெயக்குமார், நெய்தலம் இயக்குநர் அருட்திரு என். ஜெயசேகரம் மற்றும் கரித்தாஸ் நிறுவன பிரதிநிதிகள், இந்தக் குடியமர்வுத் திட்டம் நல்ல முறையில் நிறைவு பெற உதவிய குருமார்கள், திருச்சபையினர் என எல்லோரும் பயனாளிகளிடம் இருந்து எதிர்பார்ப்பது ஒற்றுமை ஐக்கியம் நிறைந்த அல்லைப்பிட்டியைத்தான். தினக்குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர் மலர்

நிலை மாற்றம்

தமிழுக்கு அமுதென்று பெயர்-பிறந்த
அமுதிற்கு இல்லை ஒரு தமிழ் பெயர்
எமனுக்கும் விலைபோகா தமிழின் நாடு-இன்று
எவனுக்கும் விலைபோகும் தமிழன் வீடு
வாரி வழங்கவென்றே வாழ்ந்த இனம்-இன்று
வாரிச்சுருட்டவென்றே சூழ்ந்து திரியுது
நேற்று வரை நாம் நெஞ்சில் சுமந்த மண்-பல
நரிகளின் சதியினாலே நஞ்சை சுமக்குது
பிறப்பிலிருந்தே பெருமை
கொண்டு வந்த இனம்-இன்று
பேரவலம் கண்டு பரிதவித்துப் போகும் தினம்
மனம் கொண்டு பலரையும்
மதித்து நடந்த இனம்-இன்று
பணம் கொண்டு பலரையும் மிதிக்குது தினம்
இனம் என்ற ஒன்றின் இருப்பிற்காய் இனியேனும்
மனம் கொண்டு நடப்போம் கனம் தந்து நடப்போம்

ஆர்.ஜே.பிரகலாதன்

நேசராஜ்குமார் தமிழினி
தரம் 3A
கிளி/கிளிநொச்சி ம.வி

செ.இலக்கியா
தரம் 6
யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி.

முந்திரிப் பழம்

முன்னொரு காலத்தில் கிர்கிஜ் என்ற கிராமத்தில் சுஹாண்டா என்ற மனிதர் வாழ்ந்துவந்தார். அவர் தனது தோட்டத்தில் விளைந்த முந்திரிக்கொட்டைகளை அரசருக்குப் பரிசாகக் கொடுக்க முடிவுசெய்தார்.

''எங்கே போகிறாய் சுஹாண்டா?'' என்று அவரது நண்பர் கேட்டார். ''எனது தோட்டத்தில் விளைந்த முந்திரிக்கொட்டைகளை அரசருக்குப் பரிசாகக் கொடுக்க எடுத்துச்செல்கிறேன்'' என்றார்.

''உன்னுடைய முந்திரிக்கொட்டைகள் அவருக்குத் தேவையில்லை. அவருக்குப் பிடித்தமான முந்திரிப்பழங்களை எடுத்துச் செல்'' என்றான் நண்பன். அவன் ஒரு பொறாமைக்காரன் எங்கே தன் நண்பனுக்குப் பரிசு கிடைத்து விடுமோ என்று பயந்தே இப்படிக் கூறினான்.

நண்பர் சொல்லுவதும் சரி தான் என்று எண்ணி முந்திரிக்கொட்டைகளை வீட்டில் வைத்து விட்டு சில முந்திரிப்பழங்களை எடுத்துக்கொண்டு அரண்மனையை நோக்கிப் புறப்பட்டார் சுஹண்டா. அரசருக்கு முந்திரிப்பழங்கள் பிடிக்காது சுஹாண்டாவை அடித்துவிரட்டுமாறு உத்தரவிட்டார்.

அரசர் உத்தரவிட்டது போலவே காவலர்கள் சுஹண்டாவின் முந்திரிப்பழங்களைப் பிடுங்கி அவர் மீது எறிந்தனர். சில பெரிய முந்திரிப்பழங்கள் அவரைத் தாக்கிய போது மகிழ்ச்சியில் உரக்கச் சொன்னார்.

''ஓ! நன்றி! ஓ மிகமிக நன்றி நண்பா'' என்று கத்தினார் சுஹண்டா. இதைக் கேட்டு அரசர் மிகவும் ஆச்சரியம் அடைந்தார். ''என்ன சொல்கிறாய்? என் ஆட்கள் உன் மீது முந்திரிப்பழங்களை வேகமாக எறிந்துகொண்டிருக்கின்றனர் நீயோ அவர்களுக்கு நன்றி சொல்கிறாயே''.

''அரசே! உங்களுக்கு என்னுடைய தோட்டத்தில் முதல் முதலில் விளைந்த முந்திரிக்கொட்டைகளைப் பரிசாகக் தரவேண்டும் என்று நினைத்தேன். ஆனால், என் நண்பர் ஒருவர் முந்திரிப்பழங்களை எடுத்துச்செல்லுமாறு யோசனை கூறினார். அவரின் யோசனையைக் கேட்காமல் முந்திரிக்கொட்டைகளை கொண்டுவந்திருந்தால் என் தலை என்ன ஆகியிருக்கும் என்பதை சற்றே நினைத்துப் பார்த்தேன். அதனால் தான் என் நண்பருக்கு நன்றி சொன்னேன்!''.

வெட்கமடைந்த அரசர் அவனிடம் மன்னிப்புக் கேட்டுவிட்டு அவருக்கு நிறைய பரிசுப் பொருட்கள் கொடுத்தனுப்பினார்.

தீக்காயம் ஏற்பட்டால்....

எதிர்பாராத விதமாக நம் உடலில் தீக்காயம் ஏற்பட்டுவிட்டால் உஷ்ணத்தை விரைவில் அப்புறப்படுத்துவதே முதல் உதவி. அதாவது, தீப்பட்ட பாகத்தை தண்ணீரில் வைத்து குளிரச்செய்ய வேண்டும். தண்ணீர் ஊற்றினால் கொப்புளம் ஏற்படுமே என்று நினைக்கலாம். ஆனால், மருத்துவ ரீதியாக கொப்புளம் ஏற்பட்டால் நல்லது. கொப்புளம் என்பது மேலாக ஏற்படும் புண். ஆனால், கம்பளி அல்லது ஜமுக்காளத்தால் போர்த்தி தீயை அணைக்க வேண்டாம். கம்பளி எரியும் பொருளை அணைக்குமே தவிர உள்ளேயுள்ள வெப்பத்தை வெளியேற்றாதபடி தடுத்துவிடும்.

மேலும், தீ விபத்துக்குள்ளானவர்கள் அதிர்ச்சியால் பாதிக்கப்பட்டால் தன்னம்பிக்கையே முதல் மருந்து. உடலில் தீப்புண் எவ்வளவுக்கெவ்வளவு பரவலாக இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு விபத்தின் கொடூரம் அதிகம்.இரத்த நாளாங்களும் தசைநார்களும் சிதைவுபட்டு நீர்போன்ற திரவம் உடலிருந்து வெளியே வருகிறது.

அதனால், இரத்தத்தில் திரவத்தன்மை குறைந்து சுண்டிப்போய் கெட்டியாகிறது. இந்த கெட்டியான இரத்தத்தை உடலில் கொண்டுசெல்ல இதயம் அதிகம் உழைக்கவேண்டியுள்ளது. உடனே மருத்துவமனைக்கு கொண்டுசெல்ல வேண்டும்.

உடலில் ஏதாவது திடீர் விபத்து ஏற்பட்டால் அந்த சூழ்நிலையை சமாளிக்க பாதிக்கப்பட்ட பகுதியில் இரத்தம் பரவும். தோல் சதைப்பாகங்கள் ஜீரணக் குழாய் முதலியவற்றில் இரத்த ஓட்டம் குறையும். ஜீரண சக்தி இருக்காது. எனவே, இலேசான நீர் ஆகாரங்கள் மட்டுமே கொடுக்க வேண்டும்.

எப்போதும் தீயை வெறுங்கையால் அணைக்க முயலாதீர்கள். நீங்களே விபத்துக்குள்ளாவீர்கள் மின் கசிவினாலோ பெற்றோல், மண்ணெண்ணெய் முதலிய எண்ணைய் பொருட்களால் தீ விபத்து ஏற்பட்டால் தண்ணீர் ஊற்றக்கூடாது. எரியும் பெற்றோலை நீர் பரவச்செய்யும். மின்சாரத்தினால் தீ விபத்து என்றால் மின்தாக்குதலுக்கு உள்ளாவார்கள்.

சிறுவர்களே! உங்களது ஆக்கங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்
அனுப்பவேண்டிய முகவரி
'யாழ் ஓசை' வீரகேசரி கிளைக் காரியாலயம்.
117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பிரித்தானியாவில் ஆண்களுக்கும் பிரசவ விடுமுறை

பெண்களுக்கு பிர சவ கால விடுமுறை கள் வழங்கப்படுவது போல், தகப்பனா கும் ஆண்களுக்கும் தாயோடும் பிள்ளை யோடும் நேரத்தைப் பகிர்ந்து கொள்வதற் காக ஐந்தரை மாத காலம் சம்பளத்துடன் கூடிய விடு முறை வழங்கப்பட உள்ளது.

சர்ச்சைக்குரிய இந்தத் திட் டங்கள் பற்றி அண்மையில் அறிவிக்கப்பட்டது.

பிரசவ விடுமுறையைப் பகிர்ந்து கொள்ளல் என்ற சர்ச்சைக்கு ரிய திட்டத்தின் கீழ் இந்தப் புரட்சிகர மாற்ற ங்கள் முன் வைக்கப்பட்டன.

தொழில்துறையினரையும் வர்த்தகத் துறையினரையும் பெரும் பாலும் பாதிக்காத விதத்தில் இந்த விடுமுறைகள் அமுல் செய்யப்படவுள்ளன. பிரிட்டனில் தற்போதுள்ள பிரசவ கால விடுமுறை தொன்மையானது, நெகிழ்வுப் போக்கற் றது, மற்றும் பால் ரீதியில் பாரபட்சமானது என்று பிரிட்டிஷ் உள்துறை அமைச்ச ரும், வர்த்தகத்துறை அமைச்சரும் தமது கருத் துக்களை முன்வைக்க வுள்ளனர். தந்தை மாருக்கும் தமது புதிய பிள் ளைகளுடன் அதிக நேரத் தைக் கழிக்க வேண்டியத் தேவை இருக் கின்றது.

எனவே அதற்கு ஏற்ற வாறு அவர்களுக்கும் வாய் ப்பளிக்கும் வகையில் பிர சவ விடுமுறை முறையில் மாற்றங்கள் அறிமுகம் செய்யப்பட வேண்டும் என்று இப்போது கருத்துக்கள் முன் வைக்கப்பட்டுள்ளன.

பாகிஸ்தான் கேட்கும் நிதியை கொடுப்பதற்கு அமெரிக்கா மறுப்பு

நிதி கோரி பாகிஸ்தான் வழங்கிய பட்டி யலில் தவறான தக வல்கள் இருப்பதாக கூறி அதன் பெரும் பகுதியை அமெரிக்கா நிராகரித்தது.

ஆப்கானிஸ்தான் போர் மற்றும் தீவிர வாத தேடுதல் வேட் டையில் அமெரிக்க ாவுடன் பாகிஸ்தான் கைகோர்த்தது. அதற் காக அமெரிக்கா ஆண்டுதோறும் பாகிஸ் தானுக்கு நிதியுதவி வழங்கியது. ஆனால், தீவிரவாத வேட்டையில் சரிவர ஈடுபடா மல் இருந்ததுடன், நிதி பெறுவத ற்கான பட்டியலை உண் மைக்கு புறம்பா கவும், தவறாகவும் தீட்டி பாகிஸ்தான் கொடுத்த தாக கூறப்படுகிறது.

தீவிரவாதத்துக்கு எதிராக சரிவர செயல் படாமல் வழங்கிய ஆயுதங்கள் மற்றும் நிதியை உள்நாட்டு தீவிரவாதிகளுக்கு வழங்கியும், இந்தியாவுக்கு எதிராகவும் பயன்படுத்தி இருக்கலாம் என்று அமெ ரிக்க அதிகாரிகள் நிதி வழங்க எதிர்ப்பு தெரிவித்தனர். இதனால் பாகிஸ்தான் கோரியதில் 40 சதவீதத்துக்கும் மேற்பட்ட நிதியை கொடுக்க அமெரிக்கா மறுத்து விட்டதாக செய்தி வெளியாகியுள்ளது.

பிரித்தானிய மகாராணியின் பாதுகாப்புக்கு 26 மில்லியன் பவுண்கள் செலவு

பிரிட்டிஷ் மகா ராணி அண்மையில் அயர்லாந்துக்கு அரசுமுறைப் பயணத்தை மேற் கொண்டுள்ளார். சரித்திர முக்கியத்துவம் மிக்க இந்த விஜயத்தை முன்னிட்டு 26 மில்லி யன் பவுண் செலவில் பாதுகாப்பு ஏற்பா டுகள் செய்யப்பட்டுள்ளன.

அரச பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த 120 மெட்ரோபொலிடன் பொலிஸார் கைத்து ப்பாக்கி மற்றும் இயந்திரத் துப்பாக்கிகள் சகிதம் மகாராணிக்கு பிரத்தியேகமான காவல் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

பயங்கரவாத அச்சுறுத்தல்களில் இரு ந்து மகாராணியைக் காப்பதே இவர்களின் பிரதான பணியாகும். இவர்கள் மகாராணி யையும் எடின்பரோ கோமகனையும் நான்கு நாள் விஜயத்தின் போது நிழல் போல் பின் தொடருவர்.

ஜரிஷ் குடியரசு க்கு மகாராணி மேற் கொள்ளும் முதலா வது அரசு முறை விஜ யம் இதுவாகும். அயர்லாந்தில் மேற் கொள்ளப்பட்டுள்ள மிகப் பெரிய பாதுகா ப்பு நடவடிக்கையும் இதுவாகும்.

பின்லேடன் உரையாடிய ஒலிநாடா வெளியீடு

ஒசாமா பின்லேடன் பேசிய பேச்சுக்கள் அடங்கிய ஒலி நாடா வெளியிடப்பட்டுள்ளது. 12 நிமிடம் 37 செக் கன்கள் ஓடக்கூடிய அந்த ஒலிநாடாவில் எகிப்து மற்றும் டுனிஷியா நாடுகளில் நடை பெற்று வந்த போராட் டத்திற்கு பாராட்டு தெரிவிக்கும் வகையில் இடம் பெற்றி ருந் தது.

கடந்த இரண்டாம் திகதி அமெரிக்காவின் சீல் படை யினர் ஒசாமாவை சுட்டுக் கொன்றபின்னர் முதன் முறை யாக அவரின் பேச்சு அடங்கிய ஒலிநாடா வெளியிடப் பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

அணுஉலை தாக்குதலை தடுப்பதற்கு இன்டர்போல் அமைப்பு உருவாக்கம்

பயங்கரவாதிகள், அணுஉலைகளை தாக்கி சேதத்தை ஏற்படுத்தி வருவது உல கின் அனைத்து நாடுகளுக்கும் பெரும் தலைவலியாக உள்ளது.

இதனை கருத்தில் கொண்டு இன்டர் போல் நிறுவனம், அணுஉலை தாக்குதல் தடுப்பு அமைப்பு ஒன்றை உருவாக்கி உள்ளது.

இந்த அமைப்பில் பணிபுரிவோர், விரை ந்து செயல்ப டுவர் என்றும், கெமிக்கல், பயோலாஜிக்கல், ரேடியோலாஜிக்கல், நியூக்ளியர் மற்றும் எக்ஸ்புளோசிவ் உள் ளிட்டவைகளால் ஏற்படுத்தக்கூடிய தாக் குதல்களை இவர்கள் முறியடிப்பர். இதனை, அனைத்து நாடுகளும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று இன்டர்போல் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

ஆர்ஜென்டினாவில் விமான விபத்து

இருபத்தொருபேருடன் சென்ற சிறிய விமானம் ஒன்று ஆர்ஜென்டினாவின் தெற்கு ரியோ நெக்ரோ மாகாணத்தில் கீழே விழுந்து விபத்துக்குள்ளானது.

அதில் பயணம் செய்தவர்கள் அனை வரும் இறந்துள்ளதாக தகவல்கள் தெரி விக்கப்படுகின்றது.

நியுகுவென்டோவில் இருந்து கோம டோரோ ரிவாடா வியா நோக்கி அந்த விமானம் சென்று கொண்டிருந்தபோது இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

பதவி விலகினார் டொமினிக்



பாலியல் குற்றச்சாட்டிற்கு ஆளான சர்வதேச நிதி யமைப்பின் தலைவர் டொமினிக் ஸ்டிரோஸ் கான் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார். இந்த பதவிக்கு மத் திய திட்டக்குழு துணை தலைவர் மான் டேக் சிங் அலு வாலியாவின் பெயர் பரிந்துரைக்கப்படலாம் என்று அங் கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமேசன் காடுகள் அழிப்பு ஆறு மடங்கு அதிகரிப்பு

சுற்றுச்சூழல் பாதுகாப்பில் இன்றியமை யா ததாக விளங்கும் அமேசன் காடுகளை அழிக்கும் நடவடிக்கை 6 மடங்கு அதிக ரித்துள்ளது. இதனால் பிரேசில் அரசு சிறப்பு அதிரடிப்படை ஒன்றை நிறுவி காடுகளைப் பாதுகாக்க திட்டமிட்டுள் ளது. கடந்த 2 மாதங்களில் மட்டும் 593 சதுர கி.மீ. பரப்பளவு காடுகள் அழிக்கப் பட்டு ள்ளன. இது 6 மடங்கு அதிகமாகும்.

இதனை அந்த நாட்டு சுற்றுச்சூழல் அமைச்சர் டெய்சீரா கடுமையாகக் கண் டித்துள்ளார். செயற்கைக் கோள் படங்க ளின் உதவியுடன் கண்டு பிடிக்கப்பட்ட போது காடுகள் அழிக்கப்பட்டு அந்த இட ங்கள் கால்நடை வளர்ப்புக்கும், சோயா பீன் விதைப் பயிர் செய்தலுக்கும் பயன் படுத்தப்பட்டு வருவது தெரியவந்துள் ளது. இது சட்டவிரோதமான நடவடிக்கை என்றும் இதனைத் தொடர்ந்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் டெய்சீரா எச்சரித்துள்ளார்.

இப்பகுதியில் உலகின் 5ஆவது மிகப் பெரிய நாடான பிரேசிலில் 53 லட்சம் சதுர கிலோமீட்டர் பகுதி அடர்ந்த காடுக ளான பகுதிகும். இது பெரும்பாலும் அமேசன் நதியைச் சுற்றி இருப்பதால் அமேசன் காடுகள் என்றே அழைக்கப் படுகின்றன.

இப்பகுதிகளில் 17 லட்சம் பகுதிகள் அரசு பாதுகாப்பில் உள் ளது.

மீதிப் பகுதிகள் தனியார் வசம் உள்ளது அல்லது யார் உரிமையாளர்கள் என்றே தெரியாமல் உள்ளது.

2004 ஆம் ஆண்டு வாக்குக் கணக் கெ டுப்பில் 27,000 சதுர கி.மீ பரப்பளவு காடுகள் அழிக்கப்பட்டது, பிறகு அரசின் கெடுபிடி நடவடிக்கைகளால் இது அடு த்த ஆண்டே 6,500 சதுர கி.மீ ஆகக் குறைந்தது. இதனால் அந்த நாட்டின் பெண் ஜனாதிபதி ரூசெப்பிற்கு நெருக் கடி ஏற்பட்டுள்ளது.

ஏனெனில் அவர் தனது தேர்தல் வாக்கு றுதியில் காடுகள் அழிப்புக்கு வழி வகை செய்யும் சலுகைகளை ஒரு போதும் செய் யமாட்டேன் என்று கூறியிருந்தார் என் பது குறிப்பிடத்தக்கது.

மதகு கதவுகள்
நீர்ப்பாசன தொழில்
சகல உரிர்ப்பாகங்களும்
மிக உயர்நிலையில்
உத்தரவாதத்துடன்
பெற்றுக்கொள்ளலாம்.
நாடு பூராவும் விற்பனை முகவர்கள்
உதய கைத்தொழில் நிறுவனம்
மேல் அலுதெனிய, வெலிகல்ல, கண்டி.
T.P : 081-2310086 / 081-3848950
0777 809905
Fax : 081 2310831 Email 123thilak@sltnet.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானிப்பாய் சத்தியசாயி பாடசாலை பண்பு விருத்தி விளையாட்டு விழா

கோப்பாய்,

மானிப்பாய் சத்தியசாயி பாடசாலை யின் பண்புவிருத்தி விளையாட்டு நிகழ் வுகள் அண்மையில் நடைபெற்றன.

இவ் விழாவிற்கு அகில இலங்கை சத் தியசாயி சேவா நிலையங்களின் மத்திய இணைப்புக்குழு உதவித் தலைவர் டாக் டர் வி. ஜெகநாதன் பிரதம விருந்தினரா கக் கலந்துகொண்டு உரையாற்றுகை யில்,

ஏனைய பாடசாலைகளில் விளையாட் டுப் போட்டிகளை நான் பார்வையிட் டுள்ளேன். அதேபோன்று தான் இந்நிகழ் வுகளும் அமையும் என எதிர்பார்த்திருந் தேன். ஆனால், முழு நிகழ்வுகளும் மனி தவிழுமியங்களை வெளிக்கொணர்ந்து பார்வையாளர்களுக்கு மனிதமேம்பாடு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத் தக் கூடியதாக வடிவமைக்கப்பட்டிருந் தன.

இங்கு போட்டி மனப்பாங்கு மாணவர்க ளிடையே தவிர்க்கப்பட்டிருந்ததை அவ தானித்தேன். அனைத்து மாணவர்களும் பங்குபற்றும் வாய்ப்பு வழங்கப்பட்டிருந் ததை அவதானிக்கமுடிந்தது.

எல்லோருக்கும் பரிசு வழங்கப்பட் டமை ஒரு சிறப்பம்சம் ஆகும். ஒட்டுமொத்தமாக மிகவும் பெறுமதி வாய்ந்த ஒரு நிகழ்வாக இது அமைந்திருந் தது.

எனவே, பகவானின் அன்பும் அருளும் ஆசியும் பாடசாலை அதிபர், ஆசிரியர்க ளுக்கும் மாணவர்களுக்கும் கிடைக்கப் பிரார்த்திக்கிறேன் என தெரிவித்தார்.

அவரது பாரியார் ஸ்ரீமதி கமலேஸ்வரி ஜெகநாதன் மாணவர்களுக்குப் பரிசில் களை வழங்கிக் கௌரவித்தார்.



சனசமூக நிலையத்தின் 63 ஆவது ஆண்டுவிழா

ஏழாலை,

நல்லூர் ஜனசக்தி சனசமூக நிலையத் தின் 63 ஆவது ஆண்டுவிழாவை முன் னிட்டு பல்வேறு நிகழ்வுகள் நடத்தப்பட வுள்ளன.

இச் சனசமூக நிலையத்தின் 63 ஆவது ஆண்டு பூர்த்தியினை ஒட்டி மாணவர்க ளிடையேயான பேச்சுப்போட்டி எதிர்வ ரும் 25 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சனசமூக நிலைய மண்ட பத்தில் நடைபெறவுள்ளது. இப் பேச்சுப் போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் சனசமூக நிலையத்தினருடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இளைஞர் பாராளுமன்ற இடைத்தேர்தல் 23 இல்

(திருநெல்வேலி நிருபர்)

இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்க ளுக்கான இடைத்தேர்தல் சண்டிலிப் பாய், பருத்தித்துறை ஆகிய தொகுதிக ளில் இடம்பெறவுள்ளது.

இத் தொகுதியில் வெற்றிபெற்றவர்கள் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட இருப்பதனால் இத் தொகுதிகளில் எதிர்வ ரும் 23 ஆம் திகதி இத் தேர்தல் காலை 8.00 மணி முதல் பிற்பகல் 4.00 மணிரை நடைபெறவுள்ளது.

முதலுதவி பயிற்சி

அச்சுவேலி,

கோப்பாய் பிரதேச செஞ்சிலுவைச் சங் கத்தைச் சேர்ந்த தொண்டர்களுக்கு முத லுதவிப் பயிற்சி நான்கு தினங்களுக்கு வழங்கப்படவுள்ளன.

பயிற்சியில் இணைந்துகொள்ள விரும் பும் தொண்டர்கள் உடனடியாக கோப்பாய் அலுவலகத்தில் தங்கள் பதிவுகளை மேற் கொள்ளுமாறு சங்கத்தின் தலைவர் இ. மயில்வாகனம் அறிவித்துள்ளார். தென்னி லங்கையிலிருந்து வரும் வளவாளர்கள் பயிற்சியளிக்கவிருப்பதோடு முதலுதவிப் பயிற்சி நான்கு தினங்களுக்கு வழங்கப்ப டவுள்ளது என தலைவர் அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தின் கலை, கலாசார, பண்பாட்டின் இருப்பிடமாக அளவெட்டி கிராமம் விளங்குகிறது

ஓய்வுநிலை மாவட்ட நீதிபதி விகடகவி மு. திருநாவுக்கரசு

தெல்லிப்பழை,

ஈழமணித் திருநாட்டின் யாழ்ப்பாணத் தின் கலை, கலாசாரம், பண்பாடு மற்றும் ஏனைய பிற கலைகள் உட்பட அனை த்துக் கலைகளினதும் பொக்கிஷமாக அளவெட்டிக் கிராமம் அமைந்துவிளங்கு கின்றது. இக்கிராமத்திற்கு இருக்கும் பெருமை வேறு கிராமத்திற்கு இல்லை எனும் அளவிற்கு புகழ்பூத்த கலைஞர்க ளையும் கல்வியியலாளர்களைக் கொண்ட மண்ணாக விளங்குகின்றது என ஓய்வுநிலை மாவட்ட நீதிபதி விகட கவி மு. திருநாவுக்கரசு தெரிவித்தார்.

கும்பழாவளைப் பிள்ளையார் ஆலயத் தில் அண்மையில் இடம்பெற்ற கும்பழா வளை ஐங்கரனின் இசைப்பேழை வெளி யீட்டு விழாவில் கலந்துகொண்டு வெளி யீட்டுரை நிகழ்த்தும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறும்போது,

நாதஸ்வர வித்துவான்கள் தட்சணா மூர்த்தி, பத்மநாதன் ஆகியோர்களைக் கொண்ட மண் அளவெட்டியாகும். ஈழநாட்டின் அனைத்து இசைக்கலைஞர் களும் போற்ற புத்தகம் வெளியிட்ட மண். இம் மண்ணில் தென்னிந்தியக் கலைஞர்கள் வந்து இசை நிகழ்ச்சிகளை நடத்தி பெருமை சேர்த்துள்ளார்கள். பிர பல சமயச்சொற்பொழிவாளர் கிருபானந்த வாரியார் உரை நிகழ்த்திய மண்.

இத்தகைய பெருமை சார்ந்த மண்ணின் பெருமைகளை வெளிப்படுத்த இளைஞர் கள் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறார் கள். கடல் கடந்து வாழும் பல்லாயிரக்க ணக்கான மக்கள், மண்ணை நேசிக்கும் மக்கள் ஒன்றிணைந்து இந்த இறு வட்டை தயாரித்துள்ளனர்.

இந்த ஐங்கரனின் புகழ்பாடும் இறு வட்டை காதால் கேட்டு நீங்கள் மகிழ வேண்டும். இசை மேதை உன்னிமேன னின் இசைதருவதற்காக பல்வேறு கலை ஞர்கள் நம்மூர்க் கலைஞர்கள் ஒன்றி ணைந்து அளவெட்டி மண்ணை கும்பழா வளை ஆலயம் பற்றிப் பேசும் பாடலை விநாயகப்பெருமானை மையமாகக் கொண்டு படைத்துள்ளார்கள்.

அளவெட்டியூர் அருட்கவி விநாசித் தம்பிப் புலவரின் திருப்பள்ளியெழுச்சி பாடலை அடிப்படையாகக் கொண்டு இசைப் பேழை தயாரிக்கப்பட்டுள்ளது. இவ் ஒலிப் பேழையானது தமிழர்கள் வா ழும் தேசங்கள் எல்லாம் சென்று புகழ்ப ரப்பப் போகின்றது.

விநாயகப்பெருமானை வேண்டும் வகையில் இம் மண்ணின் வேண்டுகை யாக வெளிவந்துள்ளது. இதற்காக உழைத்த அனைவருக்கும் பாராட்டுக்கள். இம் மண்ணினை நேசிக்கும் தன்மையாக இம் முயற்சி விளங்குகின்றது.

இவ் இறுவட்டின் மூலம் திரட்டப்படும் நிதியானது அளவெட்டியின் கலை, கலா சார, பண்பாடு என்பவற்றை அழியாத வகையில் பேணிபாதுகாப்பதற்கும் அ ளிக்கை செய்வதற்கும் ஏற்றவகையில் கலாசார மண்டபத்தை அமைப்பதற்குப் பயன்படப் போகிறது.

இதனூடாக அளவெட்டியினுடைய புக ழை மேலோங்கச்செய்ய இந்த வெளியீடு உதவவுள்ளது.

இந்த இறுவட்டினுடைய மகிமை பேச வார்த்தைகள் இல்லை. அவ்வளவு அற்பு தத் தரம் வாய்ந்தது. எனவே, அற்புதம் நிறைந்த இறைவன் புகழ்பாடுகின்ற ஒலிப்பேழையானது அனைவரது கரங்க ளிலும் வீடுகளிலும் தவழவேண்டியது அவசியமாகின்றது. இதனூடாக அள வெட்டியினுடைய பெருமை பேசப்படுவ தற்கான களமாக விளங்குகின்றது எனத் தெரிவித்தார்.

தெல்லிப்பழை கலாசாரப் பேரவை நடத்தும் விசேட பஜனை வழிபாடு

தெல்லிப்பழை,

தெல்லிப்பழை பிரதேச செயலக கலா சாரப் பேரவையினர் நடத்தும் மாதாந்த நிகழ்வின் அங்கமாக விசேட பஜனை வழிபாடு நிகழ்வு இன்று 20 ஆம் திகதி பிற்பகல் 3.30 மணிக்கு தெல்லிப்பழை பிரதேச செயலாளர் எஸ். முரளிதரன் தலைமையில் பன்னாலை சிவபூதவராயர் ஆலயத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் விசேட பஜனை நிகழ் வினை பன்னாலை கணேசா அறநெறிப் பாடசாலை மாணவர்களும் பன்னாலை சேர் கனகசபை வித்தியாலய மாணவர்க ளும் வழங்கவுள்ளனர்.

சிறப்பு சொற்பொழிவு நிகழ்வாக ஆலய வழிபாடும் அவற்றின் அவசியமும் எனும் தலைப்பில் பண்டத்தரிப்பு இந்துக் கல் லூரி ஆசிரியர் சைவப்புலவர் சைவ சித் தாந்த பண்டிதர் எஸ்.ரி. குமரன் வழங்க வுள்ளார்.

இந்த விசேட நிகழ்வில் தெல்லிப்பழை கலாசாரப் பேரவையைச் சேர்ந்த அனைவ ரையும் மற்றும் சமய ஆர்வலர்களையும் கலந்துகொள்ளுமாறு தெல்லிப்பழை பிர தேச செயலக கலாசாரப் பேரவையினர் அறிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியா பாவத்திலிருந்து மீள வேண்டுமாயின் நிரந்தரத் தீர்வினை பெற்றுக்கொடுக்க வேண்டும்

- தமிழ் கூட்டமைப்பு எம்.பி. யோகேஸ்வரன்

களுவாஞ்சிக்குடி,

2009 ஆம் ஆண்டு இறுதிப்போரில் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்ட தில் பாரிய பொறுப்பு இந்தியாவுக்கும் உள் ளது. இந்தியா அந்த பாவத்தில் இருந்து ஓரளவு விடுபடவேண்டுமென்றால் தமிழ் மக்கள் தம்மைத்தாமே ஆளும் ஒரு நிரந்தர தீர்வுத்திட்டத்தை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்று தமிழ் தேசியக்கூட்ட மைப்பின் மட்டு. மாவட்ட எம்.பி. சீ யோ கேஸ்வரன் தெரிவித்தார்.

ஐ.நாடுகள் சபையினால் கொண்டுவர ப்பட்டுள்ள அறிக்கை தமிழ் மக்களுக்கு ஒரு நல்ல வழியை ஏற்படுத்தும் மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பில் இலங் கை அரசாங்கம் பதில் கூறியே ஆகவேண் டும் என்றும் அவர் கூறினார்.

2009 ஆண்டு வன்னியில் இடம்பெற்ற இறுதிப் போரில் உயிரிழந்தவர்களின் ஆத் மசாந்திவேண்டி தமிழ் தேசிய கூட்டமைப் பினரால் களுவாஞ்சிக்குடி சக்தி இல்லத் தில் ஆதரவற்ற சிறுவர்களுக்கு அன்னதா னம் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரை யாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித் தார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்று கையில் தெரிவித்ததாவது -

இந்த நாட்டின் பூர்வீக குடிகளான நாங் கள் இன்று தற்காலிக குடிகளாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற நிலைமைக்கு ஆளாக் கப்பட்டுள்ளோம். கடந்த காலத்தில் எமது சமூகம் இந்த நாட்டில் தமது உரிமையை பெறவேண்டும் என்பதற்காக தமிழரசுக்கு கட்சியொன்ற ரீதியில் அகிம்சை போராட் டங்களையும் காலப்போக்கில் அது செல் லும்படியற்ற நிலையில் ஆயுதப்போராட் டத்துக்குள் தள்ளபட்டனர்.

ஆனால் கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி இந்த நாட்டிலே இருக்கின்ற தமிழ் சமூகத்தின் வாயை அடைந்து விட்டோம் என்று சிங்கள பேரி னவாதம் ஒருகுரலை எழுப்பியுள்ளது. வன்னியிலே பெருமளவிலான மக்களை அழித்த கர்வத்தினால் அத்தகைய குரல் ஏற்பட்டது.

கிட்டத்தட்ட பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் 2009 ஆம் ஆண்டு மே மா தம் இந்த அரசாங்கத்தினால் திட்டமிட்ட நடவடிக்கையினாலும் அயல்நாடுகளின் ஆதரவினாலும் இந்த மண்ணிலே மடிந்தி ருக்கின்றார்கள், அழிக்கப்பட்டிருக்கின்றார் கள். அரசன் அன்றருப்பான் தெய்வம் நின்று அறுக்குமென்று சொல்வார்கள். பாண்டவர்கள் தருமத்தை கடைப்பிடித்த தன் காரணமாக அவர்கள் அருகில் கடவுள் கிருஸ்ண பரமாத்மா அருகில் இருந்தும் கூடு அவர்கள் பட்ட துன்பத்துக்கு அள வே இல்லை. ஆனால் அதர்மவாதிகளாக இருந்த கௌதமர்கள் மகிழ்ச்சியாகவிருந்த னர். ஆனால் இறுதியில் தர்மத்தை கடை ப்பிடித்த பாண்டவர்கள் வெற்றி கண் டனர். கௌரவர்கள் தோல்வியை அனுப வித்தார்கள்.

ஆகவே இந்த சமூகம் இந்த நாட்டிலே எப்போதாவது ஒரு நாள் தர்மத்தின் வழியே தலை நிமிர்ந்தே நிற்கும், ஏனென் றால் ஒரு காலத்திலே இந்த நாட்டை ஆண்ட சமூகம். இந்த நாட்டின் பூர்வீக குடிகள். ஆனால் இன்று அவர்கள் சிறு பான்மையினம் என்று கூறி அடக்கியொடு க்கி வைக்க முற்படுகின்றனர்.

மனித சமூகமே வெட்கப்படவேண்டிய விடயம். 2009 ஆம் ஆண்டு மே மாதம் அங்கு அரங்கேற்றப்பட்டதுபெற்ற தாயை யே உயிரோடு புதைத்துவிட்டு ஓடிய துர்ப்பாக்கிய நிலை தமிழ் சிறுவனுக்கு ஏற்பட்டது. இவ்வாறான பல நிகழ்வுகள் நடைபெற்றன. யுத்த காலத்தில் படுகாய மடைந்தவர்களை புதுக்குடியிருப்பு வைத் தியசாலையில் குவித்திருந்தபோதும் அவர்களுக்கு எதனையும் செய்யாமல் மனித தர்மத்தைக்கூட மறுத்திருந்தது. திருகோணமலை வைத்தியசாலையில் காயமடைந்தவர்களை கொண்டுவந்து அனுமதித்தபோது அவர்களுக்கு சென்று உதவ, அவர்களை பார்க்ககூட எங்களால் முடியவில்லை. அதுமட்டுமின்றி இடம் பெயர்ந்த மக்களில் பலர் கடத்தப்பட்டி ருந்தனர். அவர்கள் தொடர்பில் இதுவரை அரசாங்கத்தினால் எதுவித உத்தரவாத மும் வழங்கப்படவில்லை.

ஜனாதிபதியை சந்தித்தபோது கூட காணாமல் போயுள்ளவர்கள் தொடர்பில் வெளிப்படுத்தலை செய்ய வேண்டும் என்று கேட்டபோது அங்கிருந்த பலில் ராஜபக்ஸ கூறினார்; அவர்கள் தாங்கள் இருப்பதையும் தங்கள் பெயரையும் சொல்ல மறுக்கின்றார்கள். அவர்கள் தங் களை சர்வதேச அமைப்புக்கள் கொண்டு சென்றுவிடும் என்பதற்காக... அப்படி யென்றால் அதன் கருத்து அவர்கள் இருக் கின்றார்கள் என்பதை தெளிவுபடுத்தியி ருந்தார்.

அதுமட்டுமின்றி 2007 ஆம் ஆண்டுக்கு பிறகு மட்டக்களப்பு மாவட்டத்தில் மீள் குடியேற்றப்பட்டவர்கள் கூட கடத்திச் செல்லப்பட்டுள்ளார்கள். அவர்கள் தொட ர்பில் இதுவரையில் தகவல்கள் இல்லை. நாங்கள் விசாரித்தபோது சொல்கின்றனர் இங்கிருக்கும் ஆயுதக்குழுக்களின் பிரதி நிதியாக இருக்கின்றவர்கள். முன் எங் களை நிறுத்துங்கள், கடத்தியவர்கள் யார் என்று நாங்கள் சொல்கின்றோம் எ ு அதனைக்கூட நாங்கள் ஏற்பாடு செ முனைந்து தோல்வி கண்டோம்.

இந்தியா அதில் இருந்து விடுதலையாக வேண்டுமாகவிருந்தால் இந்த தமிழ் மக்க ளுக்கான ஒரு நிரந்தர தீர்வை தமிழ் மக் கள் எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வை, வடகிழக்கு இணைந்த தீர்வை, தமிழ் மக்கள் சுயமாக ஆளக்கூடிய தீர்வை பெற்றுக் கொடுக்க வேண்டும். அப்போது தான் இந்த மண்ணுக்கு இந்தியா செய்த துரோகத்தில் இருந்து ஓரளவு விடுதலை யாக முடியும்.

நாகரீக மோகம் காரணமாக தமிழ் மொழி அழியும் நிலையை எட்டியுள்ளது

- மட்டு. தமிழ்ச் சங்கத் தலைவர்

(துறைநீலாவனை நிருபர்)

தமிழ் மக்களின் பாரம்பரிய கலை கலா சார விழுமியங்கள் இன்று அழிவுறும் நிலையில் உள்ளன. எமது மக்கள் நாகரீக மோகம் காரணமாக தமிழுடன் ஆங்கிலத் தையும் கலந்து பேசுவதை நாகரீகமென நினைப்பது அபத்தமாகும். இந் நிலை தொடருமாயின் நாளடைவில் தமிழ் மொ ழியும் அதன் பாரம்பரிய கலை கலாசார விழுமியங்களும் அழிந்து விடும் அபாயம் உள்ளது. செம்மொழியாகிய தமிழுக்கே உரித்தான கலை,கலாசார விழுமியங் களை அழிவுறாது பேணிப் பாதுகாக்க வேண்டும் என்பதை தலையாய கடமை யாக கொண்டு யாவரும் தொழிற்பட வேண்டும். இதுவே எமது வேண்டு கோளாகும்.

இவ்வாறு மட்டக்களப்பு தமிழ்ச் சங்கத் தின் தலைவர். பேராசிரியர் மா. செல்வரா சா குறிப்பிட்டார். சுவாமி விபுலானந்தா அடிகளாரின் பிறந்த தினத்தை கொண்டா டுவது பற்றி ஆராயும் விசேட கூட்டம் மட் டக்களப்பு தமிழ் சங்கத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மூத்த எழுத்தாளர். இரா.நா கலிங்கம் (அன்புமணி), பிரபல யோகா சிகிச்சை நிபுணர் செல்லையா - துரையப் பா, மட்டக்களப்பு தமிழ் சங்க செயலாள ரும், மட் - அரசினர் ஆசிரியர் கலாசாலை உப அதிபருமான க.மகாலிங்க சிவம் உட் பட பலர் கருத்துரை வழங்கினர்.

அங்கு பேராசிரியர் மா. செல்வராசா மேலும் பேசுகையில்,

மட்டக்களப்பு தமிழ்ச் சங்கமானது வடக்கே மூதூர் தொடக்கம், தெற்கே பா ணமை வரையும் தனது ஆளுகைப்பரப்பா கக் கொண்டு தமிழை வளர்க்க இயன்ற வரை பாடுபடவுள்ளது.

இன்று புலம்பெயர்ந்த நாடுகளில் 'தமிழ் மெல்லச் சாகும்' நிலை ஏற்பட்டுள்ளது. புலம் பெயர்ந்தோர் சிலர் தமிழின் வளர்ச்சி யில் ஓரளவு அக்கறை கொண்டிருந்தும், பலர் தமது வீடுகளில் ம னவி - மக்களு டனான உரையாடலின் போது ஆங்கிலத் தையே பயன்படுத்துகின்றனர். இந்நிலை தொடருமாயின் இவர்களின் எதிர்கால சந் ததியினர் தமிழ் என்றால் என்ன? என்று கேட்கும் நிலை உருவாகும். இவ்விடயம் தொடர்பாக நாம் இணையத்தளங்கள் வா யிலாக எமது தமிழ் உறவுகளுக்கு உருக்க மான வேண்டுகோள் விடுத்துள்ளோம்.

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் பிறந்த தினத்தையொட்டி எதிர்வரும் யூலை மாதம் 16 ஆம் திகதி மா பெரும் முத்தமிழ் விழாவை நடாத்தவுள் ளோம். எமது பண்டைய கலை, கலாசாரம் தொடர்பான போட்டிகளை நடாத்தி பணப் பரிசில்களை வழங்கவுள்ளோம். எமது படைப்பாளிகளின் புத்தக கண்காட்சி, சுவாமி விபுலானந்தரின் திருவுருவம் தாங் கிய ஊர்தியின் எழுச்சி ஊர்வலம், மலர் வெளியீடு என்பனவும் இடம்பெறவுள்ள தாகத் தெரிவித்தார்.

டிலோ ரஞ்சித் ஆண்டகை தமிழர் நலனில் அக்கறை காட்ட வேண்டும்

பொன். செல்வராசா எம்.

மண்டூர்,

தமிழ் மக்களின் பிரச்சினைகள் பற்றி அங்கிலிக்கன் திருச்சபையின் ஆயர்கள் குரல் கொடுத்து வந்துள்ளனர். எனினும் அம் மக்களின் பிரச்சினைகளுக்கு இன்னும் தீர்வு கிட்டவில்லை. இருப்பினும் அதற் கான சாதகமான காலம் கனிந்துள்ளது. எனவே இந்த வேளையில் புதிய ஆயரும் தமிழர் நலனில் அக்கறை காட்ட வேண் டும் என மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப் பினர் பொன். செல்வராசா கூறினார்.

அங்கிலிக்கன் திருச்சபையின் கொழும்பு ஆயராக திருநிலைப்படுத்தப்பட்ட டிலோ ரஞ்சித் ஆண்டகைக்கான வரவேற்பு வைப வம் மட்டக்களப்பு புனித அன்றூ தேவாலய த்தில் அண்மையில் நடைபெற்றது.

அந் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்:-

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் ஆயரின் மனைவி பெரும்பான்மை இனத் தைச் சேர்ந்தவர் எனவே இருவரும் இணை ப்பு பாலமாக இருந்து தமிழருக்கு உதவியும் சேவையும் செய்ய வேண்டும். மட்டக் களப்பு மண்ணைச் சேர்ந்த இவர் ஆயராக திருநிலைப்படுத்தப்பட்டதும் முதன் முதல் பிறந்த மண்ணுக்கு விஜயம் செய்த ஆயரை நாம் வரவேற்கின்றோம். இந் நிகழ்வில் இன்றைய நாளை நாம் மறக்க முடியாது. அங்கிலிக்கன் திருச்சபையை மட்டக் களப்பு மக்கள் மறந்து விட முடியாது. பிரச் சினை அதிகமாக இருந்த காலத்தில் இந்தச் சபையைச் சேர்ந்த வண. பிதா கிறிஸ்பஸ் சந்திரன் மூலை முடுக்கெல்லாம் சென்று செய்த சேவையினை பல்சமய ஒன்றி யத்தில் ஈடுபாடு கொண்டிருந்த நான் நன்கு அறிவேன் என்றார்.

ஆயர் டிலோ ரஞ்சித் ஆண்டகை பேசிய தாவது தான் இந்தப் பதவியை எதிர்பார்க்க வில்லை. இறைவனின் அழைப்பு இது. ஒரு விமானியாகவோ அல்லது சர்வதேச உல் லாச விடுதியில் உயர் பதவியோ வகிக்க வேண்டும் என்று படிக்கும் போது நான் விரும்பினேன். அதற்கு அமைய ஒபரோய் ஹோட்டலிலும் பின் வெளிநாட்டிலுள்ள 5 நட்சத்திர ஹோட்டல் ஒன்றிலும் கடமை யாற்றினேன். அதன் பின்னரே இறை பணிக்கு வந்தேன். இறைபணியுடன் எம்ம வருக்கு தேவையான என்னால் ஆன பணி களையும் செய்ய காத்திருக்கிறேன் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிக்கோயா நகரில் ரூ. 1200 மில்லியன் செலவில் சகல வசதிகளுடனும் கூடிய வைத்தியசாலை

மத்திய மாகாண சுகாதார அமைச்சர் சுனில் அமரதுங்க

(கண்டி - வத்துகாமம் நிருபர்)

இந்திய அரசின் உதவியுடன் 1200 மில்லியன் ரூபா செலவில் டிக்கோயா நகரில் அமைக்கப்படவுள்ள சகல வசதிகளும் கொண்ட வைத்தியசாலை மூலம் ஹட்டன் மற்றும் பெருந்தோட்டப் பகுதி மக்கள் பாரிய சேவையைப் பெறக் கூடிய தாக இருக்குமென்று மத்திய மாகாண சுகாதார அமைச்சர் சுனில் அமரதுங்க தெரிவித்தார்.

மத்திய மாகாண சபை அமைச்சராக சுனில் அமரதுங்க பதவியேற்று ஒருவருடம் பூர்த்தியாவதை முன்னிட்டு மத்திய மாகாண சுகாதார அமைச்சில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த வைபவத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது,

மாகாண சபை வைத்தியசாலை ஒன்றை 1200 மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்தி செய்வதென்பது சாதாரண விடயமல்ல; இருப்பினும் இந்திய அரசின் உதவி காரணமாக பெருந்தோட்டப் பகுதி மக்களுக்கு இது சிறந்த வரப் பிரசாதமாக உள்ளது. இன்று சாதாரணமாகப் பெருந்தோட்டப்பகுதி வைத்தியசாலைகளில் ஆய்வு கூட வசதி இல்லை. இதன் காரணமாக நகர்புற வைத்தியசாலைகளிலே அநேகர் தமது ஆய்வு கூடப் பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதற்கு போக்குவரத்துச் செலவு உட்பட வீண் காலதாமதத்தையும் எதிர் கொள்ள வேண்டியுள்ளது.

இதனால் ஒரு அறிக்கையை பெற வீண் செலவு, கால தாமதம் இவை இரண்டும் தடையாக உள்ளன. இக்குறை பாட்டை நிவர்த்தி செய்ய நடமாடும் ஆய்வு கூட முறை ஒன்றை அறிமுகம் செய்துள்ளோம்.

முக்கிய கேந்திர நிலையத்திலுள்ள வைத்தியசாலைகளை தெரிவு செய்து அங்கு சகல வசதிகளும் கொண்ட ஆய்வு கூடங்களை அமைத்துள்ளோம். அயலிலுள்ள கிராமப்புற அல்லது தோட்டப் புற வைத்தியசாலைகளில் இருந்து மாதிரிகளை சேகரிக்க முச்சக்கர வண்டிகளை ஒழுங்குபடுத்தியுள்ளோம்.

இவ்வாறு ஒன்பது முச்சக்கர வண்டிகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இது மட்டுமல்லாது கிராமிய வைத்தியசாலைகள், 9 இற்கு அம்பியூலன்ஸ் வண்டிகளை புதிதாகக் கொடுத்துள்ளோம் என்றார்.

தமிழ் மொழிமூல ஆசிரியர் பற்றாக்குறை: நீக்குமாறு முதலமைச்சரிடம் கோரிக்கை

இரத்தினபுரி,

இரத்தினபுரி மாவட்ட தமிழ் மொழி மூல பாடசாலைகளில் காணப்படும் ஆசிரியர் பற்றாக்குறைகளை உடனடியாக தீர்த்து வைக்குமாறு சப்ரகமுவ மாகாண சபை உறுப்பினர் யெஹியா எம். இப்லார் சப்ரகமுவ மாகாண முதலமைச்சர் மஹிபால ஹேரத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இரத்தினபுரி மாவட்டத்தில் இயங்கும் தமிழ் - முஸ்லிம் பாடசாலைகளில் கடும் ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்றது. விசேடமாக கணிதம், விஞ்ஞானம், தொழில்நுட்பம், அழகியல் ஆகியவற்றுக்கு போதிய ஆசிரியர்கள் இல்லை. தற் பொழுது க.பொ.த. சா/த பரீட்சை பெறுபேற்றின் அடிப்படையில் சப்ரகமுவ மாகாணம் அகில இலங்கை ரீதியில் நான்காம் இடத்தில் காணப்படுகின்றது. தமிழ் மொழி மூலபாடசாலைகளில் காணப்படும் ஆசிரியர் பற்றாக்குறைகளை நீக்கி கல்வி வளர்ச்சிப்படியை மேலும் முன்னேற்றும்.

அண்மையில் இடம்பெற்ற முதலமைச்சர்களின் சம்மேளனத்தினால் க.பொ.த உ/த சித்தியெய்தியவர்களுக்கு ஆசிரியர் நியமனம் வழங்க வேண்டும் எனும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதனை அடிப்படையாக வைத்துக் கொண்டு எமது மாவட்டத்தில் க.பொ.த உ/த சித்தியெய்தியவர்களுக்கு நியமனம் வழங்கி மாகாணத்தில் காணப்படும் தமிழாசிரியர் பற்றாக்குறை நீக்கப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஹிந்த மாத்தளை விஜயம்

இறத்தோட்டை,

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இன்று 20 ஆம் திகதி மாத்தளைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

2600 ஆம் ஆண்டு சம்புத்த தவ ஜயந்தியை நினைவுகூருமுகமாக மாத்தளை விகார வீதியிலுள்ள ஸ்ரீ வித்தியானந்த பிரிவென வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள 35 அடி உயர புத்தர் சிலையை நாளைய தினம் காலை 10 மணிக்கு ஜனாதிபதி திறந்து வைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களம் கற்போம்

தொழில் சம்பந்தமாக பார்ப்போம்

நீங்கள் எங்கு வேலை
ஓயா கொகெத வெட

நான் தபாற்கந்தோரில் வேலை
மம தெபல் கந்தோருவே வெட

என்ன வேலை
மொன வெடத

தபால் வழங்குதல்
லிவும் பெதன எக

அப்படியா?
எஹமதமய்

ஆம் அப்படித்தான்
ஒவ் எஹமத
நல்ல வேலை
ஹொந்த வெடாக்

எந்த தபால் அலுவலகத்தில் நீங்கள் வேலை செய்கிறீர்?
கொய் தெபல்கந்தோருவே ஓயா வெட கரன்னே?

நான் வவுனியாவில் வேலை செய்கின்றேன்
மம வவுனியாவே வெட கரனவா

எத்தனை பேர் வேலை
கீ தெனெக் வெட கரனவாத

நாங்கள் இருபத்தைந்து பேர் வேலை
அப்பி விசிபஸ்தெனெக் வெட கரனவா

நல்ல தொழில்
ஹொந்த ரெகியாவக்

இன்று லீவு நாளா?
அத நிவாடு தவசத

இல்லை இன்றும் வேலை தான்
நெ அதத் வெட தமாய்.

வருவீரா எங்கள் வீட்டுக்கு.
எனவாத அப்பே கெதரட

ஏன்
எய்

இவர் யார்?
மெயா கவுத?

தம்பியா அல்லது அண்ணாவா
மல்லித நெத்தம் அய்யாத

தம்பி தான்
மல்லி தமாய்.

வேறு யாரும் இல்லையா?
வென கவுருத் நெத்த.

அண்ணாவும் இருக்கிறார்.
அய்யாத் இன்னவா

நீங்கள் தொழிலுக்கு போகவில்லையா?
ஓயா ரஸ்ஸாவட கியநெத்த?

எனக்கு இன்னும் தொழில் கிடைக்கவில்லை.
மட்ட தவத் ரெகியாவக் லெபுனே நெஹ

எனக்கு அரச உத்தியோகம் தான் வேண்டும்.
மட்ட ரஜயே ரெகியாவக் தாம ஓனே.

அரசாங்கத்தில் நிறைய உதவிகள் கிடைக்கின்றனவே.
ரஜயென் ஹுகாக் உதவ் ஹம்பவெனவானே

தொழில் இல்லாமல் எப்படி வாழ்வது?
ரெகியாவக் நெத்துவ கொஹமத ஜீவத்வெண்னே

சிறிய கடை செய்யலாமே?
பொடிக் கடயக் கரன்ட புலுவன்னே?

மீண்டும் அடுத்த
பாடத்தில் சந்திப்போம்
●வேலு. ஜீவராஜ்

SPOKEN ENGLISH

Guru Chaithanya and his student are talking about whole creation.

சைதன்ய சுவாமியும் அவருடைய மாணவனும் உரையாடல்.

Student:- Good Morning
மாணவன் : - வணக்கம் சுவாமி ஜி.
Guru:- Hari om sit down.
குரு : ஹரி ஓம். உட்காருங்கள்.
Student:- Swamy G I have a doubt.
மாணவன் : - சுாவமிஜி எனக்கு ஒரு சந்தேகம் இருக்கின்றது.
Guru:- What about?
குரு : எதைப் பற்றி?
Student:- Swamy G who is the creation of this universe and It's function.
மாணவன் : - சுவாமிஜி யார் இந்த பிரபஞ்சத்தை தோற்றுவித்தது. அது எவ்வாறு தொழிற் படுகிறது.
Guru:- This is a secret of nature
குரு : அது இயற்கையின் இரகசியம்.
Student:- Shall I know this?
மாணவன் : - நான் இதை அறிந்துகொள்ள முடியுமா?
Guru:- Why not? Nature is god who is the ruler of this universe.
குரு : ஏன் முடியாது? இயற்கை தான் கடவுள். அவரே இப்பிரபஞ்சத்தை ஆளுகிறார்.
Student:- Can you teach me about Swamy?
மாணவன் : - சுவாமி நீங்கள் இதனை எனக்கு கற்பிப்பீர்களா?
Guru:- It's not easy. You have to work hard.
குரு : இது சுலபமானது அல்ல. நீ கடுமையாக வேலை செய்ய வேண்டும்.
Student:- Tell me what shall I want to do Swamy?
மாணவன் : - சொல்லுங்கள் சுவாமி நான் என்ன செய்ய வேண்டும்.
Guru:- First you will have to start your self.
குரு : முதலில் நீ நீயாகவே தொழிற்பட வேண்டும்.
Student:- What? Swamy?
மாணவன் : - என்ன சுவாமி?
Guru:- Eat less then you have to meditate.
குரு : நீ குறைவாக உணவை உட்கொள்ள வேண்டும். (விரதம்) அத்துடன் தியானம் செய்ய வேண்டும்.
Student:- Meditation! Is it possible Swamy?
மாணவன் : - தியானம்! அது என்னால் முடியுமா சுவாமி?
Guru:- Oh yes. You can.
குரு : ஆம் , உன்னால் முடியும்.
Student:- What further activities do I want?
மாணவன் : - மேலும் வேறு என்ன செய்ய வேண்டும் சுவாமி?
Guru:- I will tell in future.
குரு : எதிர்காலத்தில் உனக்கு சொல்கிறது?
Student:- Any studies? Swamy G?
மாணவன் : - வேறு படிப்புக்கள் இல்லையா? சுவாமி ஜி.
Guru:- First keep an eye on it then come to study Bhagavad Gita.
குரு : முதலில் நான் கூறியவற்றை கவனமாக பின்பற்று. பின்பு பகவத்கீதை படிக்க வாருங்கள்.
Student:- Ok, Swamy G –I have that one.
மாணவன் :- சரி சுவாமி ஜி. அந்தப் புத்தகம் என்னிடம் உள்ளது.
Guru:- That is good keep it.
குரு : நல்லது அதை படி.
Student:- Thanks Swamy G.
மாணவன் : - நன்றி சுவாமிஜி.
Guru: Hari Om.
குரு : ஹரி ஓம்.

S.Uthayabalan (M.A)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரப்பகீர்வை அகராதியில் தேடும் நிலை

தேசிய இனப்பிரச்சினைத் தீர்வுக்கு நிரந்தரமான அரசியல் தீர்வே இறுதியானது என்று காலா காலமாக பேசப்பட்டு வருகின்றது. எனினும் அரசியல் தீர்வு என்ற சொல்லுக்கு இன்று அகராதியில் அர்த்தம் தேடுகின்ற ஒரு நிலைமைக்கு அது தள்ளப்பட்டு இருக்கின்றது. ஏனெனில் இந்த சொற்பதத்தை பிரயோகித்து அரசியல் நடத்தும் போக்கு இலங்கையில் மட்டுமல்ல, இலங்கை தொடர்பில் இந்தியாவிலும் வியாபித்திருக்கின்றது என்றே கூற வேண்டும்.

60 வருடகால தமிழர் பிரச்சினை தீர்க்கப்படாததால் அது இன்று உலகையே திரும்பிப் பார்க்க வைத்திருக்கின்றது. தேசிய இனப்பிரச்சினை தீர்வுக்கும் அல்ல தமிழ் மக்களின் உரிமைகளை பெற்றுக் கொள்வதற்கும் என நடத்தப்பட்ட ஆயுதப் போராட்டத்தை நியாயப்படுத்த முடியாது. அதே நேரம் அஹிம்சைப் போராட்டம் மற்றும் பேச்சு வார்த்தை என்ற போக்குகளும் சரியான பதில்களை பெற்றுத் தருவதாக இல்லை. அது இழுத்தடிக்கப்படும் ஒரு நிகழ்வாகவே அமைந்திருக்கின்றது.

யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் அரசாங்கம் ஒருவித நலுவல் போக்கினை கடைப்பிடித்து வந்தது. அதாவது யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த கால கட்டத்தில் அரசியல் தீர்வோ இல்லாவிட்டால் அது தொடர்பான பேச்சு வார்த்தைகளோ நியாயமானதல்ல என்றும் புலிகள் ஆயுதங்களை கீழ வைக்க வேண்டும். இல்லாவிட்டால் புலிகள் ஒழித்துக் கட்டப்பட வேண்டும். அவ்வாறு நடந்தால் மாத்திரமே அரசியல் தீர்வுக்கான கட்டங்களுக்கு செல்ல முடியும் என அன்று அரசாங்கம் கூறி வந்தது.

இன்று யுத்தம் நிறைவடைந்து சரியாக 2 வருடங்கள் நிறைவடைந்திருக்கின்றன. ஆனால் அரசாங்கம் கூறிய விடயம் மட்டும் நிறைவேறியதாய் இல்லை. யுத்த வெற்றியை கொண்டாடுவதில் முனைப்புக் காட்டப்படுகின்ற அதே நேரத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணவோ அல்லது யுத்தம் ஏற்பட்டமைக்கான அர்த்தம் கண்டுபிடிக்கப்பட்டு அதற்கான தீர்வினை எட்டுவதற்கோ இங்கு முனைப்புக்கள் காட்டப்படவில்லை என்பது சுட்டிக் காட்டப்பட வேண்டியதாகும்.

இவ்விடயத்தில் இந்திய மத்திய அரசு, தமிழக அரசு மற்றும் இலங்கை அரசு ஆகிய மூன்று தரப்புக்களும் கூட ஏதோ ஒரு வகையில் இலங்கை தமிழர் பிரச்சினை தொடர்பி பலதரப்பட்ட கருத்துக்களை முன் வைத்து வந்த போதிலும் அவை எதுவுமே நடைமுறைப்படுத்தப்படவில்லை.

தமிழக சட்டமன்ற தேர்தலில் தமிழக மக்களால் தூக்கியெறியப்பட்ட முன்னாள் முதலைமச்சரான மு. கருணாநிதி அப்பட்டமான முறையில் இலங்கை தமிழர் விடயத்தில் ஏமாற்று வித்தைகளை கடைப்பிடித்து வந்தார். இலங்கைத் தமிழரை காரணங் காட்டி பல சந்தர்ப் பங்களில் அவர் அரசியல் காய் களை நகர்த்தியி ருந்ததை தற் போது நினைத் துப் பார்க்க வேண்டியிருக் கின்றது. இவர் இலங்கை தமிழர் விவகாரம் தொடர் பில் மத்திய அர சுக்கும் பிரதமர் மன் மோகன் சிங்குக்கும் கடிதங்களை எழுதி மழுப்பிக் கொண்டிருந்தாரே தவிர ஆக்கப்பூர்வமாக நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளவில்லை என்பதை தமிழக சட்டமன்ற தேர்தல் உறுதிப்படுத்தியிருக்கின்றது.

கடந்த இரண்டு வருட கால அரசியல் காய்நகர்த்தல்களை ஆராய்ந்து அதனை நொந்து கொள்ளும் அளவுக்கு கலைஞரின் நிலைமை இன்று பரிதாபத்துக்குரியதாக இருக்கின்றது. அடுத்தவரை ஏமாற்றி பிழைப்பவருக்கு இது தான் கதி என்பது நிரூபணமாகியிருக்கிறது. இலங்கையிலிருந்து தமிழகத்திற்கு செல்கின்ற அரசியல் தலைவர்களை சந்தித்த அன்றைய முதல்வர் கருணாநிதி சாக்குப்போக்கான கதைகளை கூறியும் தமிழ் அரசியல்வாதிகளின் நெஞ்சங்கள் குளிரும் அளவுக்கு கதைகள் பேசியும் அனுப்பி வைக்கும் ஒரு விதத்தை கையாண்டு வந்தார். இதனை இங்குள்ள அரசியல்வாதிகள் தமிழ் மக்களும் கூட நம்பிவிட்டனர். ஏனெனில் அடிக்கடி இந்தியாவுக்கு பயணிக்கின்ற இலங்கையின் ஒரு சில தமிழ் அரசியல்வாதிகளும் இங்கு வந்து தகவல்களை வெளியிடுவதும் அப்படியாகவே அமைந்திருந்தது.

ராஜிவ்காந்தியை படுகொலை செய்த விடுதலைப் புலிகளை பழிவாங்குவதாக நினைத்து சோனியா அம்மையாரின் காங்கிரஸ் கட்சி தமிழ் மக்களை பழிவாங்குவதில் எந்த விதத்திலும் நியாயமாக அமையாது. தொட்டதற்கெல்லாம் இந்தியாவை நாடுகின்ற இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் திருத்தமானதொரு நெருக்கு தலை கொடுத்து இலங்கை தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காணுமாறு பணிப்பதற்கான தகுதி இந்தியாவுக்கு இருக்கின்ற போதிலும் அவ்வாறு நடைபெறாதிருப்பது ஏன் என்ற கேள்வி நியாயமானது தான்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பொ

உறவுக்காரன்

றுத்தவரை தமிழர் பிரச்சினை விடயத்தில் இந்தியாவின் தலையீடு மிக மிக அவசியமானது என்ற நோக்கில் செயற்பட்டு வருகின்றது. இதனை தவறு என்று கூறிவிடவும் முடியாது. ஆனாலும் தொடர்ச்சியாக ஏமாற்றி வருகின்ற ஒரு தரப்பை தொடர்ந்து நம்பிக் கொண்டிருப்பதும் அந்த தரப்பிடமிருந்து நியாயம் பெற்றுத் தரப்படும் என்று நினைப்பதும் கேளிக்கையானது. (20 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

000

நான் சிவனாகிறேன்

தலயின் கையெழுத்து

அஜித் நடிக்கும் 50வது படம் 'மங்காத்தா'. இப்படத்தின் இறுதிக்கட்ட படப்பிடிப்பு ஹைதராபாத்தில் நடைபெற்றுவருகிறது. பிஸியான ஷெட்யூலுக்கு இடையே 1,000 போஸ்டர்களில் தன் கையெழுத்தை போட்டுக்கொண்டிருந்தார் அஜித். என்ன இது வேலையை விட்டுவிட்டு இப்படி கையெழுத்து போட்டுக்கொண்டிருக்கிறாரே என நினைத்து படக்குழுவினரிடம் விசாரித்தோம். அதில் கிடைத்த தகவல் இதோ. 'மங்காத்தா' படத்தின் பாடல் வெளியீடு வரும் 20ஆம் திகதி நடைபெற இருக்கிறது. இத் திகதியில் மே.1 அன்று 40 வினாடிகளில் வெளியான 'விளையாடு மங்காத்தா' பாடல் முழுமையாக ஒரு சிடியில் பதியப்பட்டு விற்பனைக்கு வர இருக்கிறது. இதன் விலை ரூ. 49 மட்டுமே. இப்பாடல் வெளியீட்டுக்கு முன்னால் இப்பாடலின் சிடிக்காக யார் முதலில் முன்பதிவு செய்கிறார்களோ அவர்களில் முதல் ஆயிரம் பேருக்கு அஜித் கையெழுத்திட்ட போஸ்டர் போனஸாக வழங்கப்படவிருக்கிறது. அதற்காகத்தான் 'தல' இப்படி கையெழுத்தா போட்டுக்கிட்டிருக்கிறார் என்றனர்.

இலியானாவுக்கு காய்ச்சல்

நண்பன் பட ஷூட்டிங்கில் ஏற்பட்ட கடும் காய்ச்சல் காரணமாக கோவாவில் உள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் நடிகை இலியானா.

தமிழில் 'கேடி' படத்தில் அறிமுகமாகி பின்னர் தெலுங்கில் நம்பர் ஒன் நாயகியாகத் திகழ்பவர் இலியானா. இப்போது தமிழில் ஷங்கர் இயக்கும் '3 இடியர்ட்ஸ்' ரீ-மேக்கில் விஜய்க்கு ஜோடியாக நடித்துவருகிறார்.

இப்படத்தின் படப்பிடிப்பு 20 நாட்கள் அந்தமானில் நடந்தது. தொடர்ந்து நெதர்லாந்திலுள்ள அம்ஸ்டர்டாம் நகரில் 10 நாட்கள் பாடல் காட்சிகளுக்கான படப்பிடிப்பு நடந்தது. ஓய்வின்றி இந்த படப்பிடிப்புக்களில் கலந்துகொண்டதால் இலியானாவுக்கு கடும் காய்ச்சல் ஏற்பட்டது. இதையடுத்து, ஆம்ஸ்டர்டாமில் இருந்து கோவா திரும்பிய இலியானா அங்குள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். 10 நாட்கள் முழு ஓய்வில் இருக்கவேண்டும் என டாக்டர்கள் அவருக்கு பரிந்துரைத்துள்ளனர். இலியானா மீது தமிழ், தெலுங்கு பட உலகில் தடைவிதிக்க தீவிர ஏற்பாடுகள் நடந்துவரும் சூழலில் அவர் மருத்துவமனையில் சேர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

2500 6

மறைந்த ஹொலிவு
வாட்டரி பர்ரி என்பவர்
னின் அந்தரங்க வாழ்க்
யுள்ளன. கடந்த 1950ஆ
டா, கோல்டன் குளோப்
ரசிகர், ரசிகைகள் பட்டா
இரண்டாவது மனைவி
களை தனது வலையில்
வொரு நாளும் புதுப்புது
வாரத்துக்கு 3 பெண்கள
1947ஆம் ஆண்டு மு
தொடர்புவைத்திருந்தத
யம்ஸ் என்ற பெண்ணை
வயது நடிகையை காதலி
ஸ்டார்ஸ்பெர்க் மற்றும்
டன் மட்டும் ரிச்சர்ட் பர்
தகம் ஹொலிவுட்டில் ப

மைதானம்

சினி பிட்ஸ்

*) சம்மர் ஹொலிடேக்கு கேரளாவில் உள்ள தனது சொந்த ஊருக்கு வந்து ஒரு வாரம் தங்கியிருக்கிறார் அசின்.

*)கன்னடத்தில்

காமெ
நடிக்கி
*) காதல் தே
பட்ட
கைை
வைத்
படத்
மனோ

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பெண்களுடன்....

புட் நடிகர் ரிச்சர்ட் பர்டன் வாழ்க்கை வரலாறு பற்றி ருத் புதிய புத்தகம் வெளியிட்டுள்ளார். அதில் ரிச்சர்ட் பர்ட கை குறித்து பல சுவாரஸ்யமான தகவல்கள் வெளியாகி ஆம் ஆண்டு சினிமா வாழ்க்கையில் நுழைந்த இவர் பெப் மற்றும் டோனி விருதுகளை வாங்கி பிரபலம் அடைந்தார். ாளமும் அதிகரித்தது. இவருக்கு நான்கு மனைவிகள். நடிகை எலிசபெத் டெய்லர். தன்னை நாடிவரும் ரசிகை சிக்கவைப்பது ரிச்சர்ட் பர்டனின் வாடிக்கையாம். ஒவ் ப் பெண்களுடன் பொழுதைக் கழிக்கவிரும்புவாராம். ளுடன் உல்லாசமாக இருப்பாராம்.

தல் 1975ஆம் ஆண்டுவரை இவர் 2,500 பெண்களுடன் தாக அந்தப் புத்தகத்தில் கூறப்பட்டுள்ளது. சிபில் வில்லி ண திருமணம் செய்த மறுநாளே கிளாரி ப்ளூம் என்ற 17 லிக்கத் தொடங்கினாராம். மேரி யூரி, சூசன் கிளார், ப்ளூம் தனது நண்பரின் மனைவி ஜேன் சிம்மான்ஸ் ஆகியோரு ர்டனுக்கு நீண்டகாலத் தொடர்பு இருந்துள்ளது. இந்தப் புத் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மடி கலந்த வேடத்தில் கிறார் ரம்யா நம் பீஸன். தோல்வியால் பாதிக்கப் வர்களின் வாழ்க் யை பின்னணியாக த்து 'வானவில் நாட்கள்' தை இயக்குகிறார் ாகர்.

*) மகள் கார்த்திகா அறிமுக மான 'கோ' பட சிறப்புக் காட் சியை தனது குரு பாரதி ராஜாவுக்கு திரை யிட்டு காட்டி னார் ராதா.

*) 'கண் டேன்' படத்தில் நாயகி ரேஷ்மியை விட சந்தானத்துடன்தான் ஹீரோ சாந்தனுவுக்கு கெமிஸ்ட்ரி நன்றாக இருந்த தாம்.

*) 'பட்டாளம்' படத்தில் அறிமுக மான தீப்தி அடுத்து 'யுகம்' படத்தில் நடிக்கிறார்.

ஒத்து வராது த்ரிஷா

நீச்சல் உடையெல்லாம் எனக்கு ஒத்துவராது என்று நடிகை த்ரிஷா கூறியிருக்கிறார். நட்சத்திர ஹோட்டலில் நிர்வாணக் குளியல், கிழக்கு கடற் கரை சாலையில் உற்சாக பானம் அருந்தி நடுரோட் டில் குத்தாட்டம், நள்ளிரவு பார்ட்டி என பல சர்ச் சைகளில் சிக்கியும் 9 ஆண்டுகாலமாக திரையுல கில் முன்னணி நாயகியாகத் திகழ்ந்துவருபவர் நடி கை த்ரிஷா. அவர் தெலுங்குப் படமொன்றில் டூ-பீஸ் உடையணிந்து நடிப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இது பற்றி அவர் அளித்துள்ள பேட்டியில், முன்புபோல் இல்லாமல் இப்போது படங் களைக் குறைத்துக்கொண்டேன். கொமர்ஷிய லாக நிறைய படங்கள் வருகின்றன. 'அபியும் நானும்', 'மன்மதன் அம்பு', 'விண்ணைத் தாண்டி வருவாயா' போன்ற படங்களில் நடித்த பின் இனி இதுபோல் நடிப்புக்கு முக் கியத்துவமுள்ள வேடங்களில் நடிப்பது என முடிவுசெய்திருக்கிறேன். கொமர்ஷியலாக நடிப்பது தவறில்லை. அப்படி நடிக்க நிறைய புதுமுகங்கள் வந்துவிட்டார்கள். எனவேதான் அதுபோல நடிக்கவந்த 2 தமிழ் படங்களைக் கூட வேண்டாம் என்று கூறிவிட்டேன்.

தெலுங்கில் 'பொடிகாட்' படத் தில் நடிக்கிறேன். வெங்கடேஷ் ஹீரோ. இதில் நடிப்புக்கு நல்ல வாய்ப்பிருக்கிறது. இப்படத்தில் நான் டூ-பீஸ் நீச்சல் உடையணிந்து நடிப்ப தாக சிலர் வதந்தி பரப்பி இருக்கிறார் கள். இதை அறிந்து நான் ஷாக் ஆயிட் டேன். திரையுலகுக்கு வந்து 9 வருடங்கள் ஆகிவிட்டன. இதுவரை அப்படிநடிக்கவில்லை. இனிமேலும் நீச் சல் உடை அணிந்து நடிக்கமாட்டேன். அதெல்லாம் நமக்கு ஒத்துவராது என்று கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெயலலிதாவின் ஆட்சிக்காலத்தில் ஈழத்தமிழருக்கு நிரந்தர தீர்வு கிடைக்குமா?

கடந்த சில நாட்களாகவே நம் நாட்டிலும் தமிழக அரசியல் பற்றித் தான் பேச்சு. செல்வி. ஜெயலலிதாவின் வெற்றியை அவரது கட்சித் தொண்டர்கள் கொண்டாடியதை விட நம்மவர்கள் கொண்டாடியதே அதிகமாகும். கலைஞர் கருணாநிதியின் மீது அப்பட்டமாக இருந்த வெறுப்பே செல்வி. ஜெயலலிதாவின் வெற்றியைக் கொண்டாட காரணமாகியும் விட்டது.

மாறிமாறி ஆட்சிக்கதிரை ஏறுபவர்களை வாழ்த்துவதில் சளைத்தப் போகாத நம்மூர் அரசியல்வாதிகளும் கடிதம் அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். செல்வி. ஜெயலலிதாவின் வெற்றியை நம் நாட்டு நாளிதழ்களும் தலைப்புச் செய்திகளாக்கியிருந்தன. தேசிய நாளிதழ்கள், பிராந்திய நாளிதழ்களென அவற்றினில் பாகுபாடு இருந்திருக்கவில்லை. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை போர்க்குற்ற வாளியாக்கி சர்வதேச நீதிமன்றில் நிறுத்தப்போவதாக அவர் கூறியவை கூட தலைப்புச் செய்திகளாக்கப்பட்டிருந்தன.

முள்ளிவாய்க்காலில் பேரவலத்தின் பின்னர் அதன் ஈராண்டு நினைவு நாள் நிகழ்வு சென்னையில் நடைபெற்றது. அங்கு கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய மூத்த ஊடகவியலாளரொருவர் இன்னுமா ஈழத்தமிழர்கள் எம்மை நம்புகின்றார்கள்? என கேள்வியெழுப்பினார். இன்னும் தொப்புள்கொடி உறவு பற்றி அறிக்கை விட்டுக்கொண்டிருந்த நம்மூர் அரசியலாளர்களுக்கே இக்கேள்வியை அவர் முன்வைத்திருந்தார்.

ஈழத்தமிழர்களுக்காக எதுவுமே செய்யமுடியாது போன இயலாமையே அவரது உரையினில் கேள்வியாக வந்து வீழ்ந்திருந்தது. உண்மையிலேயே ஈழ ஆதரவாளர்கள் பலரதும் நிலை தமிழ்நாட்டில் இதுவாகத்தான் இருக்கிறது.

தமிழகத்தில் மாறிமாறி ஆட்சிப்பீடமேறும் தி.மு.க.வாயினும் சரி, அ.தி.மு.க.வாயினும் சரி, ஈழப்பிரச்சினையை கறிவேப்பிலை போன்றே பயன்படுத்திவந்துள்ளன. தேர்தல் வெற்றிக்காக ஈழத்தமிழர் பிரச்சினையை பெரும்பாலும் பயன்படுத்திக்கொள்ளும் இக்கட்சிகள் வெற்றியின் பின்னர் அனைத்தினையும் மறந்தேபோகின்றன. சாப்பாட்டின் போது அனைவரும் கறிவேப்பிலையைத் தூக்கி எறிந்துவிடுவது போல.

தீவிர புலி எதிர்ப்பாளராக, குறிப்பிட்ட காலப்பகுதியில் இருந்துவந்த செல்வி ஜெயலலிதா தனது வீட்டின் மேலாக விமான எதிர்ப்பு பீரங்கிகளைப் பொருத்தியும் வைத்துக்கொண்டார். வீரப்பன் கொலை, அரச ஊழியர்களுக்கெதிரான கெடுபிடிகளை தொடர்ந்து 2006 ஆம் ஆண்டு தேர்தலில் தோற்றுப் போய் அவர் வீட்டுக்கு அனுப்பப்பட்டார். ஆனாலும், அரசியலில் சுதாகரித்துக்கொண்ட அவர் 2009ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் தனது நிலைப்பாட்டை அப்படியே மாற்றிக் கொண்டிருந்தார்.

ஈழத் தமிழர் பிரச்சினைக்கு தமிழீழமே ஒரேயொரு தீர்வு என தனது தேர்தல் விஞ்ஞாபனத்தினில் அவர் பிரேரித்திருந்தார். தமிழ் மக்கள் எல்லோரும் தமிழீழம் மலர்ந்துவிட்டதாகவே மகிழ்ந்துகொண்டனர். ஆனால், இந்திய நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் அவர் தமிழீழம் பற்றி எதுவுமே அலட்டிக்கொண்டிருக்கவில்லை. நாடாளுமன்றத் தேர்தலை தொடர்ந்து வன்னியில் முழுமையாக கட்டவிழ்ந்து விடப்பட்ட பேரவலம் அனைவரும் அறிந்ததே.

ஆனால், மீண்டும் நடந்துமுடிந்த தமிழக சட்டசபைத் தேர்தலில் ஈழப்பிரச்சினை மீண்டும் கறிவேப்பிலையானது. 'ஸ்பெக்ரம்' நிதிமோசடி, முள்ளிவாய்க்கால் பேரவலம், குடும்பத் தலையீடு என கலைஞர் கருணாநிதிக்கு இம் முறை கண்டங்கள் கூடியே போயிருந்தன. வழமைக்கு மாறாக வெறுமையுடன் இருந்துவந்த ஈழ ஆதரவுத் தரப்புக்கள் முழுவீச்சில் கலைஞருக்கு எதிராக களம் இறங்கியிருந்தன. சீமானின் 'நாம் தமிழர் இயக்கம்' கிராமம் கிராமமாக காங்கிரஸ் கட்சியைப் புறக்கணிக்கச் சொல்லி முழு அளவினில் பிரசாரம் செய்திருந்தது. ஒட்டுமொத்தத்தில் கலைஞரும் கூட்டணியும் தோற்கடிக்கப்பட்டன.

ஈழத்தமிழர் பிரச்சினையின் மைய சூத்திரதாரிகளாக அடையாளம் காணப்பட்ட காங்கிரஸ் கட்சி போட்டியிட்ட 63 தொகுதிகளில் ஆறு தொகுதிகளில் கூட வெற்றிபெற்றிருக்கவில்லை. அதேபோன்றே ஈழ அதரவுப் புலத்தை தாமும் கொண்டிருப்பதாகக் கூறிக்கொண்டு கலைஞருடன் கூட்டுச் சேர்ந்த குற்றத்திற்காக பாட்டாளி மக்கள் கட்சி மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் கூட படுதோல்வியை சந்திக்க வேண்டியிருந்தது. மறுபுறம், தி.மு.க. எதிர்க்கட்சி என்ற நிலையினை கூட முற்றாக இழந்ததொரு தேர்தலாக இதுவே இருந்தது.

ஆனால், தேர்தல் விஞ்ஞாபனத்திற்கு மாறாக வெற்றியீட்டிய பின்னர் ஊடகவியலாளர்களிடையே உரையாற்றிய செல்வி ஜெயலலிதாவின் கருத்துக்கள் வேறாக இருந்தன. ஈழத்தமிழர் பிரச்சினையில் மாநில அரசின் எல்லை குறிப்பிட்ட வரையிலேயே எனத் தெரிவித்த அவர், ஆனாலும், மத்திய அரசுக்கு அழுத்தங்களை தொடர்ந்தும் பிரயோகிக்கப் போவதாக கூறியுள்ளார். மறுபுறத்தே மத்தியில் ஆளும் காங்கிரஸ் கட்சி தி.மு.க.வை கைவிட்டு அ.தி.மு.க. பக்கம் தனது நட்புக்கரங்களை நீட்டியுள்ளது. சட்டசபைத் தேர்தல் காலப் பகுதியினில் கூட தி.மு.க. கூட்டணியை உடைத்துக்கொண்டு காங்கிரஸ் தன் பக்கம் வராதா என இறுதிவரை காத்திருந்தவரே ஜெயலலிதா. அதற்காகவே விஜயகாந்தின் தே.மு.தி.க.வுடன் கூட்டணியை இழுத்தடித்தவர்.

இந்தியாவில் எந்த மாநிலத்தை ஆளுகின்ற தரப்பாயினும் சரி, மத்தியில் ஆட்சியிலிருக்கும் காங்கிரஸ் கட்சியுடன் முரண்பாடான நிலையை விரும்புவதில்லை. பரஸ்பரம் புரிந்துணர்வுடன் செயற்படுவதன் மூலமே ஆட்சியையும் காத்துக்கொள்ள முடியும். முரண்பாடுகள் உச்சம் பெற்றால் ஆளுநர் ஆட்சி அமுலுக்குவருவது தமிழகத்தைப் பொறுத்தவரை புதிதான தொன்றல்ல. ராஜீவ் காந்தி படுகொலையுடன் அத்தகைய சூழல் ஏற்பட்டேயிருந்தது.

ஆனாலும், முதலமைச்சரான பின்னர் செல்வி.ஜெயலலிதாவினால் தமிழீழம் எதனையும் பெற்றுத்தர முடியாதபோதும் ஈழத் தமிழ் மக்களுக்கு நல்லதோர் அரசியல் தீர்வை பெற்றுத்தர அவரால் உதவமுடியும். கணிசமான ஈழத்தமிழ் ஆதரவு தரப்புக்களும் அதையே வலியுறுத்துகின்றன. இரண்டு இலட்சத்திற்கும் அதிகமான மக்கள், உரிமைக்காகப் போராடிய 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளைஞர்களது தியாகங்கள் வீண்போகக் கூடாது. மக்கள் பட்ட துன்பங்களுக்கு நல்லதோர் தீர்வு கிட்டவேண்டும்.

அவ்வகையில் உரிய நிரந்தர அரசியல் தீர்வொன்றை வலியுறுத்தக்கூடிய சூழல் இதுவே. ஐ.நா.வின் போர்க்குற்ற அறிக்கையின் பின்னரான சூழல் அதற்கு வழியோலியிருக்கிறது. வன்னி யுத்தத்தின் பங்காளிகள் என்பதற்கு அப்பால் இலங்கையை வழிக்குக் கொண்டுவர இந்தியாவாலேயே முடியுமென்பதை தமிழ்த் தரப்புக்கள் நம்புகின்றன. அவ்வகையில் இந்திய மத்திய அரசுக்கு அழுத்தங்களை பிரயோகிக்க செல்வி. ஜெயலலிதாவாலும் முடியும். அதுவே ஈழத்தமிழ் மக்களுக்கு செய்யக்கூடிய நல்ல தோர் பிரதிபலனும் ஆகும்.

வாவலன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

1958 வவுனியா மாநில மாநாடு பகுதி - 07

1958 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆம் - 23 ஆம் திகதிகளில் அகில இலங்கைத் தமிழரசுக் கட்சி தனது மாநில மாநாட்டை வவுனியாவில் நடாத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்தது. தமிழரசுத் தொண்டர் மட்டக்களப்பிலிருந்து வவுனியா வருவதற்கு பொலன்னறுவை எனும் சிங்கள மக்கள் வாழும் கிராமத்தின் ஊடாகவே வரவேண்டியிருந்தது. அவ்வாறு மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட தமிழரசுக் கட்சித் தொண்டர்கள் வவுனியாவுக்கு பொலன்னறுவை ஊடாக வந்தபோது புகையிரதத்தை வழிமறித்த குண்டர்கள் 'ஹிங்குராகொடை' என்ற இடத்தில் வைத்து தமிழரசுத் தொண்டர்கள் மீது தாக்குதல் நடாத்தினார்கள்.

இதுவே ஒரு பெரும் இனக்கலவரத்தின் ஆரம்பப் புள்ளியாக அமைந்தது. ஆத்மீக மொழியில் சொல்வதானால் இனமோ தல்களுக்கு 'பிள்ளையார்சுழி போடப்பட்டது' எனலாம். இதுவே 1958 ஆம் ஆண்டு இனக்கலவரம் என வர்ணிக்கப் படுகின்றது. இந்த இனக்கலவரத்தின் போது 300 க்கு மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இவர்களிடம் பாணந்துறை ஸ்ரீகதிர்வேலாயுத சுவாமி கோயில் பிரதம குருக்கள், இளம் குடும்பஸ்தரான சுந்தராமக் குருக்கள் ஆலயத்தின் மத்திய மண்டப பூசை அறையின் அருகே கடுமையாகத் தாக்கப் பட்டு குற்றுயிராகக் கிடந்தவேளை அவர் மீது திராவகம் ஊற்றப்பட்டு உயிரோடு தீ மூட்டிக் கொல்லப்பட்டமை இக்கலவரத்தின் உச்சக்கட்ட கொடுமையாக வரலாற்றுப் பதிவாகியுள்ளது. கொதிக்கும் தாரில் பச்சைக் குழந்தைகள் போடப்பட்டு கொல்லப்பட்டமை கிழக்கு மாகாணத்தில் கரும் புத்தோட்டத்தில் வேலைசெய்த தமிழ்த் தொழிலாளர்கள் உயிருடன் எரிக்கப்பட்டமை போன்ற பல விடயங்களை TARZI VITTACHCHI என்ற ஆங்கிலமொழி ஊடகவியாலாளர் Emergency 58 என்ற தமது நூலில் பதிவுசெய்துள்ளார். இந்த நூல் ஆசிரியர் இலங்கைத் தீவைவிட்டு வெளியேற்றப்பட்டார். இலங்கை அரசு அவர் எழுதிய மேற்படி நூலைத் தடை செய்தது.

1958 ஆம் ஆண்டு நடந்த இந்த இனக் கலவரமானது இலங்கை மாதாவின் பிள்ளைகள் மத்தியில் தேசிய ஒருமைப்பாட்டிற்குப் பெரும்பாதகமான விளைவுகளை ஏற்படுத்தியது. ஒரு இனத்தின் மொழி, மதம், பண்பாடு ஏனைய விழுமியங்கள் குறைத்து மதிப்பீடு செய்யவைத்ததோடு பேசும் மொழியால் வேறுபட்ட மனிதர்கள் மத்தியில் ஐயுறவையும் குரோதத்தையும் வளர்க்கக் காரணமாயிற்று. இந்தக் கலவரத்தால் ஏற்பட்ட பகைமையுணர்வுகள் இனங்களுக்கிடையில் சௌயண்ணியத்தையும் சுகவாழ்வையும் (Co- Existence) தகர்த்துத் தரைமட்டமாக்கியது.

அகில இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைப்பீடத்தைச் சேர்ந்த செல்வநாயகம் உட்பட கைதுசெய்யப்பட்டு வீட்டுக் காவலில் வைக்கப்பட்டனர். தமிழ்த் தலைவர்களைக் கைதுசெய்து தடுப்புக் காவலில் வைத்துவிட்டு பிரதமர் பண்டாரநாயக்கா தமிழ்மொழி நியாயமான உபயோகம் (Reasonable Use of Tamil Language) என்ற 1958ஆம் ஆண்டு 28 ஆம் இலக்க தமிழ்மொழிகள் விஷேட ஏற்பாடுகள் சட்டத்தைப் பாராளுமன்றத்தில் கொண்டுவந்தார். அதனால், தேசிய இனப்பிரச்னைக்கு ஒரு தீர்வும் காணப்படமுடியவில்லை. அந்தச் சட்டத்தை ஒரு குறைப்பிரசவம் (Skill Birth Child) என சட்டவாளர்கள் வர்ணித்தார்கள். அதாவது, இதன் தாற்பரியம் என்னவென்றால் வடக்கு கிழக்கு மாகாணங்களில் அன்றாடம் தமிழ் மொழியிலேயே பரும மாற்றுகின்ற ஸ்தல ஸ்தாபன அமைப்புக்களின் (Loeal Government Employees) ஊழியர்கள் ஊடக வியலாளர்கள் தமிழ் வானொலி அறிவிப்பாளர்கள் போன்றோர்கள் 1956 ஆம் ஆண்டு 33 ஆம் இலக்க சிங்களம் மட்டும் சட்டத்தின் படி சிங்கள மொழியை படிக்கத் தேவையில்லை என எடுத்துரைக்கும் சட்டத்தை கொண்டு வந்தார் எஸ்.டபிள்யூ. ஆர்.டி பண்டாரநாயகா இந்தச் சட்டம் எவரையும் திருப்திப் படுத்தவில்லை. அந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதற்கு சட்ட வலுக்கொடுக்க நடவடிக்கைகள் எவையும் எடுக்கவில்லை.

சட்டம் தொடர்பான உங்கள் சந்தேகங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்

அனுப்பவேண்டிய முகவரி

யாழ் ஒசை

வீரகேசரி கிளைக் காரியாலயம்,

117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

இல்லை என்றால் இயற்கை அன்னை நகைப்பாளே!

யாழ். குடாநாட்டு சந்தைகளில் மரக்கறி வகைகளின் விலைகள் நாளுக்கு நாள் அதிகரித்துப் போவது குறித்து பாவனையாளர்கள் அதிக விலை கொடுத்து மரக்கறி வகைகளை கொள்முதல் செய்யமுடியாமல் கஷ்டப்படுகிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் சகல உணவுப்பொருட்களின் விலையேற்றத்தால் நாளாந்தம் உழைத்து சீவியம் நடத்துபவர்கள் சொல்லொணாத்துயரங்களையும் துன்பங்களையும் அனுபவித்துவருகின்றனர். எமக்கு வேண்டியதை நாமே உற்பத்திசெய்தும் எஞ்சியதை விற்றும் அதிக பணத்தை இலாபகமாக பெறமுடியும். வீட்டில் உள்ள காணித் துண்டை ஓய்வுநேரங்களில் பயன்படுத்தி எமக்கு தேவையான மரக்கறி வகைகளை உற்பத்தி செய்து அதிக பலனை பெறமுடியும்.

இளைஞர்களும் யுவதிகளும் நண்பர்களுடன் வீண் அரட்டை அடித்து பொழுதை கழிக்காமல் வீட்டில் மரக்கறித் தோட்டம் அமைத்து அதில் தங்கள் முழுக்கவனத்தையும் செலுத்திவந்தால் வீட்டுக்குத் தேவையான மரக்கறிகளை நாமே உற்பத்தி செய்யமுடியும்.

பொது சந்தைகளில் அதிக விலை கொடுத்து மரக்கறி வகைகளை கொள்முதல் செய்யவேண்டிய அவசியம வராது. நாற்று மேடைகளை அமைத்து அல்லது விலை கொடுத்து வாங்கியும் நாம் மரக்கறி கன்றுகளை பயிரிட்டு அதிக இலாபத்தைப் பெறடியும். இதைவிட்டு வீட்டுக் கொல்லைப்புற பகுதியில் பூசணி, சுரைக்காய், நீற்றுப் பூசணி போன்றவற்றை நாட்டி அதிக பயன் பெறலாம். இதைவிட வேலியோரங்களில் பயற்றங்காய், புடோல், பாகற்காய் போன்ற பயிர்களை பயிரிட்டு குறுகிய காலத்தில் அதிக இலாபம் பெற முடியும்.

இது இவ்வாறு இருக்க கீரை வகைகளைப் பயிரிட்டு வீட்டுக்குத் தேவையானவற்றை பெறலாம். பொன்னாங்காணி, பசளி போன்ற கீரை வகைகளை உணவுடன் சேர்த்துக்கொடுத்து வந்தால் குழந்தைகள் துரிதமாக வளர்ச்சிபெறுவதுடன் நோய்களை எதிர்க்கும் புரதசத்து கீரைவகைகளில் நிறைய உண்டு. தினசரி கீரையுடன் 1/4 கிலோ துவரம் பருப்பு சேர்த்து சமைத்து குழந்தைகளுக்கும் கொடுத்துவந்தால் குழந்தைகள் துரித வளர்ச்சி பெறுவார்கள். இவ்வாறு வீட்டில் எமக்குக் கிடைக்கும் மேலதிக நேரங்களில் வீட்டுத்தோட்டத்தைச் செய்து எமது அன்றாட வாழ்வாதாரத் தேவைகளைப் பூர்த்திசெய்யலாம்.'காலமும் நேரமும் பொன்னானது' சந்தர்ப்பங்களை சரியாகப் பயன்படுத்தினால் கஷ்டமில்லாத வாழ்க்கையை நாளாந்தம் அனுபவிக்கலாம்.

★ தேவகை நிருபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறுக்கெழுத்துப் போட்டி 28

01	02	03	04	05	■	06	07
08	09	10	■	11	12	13	■
14	■	15	16	17	18	19	20
21	22	23	24	25	■	26	27
28	29	■	30	■	31	■	32
■	33	34	35	■	36	37	38
39	■	40	■	41	42	43	■
44	45	46	47	48	■	49	50

இடமிருந்து வலம்

1. துரோணரை மானசீக குருவாக ஏற்றவன்
6. வேதனை
8. யானையின் மலம்
11. மகாராணி
15. புத்திசாலித்தனம் (குழம்பியுள்ளது)
21. உரிக்க உரிக்க தோல் (குழம்பியுள்ளது)
26. புகைத்தல் (திரும்பியுள்ளது)
28. அன்னை (திரும்பியுள்ளது)
33. நீராகாரம் (திரும்பியுள்ளது)
36. இயற்கை அழிவுகளில் ஒன்று (திரும்பியுள்ளது)
41. விவசாயம்
44. ஒரு நட்சத்திரம்
49. பசித்தாலும் புல் தின்னாத மிருகம்

மேலிருந்து கீழ்

1. வாசனைத் திரவியம்
2. வெட்டும் உபகரணம் (இறுதி எழுத்து இல்லை)
3. தாம்பூலம் (திரும்பியுள்ளது)
5. பெண் தெய்வம் (குழம்பியுள்ளது)
6. வசப்படுத்துதல்
12. பெண்
16. நடிப்பு (குழம்பியுள்ளது)
20. உடலுக்கு தேவையான சத்து (திரும்பியுள்ளது)
22. இருந்து விளையாடும் விளையாட்டு (குழம்பியுள்ளது)
31. மருத்துவ குணமுள்ள சுவைச்சரக்கு (திரும்பியுள்ளது)
34. ஆகாயம் (குழம்பியுள்ளது)
37. ஒரு வகைப் பழம்
39. வணங்கு
41. விளிம்பு

குறுக்கெழுத்துப் போட்டி 26க்கான விடைகள்

அ	ன்	ன	தா	ன	ம்	■	அ
க	த	க	ளி	■	நே	ச	ம்
லி	■	கா	த	ல்	■	■	மி
கை	பு	■	ம்	க	ச	ன்	■
■	ரு	து	■	க்	■	வ	ட
கு	ச	ன்	■	வி	க	ட	ன்
ம்	ன்	ப	ன	■	த்	மு	தி
மி	■	ம்	வ	ர	தி	■	ரு

பாராட்டுப் பெறும் அதிஷ்டசாலிகள்

1. ஜீ. பிரபாகரன்
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

2. திருமதி விஜிதா றெஜினோல்ட்
தொட்டிலடி,
பண்டத்தரிப்பு.

3. அ. செபமாலை
இருபாலை வீதி,
கோண்டாவில்.

குறுக்கெழுத்துப் போட்டி 28க்கான விடைகளை எழுதி ஒரு வாரத்திற்குள் எமக்குக் கிடைக்கக் கூடியதாக தபால் அட்டையில் ஒட்டி அனுப்பிவைக்கவும்.

அனுப்பவேண்டிய முகவரி
குறுக்கெழுத்துப் போட்டி
'யாழ் ஒசை' வீரகேசரி கிளைக்காரியாலயம்,
117, புகையிரத நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

பாராட்டுப்பெறும் முதல் மூன்று அதிஷ்ட சாலிகளின் பெயர்கள் பிரசுரிக்கப்படும்.

அதிகாரப்பகிர்வை...(தொடர்ச்சி)

இது இவ்வாறிருக்க தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இலங்கை அரசாங்கத்துடன் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்தி அது முடிவுறாத நிலையில் தொடர்ந்தும் பேச்சுக்களை நடத்துவதற்கான முயற்சிகளில் இறங்கியுள்ளது. இறுதியாக நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் தமிழ் மக்களால் எதிர்நோக்கப்படுகின்ற அரசியல் தீர்வு தொடர்பில் பேசவிருப்பதாக அரசாங்கமே கூட்டமைப்புக்கு தெரிவித்திருந்தது. இருந்தபோதிலும் பேச்சுவார்த்தை மேசையில் அமர்ந்ததன் பின்னர் அரசியல் தீர்வு என்ற பேச்சு பிற்போடப்பட்டு விட்டது. அது மட்டுமல்லாது போதியளவான நேர காலங்கள் இருந்த போதிலும் அரச தரப்பு தமது கட்சி சார்ந்த ஏனைய உறுப்பு கட்சிகளுடன் பேச்சுக்களை நடத்தவில்லையென்றும் எனவே அந்தக் கட்சிகளுடன் பேசி தீர்க்கமான தொரு தீர்மானத்துக்கு வந்ததன் பின்னர் பேச்சுவார்த்தை மேசையில் அரசியல் தீர்வு தொடர்பிலான பேச்சுக்களை முன்னெடுக்க முடியும் என்றும் கூறி மீண்டும் நழுவியிருக்கின்றது. இவ்வாறு தான் காலா காலமாக தமிழர் பிரச்சினைக்கான தீர்வுகள் ஏமாற்றப்பட்டும் இழுத்தடிக்கப்பட்டும் வருகின்றன. இது இன்று நேற்றல்ல கடந்த 60 வருட காலமாக இடம்பெற்று வருகின்ற ஒரு பாரம்பரியமாகவே அமைந்து விட்டது.

இதேவேளை, தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒரே குழுவாக இணைந்து வந்தால் மாத்திரமே அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தை சாத்தியமாகும் என்ற தோரணையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பல சந்தர்ப்பங்களில் பகிரங்கமாக கூறியிருக்கின்றார். இது தமிழ்க் கட்சிகளுக்கு புரிந்திராத ஒன்று அல்ல. எனினும் இங்குள்ள தமிழ்க் கட்சிகள் ஒன்றுக்கொன்று ஈகோ நிலையில் காணப்படுகின்றனவே தவிர, அனுசரித்து செயற்படும் நிலைமையோ அல்லது தாம் நேசிக்கும் இல்லாவிட்டால் தம்மை நேசிக்கும் அப்பாவித் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் உண்மையான நோக்கத்துடன் செயற்படுவதாகவோ தெரியவில்லை.

வடக்கு- கிழக்கைச் சேர்ந்த தமிழ் அரசியல் கட்சிகள் சில சந்தர்ப்பங்களில் தான் தோன்றித்தனமாக செயற்பட்டு வருவதையும் காண முடிகின்றது. ஒரே நோக்கமும் உண்மைத் தன்மையும் இருக்குமானால் பேதங்களை மறந்து தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படுவதற்கு முன்வந்தால் தீர்வுகளை எட்டுவதற்கு இலகுவான வழிகளை கண்டறிய முடியும். ஆனாலும் மேற்படி தமிழ்க் கட்சிகள் எந்த சந்தர்ப்பத்திலும் ஒன்றிணையப் போவதில்லை. ஒரே அடிப்படையிலான கோரிக்கையை முன்வைக்கப் போவதில்லை. இந்தக் கட்சிகளிடத்தில் நன்றாகவே புலப்படுகின்ற ஏற்றத்தாழ்வுகள், இழுபறி கோலங்களை அரசாங்கம் மிக தெளிவாக அறிந்து வைத்திருக்கின்றது. எனவேதான் நடைபெறாத ஒன்றை பற்றி அரசாங்கம் அச்சமின்றி வலியுறுத்திகொண்டிருக்கின்றது.

அரசாங்கத்தின் இந்த நோக்கத்தை புரிந்த கொண்ட கட்சிகளாக தமிழ்க் கட்சிகள் செயற்படுமேயானால் அரசாங்கத்தினால் விலகிச் செல்ல முடியாத நிலைமை ஏற்படும். இவ்வாறு தங்களுக்குள்ளேயே ஒரு நிலைக்கு வர முடியாத பட்சத்தில் தனித் தனியாக இயங்குவதாலும் தனித் தனியாக பேச்சுக்களை நடத்துவதாலும் இறுதியில் அது எந்த பயனையுமே பெற்றுத் தராத ஒரு துர்ப்பாக்கிய நிலைமைக்கு தள்ளப்படுகின்றது. இதனால் அப்பாவி தமிழ் மக்களே காலா காலமாக ஏமாற்றப் பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

உரிமைப் போராட்டத்தில் ஒன்றிணைய முடியாத தமிழ் தரப்பு தமிழகத்தையும் இந்தியாவையும் நம்பியிருப்பதில் பயனில்லை என்பதை எப்போதுதான் உணர்ந்து கொள்ளப் போகின்றதோ தெரியவில்லை.

தற்போது தமிழக புதிய முதல்வராக தெரிவாகியுள்ள செல்வி ஜெயலலிதா தனிப் பெரும் பலத்துடன் ஆட்சியமைத்திருக்கின்றார். யுத்தம் நடைபெற்ற காலங்களில் இவரது கருத்து வேறுவிதமாக அமைந்திருந்தது. அதாவது யுத்தம் நடைபெறுகின்ற போது இறப்புக்கள் சகஜமானதுதான். அதனை பொருட்படுத்த முடியாது என்ற வகையில் கூறியிருந்தார். அது மடடுமல்லாது, அவரது முன்னைய ஆட்சிக் காலத்தின்போது கூட இலங்கை தமிழர் விவகாரத்தில் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. இந்நிலையில் தனிப் பெரும் ஆட்சியமைத்துள்ள அவர் எந்த வகையில் அயல் நாடான எமது நாட்டின் பிரச்சினைகளுக்காக தன்னை ஈடுபடுத்துவார் என்பது கேள்விக்குறிதான்.

தமிழக புதிய முதல்வருக்கு வாழ்த்துக்களை தெரிவிப்பதில் தவறுகிடையாது. எமது பிரச்சினைகளில் தலையீடு செய்யுமாறு கோரிக்கை விடுப்பதிலும் பிழையில்லை. இருந்தபோதிலும் இன்றுவரையிலும் இந்திய மத்திய அரசும் சரி இல்லாவிட்டால் தமிழக அரசும் சரி அந்த இருதரப்புகளுமே இலங்கைத் தமிழர் விடயத்தில் ஏமாற்றுத் தன்மையை கடைப்பிடித்து வருகின்றது. எனவே ஏமாற்றுப் பேர்வழிகளிடத்தில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதும் அறிந்திருக்க வேண்டிய விடயமாகும்.

தமிழர் பிரச்சினைக்கு தீர்வு என்றவுடன் இலங்கை- இந்திய ஒப்பந்தமே முதலில் நினைவுக்கு வருகின்றது. அந்த ஒப்பந்தம் முறையாக அமுல்படுத்தப்பட்டிருக்குமானால் இன்று ஓரளவிலேனும் நிம்மதி பெருமூச்சினை விடக் கூடியதாக அமைந்திருக்கும். ஆனாலும் அது நடைபெறவில்லை. இதேவகையில் யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் 13 பிளஸ் என்ற ஒரு சொல்லை இந்தியா இலங்கைக்கு அறிமுகப்படுத்தியது. இதனை நிச்சயமாக நிறைவேற்றப் போவதாகவும் இலங்கை தரப்பிலிருந்து இந்தியாவுக்கு உத்தரவாதமளிக்கப்பட்டது. இதே உத்தரவாதம் இலங்கை மக்களுக்கும் தமிழ்க் கட்சிகளுக்கும் வழங்கப்பட்டது. எதுவுமே நிறைவேறியதாக இல்லை.

இந்நிலையிலேயே தற்போதைய கால கட்டத்திலும் மீண்டும் 13 பிளஸ் என்ற கதை அடிபடுகிறது. மறுபுறத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து வருகின்றது. இவையெல்லாவற்றுக்கும் மேலாக அரசியல் தீர்வு என்ற சொல்லை தேடி அலையும் வகையில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை கொண்டிருக்கின்ற அரசாங்கத்துக்கு உண்மையாகவே தமிழ் மக்கள் மீது அக்கறையும் அன்பும் இருக்குமானால் தமிழ் மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளையும் யுத்தம் ஏற்பட்டமைக்கான உண்மையான காரணங்களையும் சிங்கள மக்கள் மத்தியில் விளக்கி புரிய வைத்து தீர்க்கமானதொரு தீர்மானத்தை எட்ட முடியும். ஆனால் இந்த இலகுவான செயன்முறை எந்தக் காரணத்துக்காக இழுத்தடிக்கப்படுகின்றது என்பது புரியாத புதிராகவே இருக்கின்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

தடம் மாறும் யாழ்ப்பாணக் கலாசாரம்

'கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்' என்ற பழமொழி அந்தக் காலத்துக்குப் பொருத்தமாக இருக்கலாம். ஆனால், இந்தக் காலத்திற்குப் பொருந்தாது என்பதற்கு பல சம்பவங்கள் யாழ். குடாநாட்டில் நடந்தேறுகின்றன.

இன்றைய காலத்தில் தமிழர் பண்பாட்டியலில் கணவன்மார் கல், புல் முதலிய அஃறிணைப் பொருட்களாக ஒருசில மனைவிமாரால் கணிக்கப்பட்டுவருவது- நடத்தப்பட்டுவருவது இன்றைய யதார்த்த நிலை.

பணத்திற்காக தொட்டுத் தாலிகட்டிய கணவனையே உதறி எறிந்துவிட்டு இன்னோர் ஆண்துணையுடன் சுற்றித்திரிந்த ஒரு பெண்ணின் கதை பற்றி அண்மையில் இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தோம்.

இச் சம்பவத்தைப் போலவே தமது ஊரிலும் வாழ்ந்துகொண்டிருக்கும் நன்றி கெட்ட - நடத்தை கெட்ட பெண்ணொருத்தியின் வாழ்வியல் குறித்தும் அன்பர் ஒருவர் மனம் வெதும்பி 'எமது ஊரில் நடந்த உண்மைச் சம்பவம்' என்று தலைப்பிட்டு 'யாழ் ஓசை'க்கு எழுதி அனுப்பியிருந்தார். எனவே, அச் சம்பவம் குறித்து இப்பத்தியில் பார்க்கலாம்.

யாழ்ப்பாணத்தின் வட பால் அமைந்திருக்கிறது தெல்லிப்பழை என்ற வனப்பு மிக்க குக்கிராமம். காலம் செய்த கோலத்தால் யுத்தத்தின் கோரத்தாண்டவத்தால் அக்கிராம மக்கள் சுமார் 15 வருடங்களுக்கு முன்பே அக்கிராமத்தை விட்டுப் பிரிய மனமின்றி தமது இல்லிடங்களை விட்டுப் புறப்பட்டனர். அப்படித்தான் அந்தச் சிறிய குடும்பம் ஒன்றும் இடம் பெயர்ந்து வலிகாமம் பகுதியிலுள்ள சிற்றூர் ஒன்றில் தஞ்சமடைந்திருந்தது.

அக் குடும்பத்தில் குல விளக்காக விளங்கிய மூத்த மகள் தான் ரதி. (பெயர் மாற்றப்பட்டுள்ளது) அவள் அக்குடும்பத்தின் பொறுப்புமிக்க பெண்ணாகவும் ஒழுக்கமான கண்ணியம் நிறைந்த பெண்ணாகவும் திகழ்ந்தாள். யுத்த அரக்கனின் முரட்டுக்கரங்கள் அவளை தொடர்ந்து கல்வி கற்பதற்கு விடவில்லை. குடும்பத்தை கவனித்து வீட்டு வேலைகளைச் செய்வது தான் அவளுக்கு ஒப்படைக்கப்பட்ட வேலை. இவ்வாறு நாட்களும் நகர்ந்தன. மாதங்கள் வருடங்களாயின.

இவ்வேளையில் தான் ரதியின் வாழ்வில் மாறுதல்கள் ஏற்பட்டன. அவ்வூரில் வசிக்கும் இளைஞன் ஒருவனுடன் பழக்கம் ஏற்பட்டது. அந்த இளைஞனும் அவளுக்குரிய தேவைகளை முகம் சுழிக்காமல் நிறைவேற்றிக் கொடுத்தான். இடம் பெயர்ந்து அவலநிலையில் இருந்த அக்குடும்பத்திற்கு அவ்விளைஞனின் வரவு சற்று ஆதரவைக் கொடுத்தது. அவ்விளைஞனுக்கும் ரதிக்குமிடையேயிருந்த நட்பு காதலாக மாறியது. இருவரும் தனிமையில் இருந்து இன்பம் அனுபவிக்கும் வரை அவர்களது உறவு நீண்டுசென்றது.

''நான் உங்களை மிகவும் விரும்புகிறேன். எனது உடல், பொருள், ஆவி அனைத்தையும் உங்களிடமே ஒப்படைக்கிறேன். என்னை கடைசி வரைக்கும் கைவிடமாட்டீர்கள் தானே?'' என்று அந்த இளைஞனான மதனை நோக்கி (பெயர் மாற்றப்பட்டுள்ளது) பரிதாபமாக கேட்பாள் ரதி. ''ஏய் என்ன இப்படிச் சொல்லுகிறாய்? சத்தியமாய்ச் சொல்லுறன் எனது உயிர் உடலில் நிலைக்கும் வரைக்கும் நீதான் என் மனைவி. உன்னைத் தவிர வேறு எவளையும் நான் மனதினால் கூட தீண்ட மாட்டேன். எங்களூரில் உள்ள பிள்ளையார் மீது சத்தியம் செய்கிறேன்'' என்றான் மதன். மதனது வாக்குறுதி ரதியின் மனதின் அடியாழத்தைத் தொட்டது. இருவரும் காதல் வானில் சிறகடித்துப் பறந்தனர்.

இரு வீட்டாரது சம்மதத்துடன் அவர்களுக்கு இடையிலான திருமணமும் நிறைவுபெற்றது. புதுமணத் தம்பதிகள் என்ற குதூகலத்துடன் அவர்கள் திருமண வாழ்க்கை உருண்டோடின. இவர்களுக்கு மூன்று பிள்ளைகள். இரண்டு ஆண்பிள்ளைகளும் ஒரு பெண்பிள்ளையும். மதனுக்கோ வெளிநாடு சென்று குடும்பத்தை நன்நிலைக்குக் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணம் மனதில் உதித்தது.

அவன் எண்ணமும் வீண் போகவில்லை. தனது குடும்பக் கஷ்டத்தை போக்குவதற்கு இதைத் தவிர வேறு தெரிவுகள் அவனிடத்தில் இருக்கவில்லை போலும். சுமார் 04 வருடங்களுக்கு முன்னர் டோகாவிற்குச் சென்று தனது உதிரத்தை ஊதியமாக்கினான். கிடைக்கும் பணத்தில் பெரும்பகுதியை தனது குடும்பத்தின் செலவுக்காக அனுப்பிவிடுவான். இறுதியில் வெளிநாட்டு வாழ்க்கை வெறுத்துப் போய்விட்டது. வேலையும் பிடிக்காமல் போனதால் சென்று ஒருவருடத்தின் பின் தனது நாடு திரும்பினான். தனது சொந்த ஊரில் வேலைகள் கிடைக்காததால் கொழும்பில் தனியார் கம்பனி ஒன்றில் வேலைக்குச் சேர்ந்தான். இந்த நேரத்தில் 'ஏ-9' நெடுஞ்சாலை பூட்டப்பட்டிருந்த நேரம். யாழ். குடாநாட்டிற்கும் தென் பகுதிக்குமான தொடர்புகள் கடல்வழியாகவும் வான் வழியாகவும் இடம்பெற்ற வேளை அது. இதனால், கொழும்பில் வேலை செய்யும் கணவனை இடையிடையே சென்று பார்வையிட்டு நலன் விசாரிப்பது ரதியின் வழக்கம். கணவனைப் பார்த்துவிட்டுத் திரும்பி வரும்போது வெறுங்கையுடன் வராமல் புடைவைகளை கொண்டுவந்து விற்று தனது போக்குவரத்துச் செலவை ஈடு செய்தாள். ஆரம்பத்தில் போக்குவரத்துச் செலவுக்காக மேற்கொள்ளப்பட்ட புடைவை வியாபாரம் அவளுக்கு நல்ல அதிஷ்டத்தைக் கொடுத்திருக்க வேண்டும். புடைவை வியாபாரத்தில் சுமாரான வருமானமும் அவளுக்கு கிடைத்தது. பிள்ளைகளை ரதியினுடைய பெற்றோர் கவனித்துக் கொண்டனர். இந்த நிலையில், நாட்டில் சூழ்ந்திருந்த போர் மேகங்கள் படிப்படியாக மறைந்து அமைதி நிலை கருக்கொள்ளத் தொடங்கியது. ஏ-9 நெடுஞ்சாலை போக்குவரத்திற்காக திறக்கப்பட்டது. மதன் சொந்த ஊருக்கு திரும்பிவந்து தான் உழைத்த பணத்தைக் கொண்டு சுயதொழில் ஒன்றை நடத்தலானான். ஆனால், ரதியோ அடிக்கடி கொழும்பு சென்று தனது வியாபாரத்தைப் பெருக்குவதிலேயே குறியாக இருந்தாள். இந்த நிலையில் தான் அந்தக் குடும்பத்தில் விதி விளையாடியது. அடிக்கடி கொழும்பு சென்றுவந்த ரதி கனடாவில் இருந்துவந்த ஒருவருடன் பழகும் வாய்ப்பு கிடைத்தது. ஏனெனில், கனடாவிலிருந்து வந்த அருள் என்பவரின் சொந்த ஊரும் ரதி தற்போது இருக்கும் ஊரும் ஒன்றென்றபடியால் இருவருக்கிடையிலான நெருக்கம் படுக்கையறைவரை சென்றது. கொழும்பில் இருவரும் ஒன்றாக ஹோட்டல்களிலும், வாடி வீடு (ரெஸ்ற் ஹவுஸ்) களிலும் 'ரூம்' எடுத்துத் தங்கி தமது அன்பின் நெருக்கத்தை - 'உறவின் ஆழத்தை' இடையிடை புதுப்பித்துக் கொண்டிருந்தனர். இறுதியில் தனது ஊருக்கே அழைத்துவந்து கணவனுக்கு அறிமுகப்படுத்தி தனது வீட்டில் தங்கவைத்தாள். ஆரம்பத்தில் மதன் தப்பாக நினைக்கவில்லை. நாட்கள் செல்லச் செல்ல தனது மனைவியின் நடத்தையில் மாற்றங்களை அவதானித்தான். தன் மீதான அக்கறையின்றி கனடாவிலிருந்து வந்தவனுடன் நெருக்கமாகப் பழகுவது அதிகரித்தது. இதனைக் கண்டித்த கணவனை தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி வீட்டைவிட்டே துரத்திவிட்டாள். இதனை அறிந்த அவ் வீட்டின் உரிமையாளர் ரதியை வீட்டைவிட்டு எழுப்பி விட்டார். இதனால், திகைத்து அநாதரவாக நின்ற ரதிக்கு கனடாவில் இருந்து வந்த அருள் உதவிசெய்வதாகக் கூறி தனது பணபலத்தால் அவ்வூரிலேயே வீடொன்றை வாங்கிப் பரிசளித்து விட்டு மீண்டும் கனடா சென்றான். இத்தனைக்கும் அருளுக்கு கனடாவில் மனைவி, பிள்ளைகள் இருக்கின்றனர். ரதிக்கு அது தெரிந்தும் பணத்திற்கு அடிமைப்பட்டு தனது கணவனையே வீட்டை விட்டுத் துரத்தினாள். கனடா சென்ற அருள் கனடாவிற்குச் செல்வதும் இங்கு வந்து ரதியுடன் தங்குவதுமாக இருக்கிறான். மதனோ பைத்தியம் பிடித்தவன் போல் தெருத் தெருவாக அலைகிறான். இச்சம்பவம் அவ்வூரில் உள்ள எல்லோருக்குமே தெரியும் என்பதால் இடம், பெயர்களை பிரசுரிக்கவேண்டாம் என அந்த அன்பர் கேட்டுக்கொண்டபடியால் பெயரை மாற்றிப் பிரசுரிக்கவேண்டிய தேவை எழுந்தது.

அவ்வூர் மக்கள் ஒன்றுசேர்ந்து மதனின் அவலநிலையை எடுத்துக் கூறி ரதியுடன் சமரசம் செய்வதற்கு ரதியிடமும் அவளின் பெற்றோரிடமும் சென்றபோது ரதியின் பெற்றோர் கூறிய பதில் இதுதான், ''பிள்ளை மதனைக் கட்டி என்னத்தைக் கண்டாள்? அவனால் இவளது குடும்பத்தைக் காப்பாற்றமுடியாது. இப்போ அருள் மூலம் அவளுக்கு கிடைத்த வாழ்க்கையை குழப்பாதீங்கோ'' என்பது தான். அப்போது தான் மதனுக்கு தான் ரதிக்கு பிள்ளையாரை சாட்சியாக வைத்து செய்த சத்தியம் அவன் மனதில் எதிரொலித்தது. தான் செய்த சத்தியத்தைக் காப்பாற்றுவதில் உறுதியுடன் இருக்கிறான்.

இறுதி மூச்சுவரை அவளின் நினைவுகளோடு...

தொகுப்பு: உதிஷ்டிரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்த ஊர் சென்றும் தொழில் செய்ய முடியாது தவிக்கும் வலித்தூண்டல் மக்கள்

யாழ். குடாநாட்டின் வலி. வடக்குப் பிரதேசத்தில் அண்மைக்காலத்தில் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு வருகின்றனர். மீள்குடியமர்த்தப்பட்ட இவர்கள் தமது வாழ்வாதாரத்துக்கான எதுவித அடிப்படை வசதிகளும் இல்லாமல் கஷ்டப்படுகின்றனர்.

கடந்த 3 மாதங்களுக்கு முன்னர் மீள்குடியமர்த்தப்பட்ட வலித்தூண்டல் கிராம மக்கள் குடிதண்ணீருக்கும் சொந்த தொழில் செய்யமுடியாமலும் துன்பப்பட்டு வருகின்றார்கள்.

மீள்குடியேற்றம் என கூறி எதுவித அடிப்படை வசதிகளும் செய்துதராமல் எம்மை மீள்குடியேற்றம் செய்துள்ளார்கள். இது நாம் எமது ஊரில் நிம்மதியுடன் வாழலாம்; எமது கடலில் எந்நேரமும் தொழில்செய்ய முடியும் என்ற அவாவில் எமது சொந்த இடத்திற்கு வந்தால் நாம் நினைத்தது எதையும் செய்யமுடியாதுள்ளது என வலித்தூண்டல் கடற்றொழிலாளர் சங்க பொருளாளர் சூசைதாசன் எட்வின் ராசா தெரிவிக்கின்றார்.

தொழில்செய்வதற்கு, எமக்கு முன்னால் உள்ள - ஆண்டாண்டு காலமாக தொழில்செய்த கடலுக்குள் இறங்குவதற்கு கடற்படையினர் தடை விதிக்கின்றனர். இங்கு இறங்கவேண்டாம்; சேந்தான்குளம் சென்று அங்கு தொழில் செய்யுங்கள். ஆனால், அங்கு சென்றால் அங்கு பல பகுதிகளை சேர்ந்த நம்மவர்களும் தொழில்செய்கிறார்கள். இட நெருக்கடியையும் சந்திக்கின்றோம். அதனையும் சமாளித்து தொழில்செய்தால் எமது கடற்றொழில் உபகரணங்கள் காணாமல் போகின்றன. இதனால், எமது சொந்த தொழிலையே செய்யமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். இது தொடர்பாக கதைக்க வேண்டியவர்களிடம் கதைத்தாயிற்று. பதில் எதுவும் இல்லை.

எமது பகுதியில் முக்கியமான தொழிலே கடற்றொழில்தான். சொந்த இடத்தில் இருக்கலாம் எனக் கூறிவிட்டு சொந்த இடத்தில் தொழில் செய்யமுடியாததன் காரணத்தால் மீளவும் இருந்த இடத்திற்குச் செல்ல வேண்டிய நிலைக்கு வந்துள்ளோம். மீளக்குடியேற்றத்திற்கு 50 குடும்பங்கள் வந்தால் இன்று 15-20 குடும்பங்களே தற்போது சொந்த இடத்தில் இருக்கின்றனர்.

அருளப்பு (கடற்றொழிலாளி)

மீள்குடியேறி 3 மாதம் முடிவடையும் நிலையில் 12 தகரங்களை மட்டும் அரசாங்கம் தந்துள்ளது. பல நிறுவனங்கள் வருகின்றன. விபரங்கள் பதிகிறார்கள். வருவார்கள் போகிறார்கள். வாகனங்களில் வருபவர்களைப் பார்த்தால் என்னத்தையோ தந்துவிட்டு போகிறார்கள் என்ற நினைப்புத்தான். ஆனால், ஒன்றும் இல்லை. சொந்த இடத்தில் நிம்மதியுடன் வாழலாம் என்றால் தண்ணீர் கூட இல்லை. பிரதேச சபையால் ஒரு நாளைக்கு ஒரு தடவையே குடிதண்ணீர் விநியோகம் நடைபெறுகிறது. இது போதியதாக இல்லை. தண்ணீருக்காக காத்திருக்க வேண்டிய நிலையே உள்ளது. மலசல கூடம் இல்லை. எங்கு போவது ஒரே பற்றைக் காடாகவே உள்ளது. அநாதைகளாக இருக்கின்றோம். எமது தொழிலை எமது இடத்தில் செய்வதற்கு அனுமதி வேண்டும் என அருளப்பு என்னும் கடற்றொழிலாளி தெரிவிக்கின்றார்.

> **"எமது இடத்திற்கு வந்தோம்; மலசலகூடம் இல்லை. குடி தண்ணீரை பெறுவதற்கு காத்திருக்க வேண்டும். மழைக்காலங்களில் எமது வீட்டில் இருக்கமுடியாது. தகரம் தந்தார்கள். அதனை வைத்து கூரைக்கு போட்டு கற்களையோ பாரத்தையோ வைத்துள்ளோம். எப்போது அவை எமது தலையை பதம் பார்க்கும் என்று தெரியாது."**

எமது இடத்திற்கு வந்தோம், மலசலகூடம் இல்லை. குடி தண்ணீரை பெறுவதற்கு காத்திருக்கவேண்டும். மழைக்காலங்களில் எமது வீட்டில் இருக்க முடியாது. தகரம் தந்தார்கள். அதனை வைத்து கூரைக்கு போட்டு கற்களையோ பாரத்தையோ வைத்துள்ளோம். எப்போது அவை எமது தலையை பதம் பார்க்கும் என்று தெரியாது.

எமது பிள்ளைகள் பாடசாலை செல்லமுடியாது. முன்பள்ளியில்லை. இதனால், அவர்களுக்கான படிப்பை தொடரமுடியாதுள்ளது.

எமக்கு ஓரளவு அடிப்படை வசதிகளை செய்துதந்தால் கூட எமது சீவியத்தை நாமே பார்த்துக்கொள்ள முடியும் என மனம் வெதும்பி தெரிவித்தார்.

இப்பகுதிக்கு என வருகின்ற உதவிப்பொருட்கள் கூட அருகில் உள்ள பகுதிக்கு மாற்றப்படுகின்றன என அரசாங்க உத்தியோகத்தர்கள் தெரிவிக்கிறார்கள். எங்களுக்கு அடிப்படை வசதி செய்துதந்தால் நாம் மீளக் குடியமர்வோம் என பெண்மணி ஒருவர் தெரிவிக்கின்றார்.

சொந்த ஊர் சென்ற பின்னரும் நிம்மதியாக வாழமுடியாது பரிதவிக்கும் இவர்களுக்கு அடிப்படை உதவிகளைப் பெறுவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அக்கறையுடன் செயற்பட வேண்டும்.

•வலிமாறிலினை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கையின் வெளிப்பாடே சடங்கு ஆற்றுகை

●எஸ்.ரி.குமரன்

(சென்ற வராத் தொடர்ச்சி...)

சடங்கானது சமூக ஒன்றுகூடலுக்கான சாதகனமாக சமூகப்பிரச்சினையை தீர்க்கும் கருவியாகவும் மேற்கொள்ளப்படுகின்றது.

கடவுளுடைய கட்டளையை பெற சடங்கானது மேற்கொள்ளப்படுகின்றது. சடங்கு வழிபாட்டு முறைகள் ஆகமம் சாரா முறையில் வழிபாடியற்றப்படுகிறது. சடங்கானது தொழில்விருத்திக்காகவும் நோய் நொடியற்ற வாழ்க்கை நடத்துவதற்காகவும் வருடா வருடம் நிகழ்த்தப்படுகிறது. உதாரணமாக, தீ மிதிப்பு சடங்கின் போது ஒருவரிடம் ஏன் செய்யப்படுகின்றது எனக் கேட்டபோது அவர், ''தம்பி என்னுடைய பிள்ளைக்கு தீராத வருத்தமாக இருந்தது. மருந்து எல்லாம் எடுத்துப் பார்த்தும் சரிவரவில்லை. பிறகு எங்கடை வைரவருக்கு நேர்த்திவைச்சாப் பிறகு தான் மாறினது'' என கூறினார். இச்சடங்கானது பிரச்சினையான மனநிலையில் இருப்பவர் விடுதலை பெற உதவுகின்றது.

சடங்கானது இறைவனை சாந்திப்படுத்துவதற்காகவும் உரிய காலப் பகுதியில் சடங்கை ஆற்றாதுவிட்டால் இறைவனின் தண்டனைக்கு ஆளாகவேண்டுமென்ற நம்பிக்கையின் அடிப்படையிலும் மழை, வளம், நாடு செழிக்க வேண்டியும் மேற்கொள்ளப்படுகின்றது.

சடங்கு எவ்வாறு ஆற்றுகை செய்யப்படுகின்றது?

சடங்கு நடைபெறப் போகின்றது என்றால் சடங்கினை நடத்தும் சமூகத்தவர்கள் அனைவரும் கூடி சடங்கை செய்வது பற்றி தீர்மானிப்பார்கள். சடங்குக்கு உரிய ஒழுங்குகள் எல்லாவற்றையும் சமூகத்தவர் தாமாகவே முன்வந்து ஏற்று செய்கின்ற நிலை காணப்படுகின்றது.

சடங்கில் ஒழுங்கமைத்தல் என்பது முக்கியம் பெறுகின்றது. சடங்கை ஒழுங்கமைப்பவர்கள் ஆலயச் சூழலை துப்புரவுசெய்தல், வேண்டிய பொருட்கள், பணம் முதலியவற்றை சமூகத்திடம் பறை அடித்து அறிவிக்கும் பண்பு ஆரம்ப காலங்களில் காணப்பட்டது. தற்போது துண்டுப்பிரசுரம் அடித்து அறிவிக்கும் முறை காணப்படுகின்றது.

சடங்கு நிகழத்தப்படும் ஆலயச் சூழலானது சமூகத்தில் இருந்து ஒதுக்குப்புறமாகவும் இயற்கையான மரங்கள் சூழ்ந்ததாகவும் அம் மரத்தில் ஒன்றே தெய்வத்தின் மூல உற்பத்தி ஸ்தானமாகவும் காணப்படுகின்றது. சடங்கை வழிப்படுத்துபவர் தலைமைப் பூசாரியாவார். குறித்த சமூகத்தின் வழிவந்தவராகவும் பரம்பரையாக பூசை செய்பவராகவும் பங்குபற்றுவோரை தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளவராகவும் காணப்படுகின்றார்.

சடங்கானது தொடங்குவதற்கு ஒரு வாரத்துக்கு முன்பே விளக்கு வைத்தல் என்பது இடம்பெறுகின்றது. விளக்கு வைத்தல் என்பது சடங்கின் தொடக்க நாளாகும். விளக்கு வைத்து 8 ஆம் நாள் பெரும் சடங்கு நடைபெறுகின்றது.

தயார்படுத்தல் (பயிற்சி)

சடங்கிற்காக ஆயத்தங்களை செய்தல் தயார்படுத்தல் என்பதாகும். சடங்கு அளிக்கையானது பரம்பரையாக எமது சந்ததியால் ஆற்றப்படுகின்றது. இச் சடங்கினை ஆற்றுவதற்கு பூசாரி மட்டும் தயார் நிலையில் இருந்தால் போதாது. சடங்கினை ஆற்றுகின்ற சமூகத்தவர்கள் சடங்கிற்கான ஒவ்வொரு பொறுப்புக்கும் உரியவர்களாய் தயார் நிலையில் இருத்தல் வேண்டும். இச் செயற்பாட்டிற்கான பயிற்சியை சமூகத்தின் முன்னோர் செய்த செயற்பாட்டின் ஊடாகப் பெறுகின்றார்.

(தொடரும்...)

HOME டிப்ஸ்

● காற்றுப் புகாத பேணியில் பிளாட்டிங் பேப்பர் வைத்து பிஸ்கட்டுகளை வைத்தால் அவை மொரமொரப்பாக இருக்கும்.

● வெங்காயத்தை துருவும் போது வேர்ப் பகுதியை வெட்டாமல் அந்தப் பகுதியைப் பிடித்துக் கொண்டு கீழிருந்து துருவினால் அதன் மடிப்புக்கள் கலையாமல் அப்படியே துருவ முடியும்.

● வெஜ்டபிள் ஊறுகாய் அதிகம் ஊறாமல் இருக்க சூடான வினிகரை மிருதுவான காய்களான வெள்ளரிக்காய் போன்றவற்றின் மீது ஊற்றலாம்.

● சர்க்கரை கெட்டிப் பட்டுப் போயிருந்தால் அந்த டப்பாவினுள் ஒரு ரொட்டித் துண்டை வைத்து அழுத்தி மூடவும். சில மணி நேரங்களில் சர்க்கரை உதிர்ந்து விடும்.

● ஊறுகாயின் மீது வெள்ளைப் படலம் படியாமல் இருக்க மெல்லிய மஸ்லின் துணிப் பையில் கடுகைப் போட்டு ஜாடியை மூடுமுன் உள்ளே வைக்கவும்.

● பாலேட்டைத் தயிர் கலக்காமல் இருக்க எடுத்து குளிர் சாதனப் பெட்டியில் சேகரித்து வைக்கவும். அந்தப் பாலேட்டிலிருந்து தயாரிக்கப்படும் மோர் புளிக்காமலும் கசந்து போகாமலும் இருக்கும்.

● உறையும் பெட்டியில் தக்காளிப் பழங்களை வைத்திருந்தால் அதன் மேல்தோலை எளிதாக எடுத்துவிட்டு அதை நறுக்க முடியும்.

● ஜாம், ஜெல்லி, பழச்சாறு போன்றவற்றை நீண்ட நாட்கள் கெடாமல் இருக்க ஜாடியின் கார்க்கை சீல் செய்ய வேண்டும். அதற்கு முன் கார்க்கை எண்ணெயில் சில நிமிடங்கள் ஊறவைக்க வேண்டும்.

● வீட்டில் தயாரித்த வெண்ணெயைக் காய்ச்சிய பிறகு மீதமிருப்பதை கொட்டிவிட வேண்டாம். மீத மிருப்பதுடன் குளிர்ந்த நீரைச் சேர்த்துக் குளிர் சாதானப் பெட்டியில் வைக்கவும். 8 மணி நேரத்திற்கு பிறகு பாத்திரத்தின் மேலே நெய் மிதக்கும் ஓரங்களில் நெய் ஒட்டிக்கொண்டிருக்கும் பூரி பரோட்டா செய்யும் மாவுடன் இந்த நெய்யைச் சேர்த்துப் பிசையலாம்.

● பச்சை மிளகாய் வழியாக நூலைக் கோர்த்து ஒரு ஆணியில் மாட்டவும். அவை காய்ந்து சிவப்பாக மாறும். முழு மிகாயாகவோ அரைத்தோ அதைப் பயன்படுத்தலாம்.

● ரொட்டித் தூள் அவசரமாகத் தேவைப்பட்டால் பட்டர் பிஸ்கட்டுகளை மிக்ஸியிலோ அம்மியிலோ போட்டு அரைத்துக் கொள்ளலாம்.

● முட்டை வெள்ளைக் கருவை நுரை வரும் வரை அடிக்கவும். சிறு கொத்துக்களாகப் பச்சை அல்லது கறுப்பு திராட்சைகளை முதலில் வெள்ளைக் கருவில் தோய்த்துப் பிறகு பெரிய துகளான சர்க்கரையில் தோய்த்து எடுத்துக் காய வைக்கவும். பனி படிந்த அழகான தோற்றம் திராட்சைகளுக்குக் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உல்லாச பயணிகளை கவரும் வலிகாமம் மேற்கு பிரதேசம்

இலங்கையின் வட மாகாணத்தில் அமைந்துள்ள யாழ். மாவட்டம் தலைநகரமான கொழும்பிலிருந்து 410 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. யாழ். மாவட்டத்தின் 15 பிரதேச செயலர் பிரிவுகளில் வலி. மேற்கு பிரதேசமும் ஒன்றாகும். இப்பிரதேசமானது யாழ். நகரில் இருந்து வடமேற்குத் திசையில் ஏறத்தாழ 11.75 தூரத்தில் அமைந்துள்ளது.

வலிகாமம் மேற்கு பிரதேசத்தின் பரப்பளவு 47.3 சதுர கிலோமீற்றர். இது யாழ். மாவட்டத்தின் 4.8 சதவீதமான நிலப்பரப்பைக் கொண்டது. இப்பிரதேசம் வடக்கு மற்றும் வடமேற்கு எல்லைகளாக இந்து சமுத்திரமும், கிழக்கு மற்றும் வடகிழக்கு எல்லைகளாக வலிகாமம் தென்மேற்குப் பிரதேச செயலர் பிரிவும் தெற்கே யாழ்ப்பாண கடல்நீரேரியாலும் சூழப்பெற்றுள்ளது.

வலி. மேற்குப் பிரதேசம் 12 கிலோமீற்றர் நீளமான கரையோரப் பிரதேசமாகவும் அதனுள் 4 கிலோ மீற்றர் இந்து சமுத்திரத்தையும் மிகுதி யாழ்ப்பாண கடல்நீர் ஏரியாலும் சூழப்பெற்றுள்ளது. இப்பிரதேசத்தினை பொதுவாக நோக்கும் போது அதிக உயர வேறுபாடு அற்ற சமதரையான பிரதேசமாகக் காணப்படுகின்றது.

இலங்கையின் உலர் காலநிலை வலயங்களில் ஒன்றான வடமாகாணத்தின் கால நிலையை ஒத்த பிரதேசமாக வலி. மேற்கு பிரதேசம் காணப்படுகின்றது. வெப்ப நிலை, மழைவீழ்ச்சியைப் பொறுத்தவரையில் யாழ். மாவட்டத்தின் காலநிலையானது பெரும்பாலும் பருவக்காற்றுக்களினால் தீர்மானிக்கப்படுகின்றது.

வலி. மேற்கு பிரதேச செயலக எல்லையும் வலி. மேற்கு பிரதேச சபை எல்லையும் ஒன்றாக அமைந்துள்ளது. இப்பிரதேச செயலகமானது 25 கிராம சேவையாளர் பிரிவுகளையும், 115 கிராமங்களையும் கொண்டுள்ளது. பிரதேச சபையானது இப்பிரதேசத்தினை சுழிபுரம், வட்டுக்கோட்டை, சங்கானை, அராலி, என 4 உப-அலுவலகங்களாக பிரிக்கப்பட்டு நிர்வாகத்தினை மேற்கொள்கின்றது.

இப்பிரதேசத்தின் குடித்தொகை 50 ஆயிரத்து 886 ஆகவும் மொத்த குடும்பங்களின் எண்ணிக்கை 15 ஆயிரத்து 394 ஆகவும் சனத்தொகை அடர்த்தி 1,075.6 ஆகவும் காணப்படுகின்றது.

இங்குள்ள மக்களில் பெரும்பான்மையாக இந்துக்களாக இருப்பதனால் இந்துப்பாரம்பரியத்தையும் இந்துசமய விழாக்களையும் பின்பற்றுகின்றனர். அத்துடன், இங்கு கலையும் இலக்கியமும் சிறப்படைந்து காணப்படுகின்றமைக்கு சங்கீத விற்பன்னர்கள், நாடகக்கலைஞர்கள், நடனக் கலைஞர்கள், கிராமிய நடன கலைஞர்கள், சிற்பிகள், எழுத்தாளர்கள், சித்திரக் கலைஞர்கள், மட்பாண்ட கலைஞர்கள், நாதஸ்வர-தவில் வித்துவான்கள், பண்ணிசை வித்துவான்கள் போன்ற கலைஞர்களில் மிகவும்தேர்ச்சி பெற்றவர்கள் இங்கு இருப்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். வட்டுக்கோட்டை மேற்கின் 'வடமோடி' நாட்டுக்கூத்து வலி. மேற்கு பிரதேசத்திற்கு தனித்துவம் வாய்ந்த ஒரு கலையாக விளங்குகின்றது. அராலியில் சிற்பக்கலையுடன் நாதஸ்வரம், மேளம், தேர், ஆலயங்களுக்கு தேவைப்படும் வாகனங்கள் போன்றவற்றை அமைத்தல் பிரபல்யமாக விளங்குகின்றது. இதற்கு எடுத்துக்காட்டாக வலி. மேற்குப் பிரதேசத்தில் அமைந்துள்ள பெரும்பான்மையான ஆலயங்களில் தூபிகள், கோபுரங்கள் சிற்ப வேலைகளுடன் மிளிர்கின்றன.

வலிகாமம் மேற்குப் பிரதேசத்தின் பொருளாதார கட்டமைப்பானது பலதுறைகளைக் கொண்டதாக அமைகின்றது. விவசாயம், கடற்றொழில், கைத்தொழில், வியாபாரம் போன்றவை முக்கியமானவையாக காணப்படுகின்றன. மொத்த நிலப்பரப்பில் 29 சதவீதமான நெற்பயிர்ச்செய்கையும் ஏனைய பயிரினங்கள் 6 சதவீதமானகவும் மேற்கொள்ளப்படுவதுடன் 4 சதவீதமாகவும் மேட்டுநிலம். 27 சதவீதமாகவும் பனை, 2 வீதமாகவும் தென்னை, 4 வீதமாகவும் நீர்நிலைகள், 4 வீதமாகவும் வனவளங்கள், 24 வீதமாகவும் குடியிருப்பாகவும் காணப்படுகின்றது.

இங்கு வடகீழ்ப் பருவப்பெயர்ச்சிக் காற்று மூலம் கிடைக்கின்ற மழைவீழ்ச்சியைப் பயன்படுத்தி பெரும்போகத்தில் பிரதானமாகநெற்செய்கையும் அதனைத் தொடர்ந்து உப-உணவு, மரக்கறிப் பயிர்ச்செய்கை, பழப் பயிர்ச்செய்கையும் மேற்கொள்ளப்படுகின்றன. உப-உணவுப் பயிர்களாக மிளகாய், புகையிலை, வெங்காயம், மரவள்ளி, பயறு, உழுந்து, கௌபீ, நிலக்கடலை, குரக்கன், எள்ளு போன்றன பிரதானமாகப் பயிரிடப்படுகின்றன.

இப் பிரதேசத்தில் செய்கை பண்ணப்படும் பெரிய வெங்காயம், எள்ளு குடா நாட்டு மக்களின் நுகர்ச்சித் தேவையின் பெரும்பகுதியை பூர்த்திசெய்வதாக அமைவது பெருமைக்குரிய விடயமாக அமைகின்றது. அத்துடன், சூரியகாந்திப் பயிர்ச் செய்கை இடம்பெறுவதுடன் இதன்மூலம் எண்ணெய் உற்பத்தியும் நடைபெறுகின்றது. அராலி பிரதேசத்தில் ஆயுள்வேத திணைக்களத்தின் நிர்வாகத்தின் கீழ் பராமரிக்கப்படும் மூலிகைத் தோட்டத்தின் மூலம் இப்பிரதேச மக்கள் பயனடைகிறார்கள்.

விவசாயத்துறைக்கு அடுத்தபடியாக கடற்றொழில் முக்கிய இடம்பெறுகின்றது. திருவடிநிலை தொடக்கம் அராலி வடக்கு வரையான கடற்பிரதேசத்தில் கடற்றொழில் இடம்பெறுகின்றது. இங்கு சிறுகைத்தொழில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த துறையாக விளங்குகின்றது. மக்கள் சுயதொழில் முயற்சிகளில் அதிக ஆர்வமும் விருப்பமும் கொண்டுள்ளனர். வட்டுக்கோட்டையில் மரத்தினால் உருவாக்கப்படும் சமையல் உபகரணங்கள் (இடியப்ப உரல், முறுக்கு உரல்) தயாரிப்பதில் சிறப்புத் தேர்ச்சிபெற்றவர்கள் சுயதொழில் முயற்சியில் அதிகம் உள்ளனர். இதில் கைத்தறி நெசவு ஆலைகளுடன் மட்கலப் பயிற்சி நிலையமும் இயங்கிவருகின்றது. வலி. மேற்கு பிரதேசத்தில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் (RDA) 'AB' தரத்தில் 3 பிரதான வீதிகள் போக்குவரத்துப் பயன்பாட்டிலுள்ளன. அவற்றில் அண்மையில் பழைமை வாய்ந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க கோயில்கள், கட்டடங்கள், நிறுவனங்கள், இடங்கள் பிரசித்தி பெற்றவையாகக் காணப்படுகின்றன.

யாழ்ப்பாணம் - மானிப்பாய் - காரைநகர் வீதியில்,

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை

சுழிபுரம் - பறாளாய் பிள்ளையார், முருகன் ஆலயங்கள்

மூளாய் பிள்ளையார் கோயில்

சித்தன்கேணியிலுள்ள சிவன் ஆலயமும் பாம்பு தீண்டி எவரும் உயிர் நீக்காத வகையில் சித்தர்களால் அமைக்கப்பட்ட கேணியும் ஒல்லாந்தரால் கட்டப்பட்ட சங்கானை கோட்டை என்று அழைக்கப்படும் தேவாலயம் ஆகியன அமைந்துள்ளன.

யாழ்ப்பாணம் - பொன்னாலை- பருத்தித்துறை வீதியில்,

பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோயில்

இராமரின் பாதங்கள் பதிந்த திருவடி நிலை

சங்கமித்தை வந்து இறங்கிய இடமாகிய மாதகல் - சம்பில்துறை

வழுக்கையாறு - புங்குடுதீவு - குறிகாட்டுவான் வீதி,

இவற்றை விட இப்பிரதேசத்தில் யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரி, ஆவுரஞ்சிக் கல், உப்பளம் 44 குளங்கள் ஆகியனவும் உல்லாசப் பிரயாணிகளை கவரும் வகையில் அமைந்துள்ளன.

நவாலியூர் செ. ரமேஷ்

மூலிகை மருத்துவம்

முள்ளங்கி

Bin Raohnus Sativa

பயன்படும் பாகம்:- கிழங்கு, இலை, விதை

மறுபெயர்:- மூலகம், உள்ளங்கி, மூலவம்.

இது 3 வகையான நிறங்களில் காணப்படுகின்றது. அதாவது வெள்ளை, சிவப்பு, மஞ்சள், நிறங்களில் காணப்படுகிறது. இது மணற் பாங்கான இடத்திலும் வளமான மண்ணிலும் நன்கு வளரும்.

செய்கை:- சிறுநீர்ப் பெருக்கி, குளிர்ச்சியுண்டாக்கி - இலையானது பசியைதத் தூண்டி சிறுநீரை பெருக்கும், காமம் பெருக்கும், தாதுபலம் கொடுக்கும்.

குணம்:- அதிமூத்திர, நீர்த்தடை, வயிற்று எரிச்சல், ஊதின உடம்பு, குடைச்சல் வாதம், வீக்கம், கப நோய், இருமல் ஆகியவை தீரும்.

உபயோகிக்கும் முறை:- இதனையெடுத்து சாறு பிழிந்து 30-50 மில்லிலீற்றர் அளவு காலை, மாலை வெறும் வயிற்றில் குடிக்க வேண்டும். இது சாப்பிடும் போது புளி தவிர்த்துக் கொள்ளவும். மேலே கூறப்பட்ட அனைத்து நோய்களும் குணமாகும்.

கருவுற்ற தாய்மார்கள் இதனை வாரந்தோறும் சாப்பிட்டுவந்தால் பேறு எளிதாகும். சிறுநீர் மிகுதியும் கழியும் கை, கால் வீக்கம் வராது. இலைச்சாற்றை 5 மில்லி ஆக நாள்தோறும் 3 வேளை சாப்பிட்டுவந்தால் மலச்சிக்கல் குணமாகும்.

இலை - முள்ளங்கி முளைத்துவரும் ஒரு பிடியுடன் 2-4 கிராம் கறி உப்புச் சேர்த்து இருவேளை சாப்பிட்டு வர வெள்ளை, அதனால் உண்டாகும் நீரடைப்பு ஆகியவை நீங்கும். அத்துடன், மலத்தை கழியச் செய்யும். கிழங்கை பச்சையாக உண்டுவர சுவையின்மையை நீக்கி பசியை தூண்டும்.

மி. உமா (2 ஆம் வருடம்)
லங்கா சித்த - ஆயுள்வேதக் கல்லூரி - சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் காணப்படும் பாடசாலைகளில் முன்னணிப் பாடசாலையாக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி விளங்குகின்றது. தேசிய பாடசாலையான இக் கல்லூரியினுடைய அண்மைக் கால தொடர் சாதனைகளாக கல்வி மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் அகில இலங்கை ரீதியில் தனது கால்தடத்தைப் பதித்து வெற்றிநடை போடுகிறது. இக் கல்லூரியின் சிறப்பான வெளிப்பாடுகளுக்கு மூலகர்த்தாவாக செயற்படும் அதிபர் வீ. கணேசராசாவுடனான நேர்காணல் 'யாழ் ஓசை' வாசகர்களுக்காக இங்கே தரப்படுகின்றது.

யாழ். இந்துக் கல்லூரியில் அதிபராக கடமையாற்றுவதை இறைவன் கொடுத்த கொடையாகக் கருதுகின்றேன்

கேள்வி:- கல்வியிலாளராக விளங்கும் நீங்கள் உங்களைப் பற்றி அறிமுகம் கூற முடியுமா?

பதில்:- எனது சொந்த இடம் நயினாதீவு. நான் க.பொ.த. சாதாரணம் வரை நயினாதீவு நாகபூஷணி வித்தியாலயம், நயினாதீவு மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கற்றேன். உயர்தரக் கற்கையை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 1971 ஆம் ஆண்டு கற்றேன்.

உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பேராதனைப் பல்கலைக்கழகத்தின் உள்வாரி மாணவனாக 1974 ஆம் ஆண்டு கற்கைநெறியை ஆரம்பித்து 1978 ஆம் ஆண்டு வர்த்தகப் பட்டதாரியாக வெளியேறினேன். முதுகல்விமாணி (M.Ed) பட்டப்பின் டிப்ளோமா (Dip.in.Ed) ஆகியவற்றை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பெற்றுக்கொண்டேன்.

கேள்வி:- உங்களுடைய முதல் அரச சேவை நியமனம் எங்கே கிடைத்தது?

பதில்:- வர்த்தகப் பட்டதாரி ஆசிரியராக 1981 ஆம் ஆண்டு தொடக்கம் 1989 ஆம் ஆண்டு வரை ஆசிரியராக மன்னார் புனித சவேரியார் ஆங்கிலப் பாடசாலையில் பணியாற்றினேன். 1989 ஆம் ஆண்டு அதிபர் சேவை பரீட்சை மூலம் அதிபர் சேவை தரம்-1 பதவியை பெற்றுக்கொண்டேன். 2005 ஆம் ஆண்டிலிருந்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் அதிபராகக் கடமையேற்று 6 வருடங்கள் இக்கல்லூரியின் அதிபராக செயற்படுகின்றேன்.

கேள்வி:- 6 வருடங்களாக இந்துக் கல்லூரியின் அதிபராக விளங்குகின்றீர்கள். இக் காலப்பகுதியில் உங்களால் எவ்வகையான மாற்றங்களை பாடசாலையில் கொண்டுவர முடிந்துள்ளது?

பதில்:- 6 வருட காலத்துள் யாழ். இந்துக் கல்லூரியின் பௌதீக வள அபிவிருத்தியிலும் கல்வி அபிவிருத்தியிலும் இணைப்பாடவிதான செயற்பாட்டு அபிவிருத்தியிலும் பெரிய மாற்றத்தை ஏற்படுத்த முடிந்துள்ளது. இக்கல்லூரியை கவின் கலையுடன் கூடிய கற்றலுக்குரிய பாடசாலையாக மாற்றவேண்டிய தேவையின் அடிப்படையில் கட்டடங்களுக்கு வர்ணம் பூசப்பட்டு புதிய 3 மாடிக் கட்டடம் கட்டிமுடிக்கப்பட்டு கற்றலுக்கான வளநிலையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

கேள்வி:- கல்வித்துறையில் எவ்வாறான மாற்றம் ஏற்பட்டுள்ளது என கூற முடியுமா?

பதில்:- க.பொ.த. சாதாரணம் மற்றும் உயர்தரப் பரீட்சையில் பெரியளவு மாற்றம் ஏற்பட்டுள்ளது. 2008 ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் 100 சதவீத சித்தியை பெற்றமையால் இலங்கையில் உள்ள நான்கு பாடசாலை

களில் ஒரு பாடசாலையாக எமது பாடசாலை கல்வியமைச்சரால் கௌரவிக்கப்பட்டது. 2008, 2009, 2010 ஆம் ஆண்டுகளில் தொடர்ச்சியாக க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் 100 சதவீத சித்தியைப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

2010 ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் யாழ். மாவட்டத்தில் 5 மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்ட போதும் முதல் நான்கு இடங்களை எமது மாணவர்கள் பெற்றுக்கொண்டனர். இலங்கையில் உள்ள மாவட்டங்களில் முதல் நான்கு இடத்தைப் பெற்ற பாடசாலை என்பது குறிப்பிடத்தக்கது. ஜனாதிபதியால் இம் மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

க.பொ.த. உயர்தரத்திலும் அதிகூடியளவு மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்லும் ஒரு பாடசாலையாக எமது பாடசாலை மேலோங்கி வருகிறது. இறுதியாக நடைபெற்ற உயர்தரப் பரீட்சையில் பல்கலைக்கழகம் சென்றவர்களில் 31 பேர் பொறியியல்துறைக்கும் 9 மாணவர்கள் மருத்துவத்துறைக்கும் ஏனைய துறைகளுக்கு அனுமதிக்கப்பட்ட மாணவர்கள் உட்பட 135 பேர் பல்கலைக்கழக அனுமதி பெற்றுள்ளனர்.

கேள்வி:- மாணவர்களின் இணைப்பாடவிதான செயற்பாடுகளின் பங்களிப்பு தொடர்பாகக் கூறமுடியுமா?

பதில்:- 2008 ஆம் ஆண்டு தமிழ் மொழி மூலமான தேசிய மட்டப் போட்டியில் 2 ஆம், 3 ஆம் இடங்களை எமது கல்லூரி பெற்றுக்கொண்டது. ஏனைய இணைப்பாடவிதான போட்டிகளிலும் தேசியமட்ட வெற்றியை எமது பாடசாலை பெற்றுள்ளது. தமிழ்த் தினப் போட்டியில் தேசிய மட்ட விவாதப் போட்டியிலும் தனி இசைப் போட்டியிலும் முதலாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டத்தில் தங்கப் பதக்கம் கிடைத்தது.

மெய்வல்லுநர் போட்டியில் நீளம் பாய்தலில் செல்வன் யஸ்மன் தேசிய மட்டத்தில் 30 வருடங்களின் பின் தங்கப்பதக்கம் பெற்று சாதனை புரிந்துள்ளான். ஹற்றன் நெஷனல் வங்கி நடத்திய தேசிய மட்ட நாடகப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்று தங்கப் பதக்கம் பெற்று சாதனை படைத்தது. ஆங்கில தினப் போட்டியிலும் தேசிய வெற்றியை பெற்றுக் கொண்டுள்ளது.

இவ்வருடம் நடைபெற்ற ஒலிம்பியாட் பரீட்சையில் தேசிய மட்டத்திற்கு கணிதப் பரீட்சையில் 7 மாணவர்களும் விஞ்ஞான பரீட்சையில் நான்கு மாணவர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

விளையாட்டு நிகழ்வில் 17 வயதுக் குட்பட்ட துடுப்பாட்டப் போட்டியில் தேசிய மட்டம் சென்று காலிறுதி வரை வெற்றிபெற வாய்ப்புக் கிட்டியது. மாவட்ட மட்டத்திலே15 வயதுப் பிரிவு, 13 வயது ஆகியன பிரிவு முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டன.

கூடைப்பந்தாட்டத்திலே மாவட்ட மட்டத்தில் 2ஆம் இடத்தை பெற்று தேசிய மட்டத்திற்குத் தெரிவாகியது. செஸ் போட்டியிலே 17, 19 வயதுப் பிரிவுகளில் மாகாண மட்டத்தில் 2ஆம் இடத்தைப் பெற்று தேசிய மட்டத்திற்குத் தெரிவாகியது.

கேள்வி:- மாணவர்களது குறும்படத் தயாரிப்புக்கள் மற்றும் துடுப்பாட்ட வீரர்களை உற்சாகப்படுத்தும் இறுவட்டுக்களை வெளியிட்டுள்ளீர்கள். இதற்கான ஆர்வம் மாணவர்களுக்கு எவ்வாறு ஏற்பட்டது?

பதில்:- எமது மாணவர்கள் மீத்திறன் கொண்டவர்கள். மீத்திறன் கொண்டமையினால் புத்தாக்கச் செயற்பாட்டில் ஈடுபடும் திறன் கொண்டவர்களாக விளங்குகின்றார்கள். புத்தாக்கச் செயற்பாட்டின் விளைவாக இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். சர்வதேச கிரிக்கெட் இசைப் பாடல் போல பாடசாலைக்கு பண்பாட்டை அடிப்படையாகக் கொண்டு அமைக்கவேண்டுமெனும் நோக்கில் துடுப்பாட்ட வீரர்களை உற்சாகப்படுத்தும் இறுவட்டை வெளியிட்டுள்ளார்கள். மாணவர்கள் புத்தாக்கச் செயற்பாட்டில் ஈடுபடுவதைத் தூண்டுவதற்காக 100 கணினிகள் கொண்ட கணினிக் கூடத்தை உருவாக்கும் நோக்கில் முதற்கட்டமாக 60 கணினிகளை கொண்டு அது உருவாக்கப்பட்டுள்ளது. இன்றைய சர்வதேச நிலையில் கணினிக் கல்வி மிக அவசியமானது. இதனடிப்படையில் கணினிக் கற்கையை பாடசாலையில் கட்டாயமாக்கி தவணைப் பரீட்சையில் அனைத்து மாணவர்களும் தோற்ற வேண்டும் என்ற நடைமுறையைப் பின்பற்றி வருகின்றோம்.

(28ஆம் பக்கம் பார்க்க...)

நேர்கண்டவர் : எஸ்.ரி. குமரன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இலக்கிய இன்பம்

தமிழின் தொன்மை, பெருமை, பொருண்மை ஆகியன ஒருங்கே அமைந்த தன்மை பொருந்தியவை சங்க இலக்கியங்கள். இச்சங்க இலக்கியங்களின் பிரதான பேசு பொருட்களாக காதல், வீரம் என்பவை குறித்து அமைகின்றன. காதல் பற்றி அகநானூறும் வீரம் பற்றி புற நானூறும் பேசுகின்றன.

புறநானூறு என்ற வீரம் பற்றி பேசுகின்ற இலக்கியத் தில் சில பாடல்களில் நீதி நெறி, அறநெறி பற்றியும் விளக்கப்பட்டுள்ளன. சான் றோர்களின் பண்புத்திறமுறை கள் பற்றி புறநானூற்றில் ஒரு பாடல் வருகிறது. இளம் பெரு வழுதி என்ற புலவர் பாடி யுள்ளார். உலகிலே இன்று அறநெறியில் வாழ்வோர் அரு கிவருகின்றனர். குறுக்குவழி யில் ஆதாயம் தேடும் பிரகிரு திகள் அதிகரித்துவருகின்ற னர். எந்த துறையிலும் சரி, எந்த தொழிலிலும் சரி, எங் கும் எதிலும் வஞ்சகம், சூழ்ச்சி, சுயநலம், போட்டி, பொறாமை, களவு முதலிய மறப்பண்புகள் பெருகிவரு கின்றன.

சமூகத்தில் நல்லவர்கள், அறநெறியைப் பின்பற்றுபவர் கள் சமூகத்திற்கு தன்னலம் கருதாமல் தொண்டாற்றுபவர் கள் குறைவு. தனது ஆதாயத் துக்காக, தன் வளர்ச்சிக்காக குறுக்கே நிற்பவர்களை கொலைசெய்யக் கூடத் தயங் காதவர்களாக இருக்கிறோம்.

நாட்டில் ஏற்பட்டுவருகின்ற அழிவுகளுக்கு இயற்கையை குற்றம் காணவிழைவது எல் லாம் மனிதனின் மூர்க்கத்தன மான செயற்பாடுகளின் விளைவாகவே உலகச் சமநி லையில் குழப்பங்களும் ஏற்ப டுகின்றன.

சங்ககாலத்தைப் பொறுத்த வரை தமிழர் பண்பாட்டு மர பில் சான்றோர்களின் பங்கு முக்கியம் பெற்றுத் துலங்கி யது. சான்றோர்களின் சிறப்புப் பற்றி விளக்கமுனைந்த புறத் திணைப்பாடல் ஒன்று வரு மாறு:

"உண்டா வம்மவிவ்வுலக
மிந்திரர்
அமிழ்த மியைவ தாயினு
மினிதெனத்
தமிய ருண்டலு மிலரே
முனிவிலர்
துஞ்சலுமில பிறர்
அஞ்சுவதஞ்சிப்
புகழெனி னுயிரும் கொடுக்கு
வர் பழியெனின்
உலகுடன் பெறினுங்
கொள்ளவ ரயர்விலர்
அன்ன மாட்சியனைய ராகித்
தமக்கென முயலா
நோன்றாட்
பிறர்க்கென முயலு
நருண்மையானே"

இப்பாடலின் கருத்து யாதெனில், இறவாத மருந்தா கிய தேவர் உண்ணும் உண வாகிய அமுதம் தெய்வ அரு ளினாலோ அல்லது தவமி ருந்து பெற்றாலோ அதனை இனியது என கருதி தனியாக உண்ணமாட்டார்கள். பிற ருக்குக் கொடுத்தே உண்பார் கள். யாரோடும் பகை, கோபம் கொள்ளமாட்டார்கள். பிறர் அஞ்சத்தகும் செயல்களுக்கு தாமும் அஞ்சி அத்தகைய பழி பாவங்களை நீக்குவதற்கு சோம்பியிருக்க மாட்டார்கள். புகழ்வருமாயினும் உயிரை யும் கொடுப்பர். ஆனால், பழி கலந்த புகழ் வருமாயின் உல கம் முழுவதும் கிடைத்தாலும் வேண்டமாட்டார்கள். மனக் கவலையற்ற மாட்சிமை பொருந்திய இவர்கள் தமக் கென எதுவுமே செய்யமாட் டார். பிறர் நன்மைக்காக விடா முயற்சியுடன் செய்வர். இத்த கைய சான்றோர்கள் இருப்பத னாலேயே இந்த உலகம் இன் னும் இருக்கின்றது.

இப்பாடலிருந்து சான்றோர் களின் நற்பண்புத் திறமுறை கள் குறித்து விளக்கப்பட் டுள்ளது.

முன்னர் பழிபாவங்களுக்கு அஞ்சியே மக்கள் தமது வாழ்க்கை முறையை கட்ட மைத்து வாழ்ந்தனர். இப்படித் தான் வாழவேண்டும் என்று கோடுபோட்டு வாழ்ந்த கால மது. தான் மட்டும் வாழ்ந்தால் போதாது தனது சுற்றமும் சமூ கமும் உலகமும் இன்புற்றிரு க்கவேண்டிய காலம். 'யாதும் ஊரே யாவரும் கேளீர்' என்ற கணியன் பூங்குன்றனார் என்ற சங்கப்புலவரின் கொள் கைக்கு இலக்கணமாக அக் காலச் சான்றோர்கள் வாழ்ந் தார்கள். தமக்குத் தீங்கு விளைவிக்கும் பகைவர்களுக் கும் நன்மைகளையே செய்த னர். இப்படியான பெருமை பெற்ற சான்றோர்கள் இருப்ப தினாலேயே இந்த உலகம். இப்போதும் அழிவடையாமல் இருக்கின்றது என்ற தத்துவக் கருத்து மேற்போந்த பாடல் மூலம் விளக்கப்பட்டுள்ளது. உலகில் வன்முறை, கொலை, களவு, பொய்மை,வஞ்சம், சூது ஆகிய அவாப்பண்புகள் தலைவிரித்தாடும் நிலையில் மனிதநேயம், அன்பு, கருணை, சகிப்புத் தன்மை முதலியவற்றை எமது மனங் களில் விதைப்போம். வாழ்க் கையின் அர்த்தத்தை உணர் வோம்.

எஸ். நதிபரன் B.A. (Hons)

உளர்பு புதினம்

யவர் இறந்தால் மனிதன் இறப்பான் சிறுவன் இறந்தால் தலைமுறை இறக் கும்' அண்மையில் சொற்பொழிவொன் றில் கேட்ட வாச கம்.

முதியவர் ஒருவர் இறந்தால் ஒரு மனித னின் இறப்பாகத் தா னிருக்கும். ஆனால், ஒரு சிறுவன் அல் லது குழந்தை இறந் தால் ஒரு தலை முறையே இறக்கும். அதாவது, அப் பிள்ளை வளர்ந்து பெரியவராகி திரு ணம் செய்து பிள்ளைகள் பெற்று அப் பிள்ளைகளும் வளர்ந்து திருமணமாகி ... என சந்ததிகள் பெருகும்.

அதனால் தான், சிறுபராயத்தில் உள்ள ஒருவர் இறந்தால் தலை முறையே இறக்குமென பெரியோர்கள் கூறுகின்றனர். மாறாக, முதியவர் ஒரு வர் இறந்தால் அவருடன் மட்டும் இறப்பு நிகழும். அவர் உருவாக்கிய சந்ததிகள் இப் பூவுலகில் வளர்ந்துவா ழும். இன்னமும் சந்ததிகளை உருவாக் கும்.

மனித உயிர் ஒன்றென்றாலும் அவை சமூகத்தின் வளர்ச்சிப்படியில் எத்தகைய முக்கியத்துவம் பெறுகிறது என்பதை இப் பொன்மொழி சுட்டிக் காட்டுகின்றது.

அதனால் தான், சிறுவர்களை குழந் தைகளை அவர்கள் இளைஞர்களாக வளரும் வரை மிக்க அவதானமாக வளர்க்கவேண்டுமெனக் கூறப்படு கின்றது. பயமறியா, விபரமறியா பிள் ளைகளின் பாதுகாப்பில் பெற்றோர்கள் கவனம் செலுத்துதல் வேண்டும். இன் றைய அவசர யுகத்தில் வீதி விபத்துக் களில், நீர் நிலைகளில், மின்சாரத் தாக் குதல்களால் நாளாந்தம் ஓரிரு சிறுவர் கள் இறப்பதைக் காண்கிறோம்.

சிறுவர்கள், குழந்தைகள் எதிர்காலச் சந்ததிகளை உருவாக்க வல்லவர்கள். ஆதலால், முழுச் சமூகமும் அவர்கள் மீது முழுமையான அக்கறை கொள்ளு தல் வேண்டும். சிறுவர்களுக்கு வள மான எதிர்காலத்தைப் பெற்றுக்கொ டுக்கும் கூட்டுப் பொறுப்பில் நாம் யாவரும் கைகோர்ப்போம்.

● சிவகாமி -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்களும் ஊடகத் தகவல் அறிவும்

சிறுவர்களும் ஊடகங்களும்

இன்று ஊடகங்களின் ஆதிக்கத்தினால் சிறுவர்களை பொறுத்தவரையில் 'மிரட்டுவது மீடியா' என்ற பத விளக்கம் அதீத கவனத்தைப் பெறுவதாக அமைகின்றது. ஊடகங்கள் சிறுவர்களை மையப்படுத்தியதான தகவல் அறிக்கையிடல்களை, தகவல் பரிமாற்றங்களை முதன்மைப்படுத்தியுள்ளன என்று ஊடக ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. சிறுவர் என்பவர் யார்? இவர்களின் உள்ளங்கள் எவ்வாறு இயங்குகின்றன? அவர்களின் இயல்புகள் எவை? சிறுவர் உள்ளங்களின் நடத்தை எவ்வாறு இயங்குகின்றன? ஊடகங்களை எவ்வாறு பயன்படுத்த முனைகின்றனர்? எவ்வாறு சிறுவர்கள் ஊடகங்களை விரும்புகின்றனர்? போன்ற எழுவினாக்களுக்கான முன் அனுபவங்களைக் கொண்டதாக ஊடக நிறுவனங்களின் கொள்கையாக்கம் மற்றும் உள்ளடக்கங்கள் வடிவமைக்கப்பட்டு முறையான திட்டமிடல்களூடாக முன்னெடுக்கப்படுகின்றன என்ற கருத்தியலும் முன்வைக்கப்படுகின்றன. இத்தகைய பின்னணியை அடிப்படையாகக் கொண்டு சிறுவர்களுக்கான ஊடகத் தகவல் அறிவு பற்றிய சிந்தனையை அணுகமுடியும்?

பொதுவாக சிறுவர்கள் என்பவர்கள் சட்டப்படி பதினெட்டு வயதுக்கு உட்பட்டவர்கள் என்றும், சமூக ரீதியில் பால வயதினர் எனவும் பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் வழிகாட்டலின் கீழ் சீவிப்பவர்களாக இருப்பவர்களைக் குறிக்கின்றது. ஒரு காலத்தில் 'வளர்ந்த மனிதனின் சிறிய உருவமே பிள்ளை' என்று கருதினர். நவீன உளவியலில் சிக்மன் பிராய்ட் என்பவர் பிள்ளை என்பது பிள்ளையே என்று அல்லாமல் வளர்ந்த மனிதனின் சிறிய உருவ மல்ல என்ற புதிய கருத்தியலை முன்வைத்தார். பிஜாஜே என்ற உளவியலாளர் ஒவ்வொரு பருவத்திலும் பிள்ளையின் உளவிருத்தியானது ஓர் ஒழுங்குமுறைப்படி நடைபெறுவதாக சுட்டிக்காட்டுகின்றார். இதில் சூழலின் தாக்கம் கணிசமான பங்கைப் பெறுவதாக குறிப்பிடுகின்றார். சூழல் காரணியில் ஊடகங்கள் பிள்ளைகளின் வயது நிலைத் தன்மைகளுக்கு ஏற்ப சாதக பாதகத் தாக்கங்களை ஏற்படுத்துவதாகவும் மனித வாழ்க்கையின் ஆரம்பப் பருவமான பிள்ளைப்பருவம் அந்த கவனத்தைப் பெறுவதாகவும் சுட்டிக்காட்டுகின்றார். பிள்ளையின் மொழி நிலைகள், பழக்கவழக்கங்கள், எண்ணங்கள், செயற்படும் நடத்தைப் பாங்குகள், எண்ணவாக்கங்கள் போன்ற இயல்பு நிலைகளை உருவாக்குவனவாக ஊடகங்கள் அமைந்துவிடுகின்றன.

ஊடகங்களின் இலக்கு பிரிவு:

ஊடகங்கள் அதிகம் இலக்குவைக்கின்ற பிரிவினர்களாக பெண்கள், இளைஞர்கள், சிறுவர்கள் காணப்படுகின்றனர். இதில் சிறுவர்களைப் பொறுத்தமட்டில் இவர்கள் மென்மையான உளஅமைப்பைக் கொண்டு இருப்பதாலும் விரைவாக எழுச்சியுறச் செய்யமுடியும் என்பதாலும் சுதந்திர நுகர்வோனாகவும், தேர்வு செய்பவனாகவும், கொள்வனவு செய்பவனாக இல்லாமல் இருப்பதுவும் இலக்குக்கான பிரதான பின்னணிக் காரணிகளாக அமைகின்றன எனலாம். சிறுவர்களைப் பொறுத்தமட்டில் இலத்தரனியல் ஊடகத் தொலைக்காட்சி, வானொலி என்பன உயர்மட்ட பாவனையிலும் செய்தித்தாள் அதாவது அச்சு ஊடகம் குறைந்தளவு பயன்பாட்டு நிலையில் இருப்பதாக ஊடக ஆய்வு அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன.

ப. இராஜேஸ்வரன்
ஊடகக் கல்வி வளவாளர்

தகவல்:

சமகாலத்தில் மரபுசார்ந்த தொடர்பாடல் மற்றும் ஊடகப் பயன்பாடுகள் அருகி அதனை நவீன ஊடகங்கள் ஆதிக்கம் செலுத்திவருகின்றன. முன்னைய காலங்களில் குழந்தைக்கு சோறு ஊட்டுவதற்கு பல கதைகள், பாட்டுக்கள் கூறப்படுவது வழக்கம். அந்த இடத்தினை இன்று தொலைக்காட்சிப் பெட்டி தனதாக்கிக் கொண்டுள்ளது. தொலைபேசி (எஸ்.எம்.எஸ்), இணையத்தள பயன்பாடுகள் நவீன ஊடகம் என்ற ஒருநிலையில் வளர்ச்சி அடைந்துவருவதை அவதானிக்க முடிகின்றது.

மகிழ்ச்சிகரமாக இருத்தல், திகிலூட்டலைப் பெறுதல், பொழுதுபோக்கு அம்சம், தொடர்பு கொள்ளல், தகவல் பரிமாறுதல்

-)தகவல் அறிவு
-) நூலக அறிவு
-) மின்பொறி அறிவு
-) செய்தி அறிவு
-) கணினி அறிவு
-) இணைய அறிவு
-) எண்சார் அறிவு
-) ஊடகம் பற்றிய அறிவு
-) ஊடகத் தகவல்கள் அறிவு

ஊடக தகவல் அறிவு என்னும் போது ஊடகங்கள், ஊடகத் தகவல் மையங்கள் ஆகியவற்றுடன் நெருங்கிப் பழகும் ஆற்றலை அக்கறைப்படுத்தல், அவற்றின் உள்ளடக்கங்களை புரிதல், சுருக்கத்தை ஏற்படுத்தல், சுயவெளிப்பாடு செய்தல், ஊடக உள்ளடக்கங்களை கலவை செய்து கருத்துள்ள புதிய பரிமாணம் கொடுக்கும் திறன் தகவு நிலைகளை கட்டியெழுப்புதலாக அமைகின்றது.

(தொடரும்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் விளையாட்டு செய்திகள்

பெண்களுக்கான உதைபந்தாட்டபோட்டியில் மாதகல் சென். ஜோசப் ம.வி. அணி சம்பியன்

சங்கானை,

19 வயதுப் பிரிவின் கீழ் நடைபெற்ற யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டி கடந்த 11 ஆம் திகதி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

ஆண்களுக்கான இறுதிப்போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரியும் புனித ஹென்ரியரசர் கல்லூரியும் மோதிக் கொண்டன.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற போட்டியில் இரண்டு அணிகளும் கோல் பெறுவதற்கு முயற்சித்தும் கோல் காப்பாளர்களின் திறமையினால் அது முறியடிக்கப்பட்டது.

ஆட்டம் நிறைவுறும் நிலையில் மானிப்பாய் இந்துக்கல்லூரிக்கு கிடைத்த 'பனால்டி' உதையினை கோலாக மாற்ற 1:0 என்ற கோல் வித்தியாசத்தில் மானிப்பாய் இந்து சம்பியனாகியது. 3 ஆம் இடத்தினை புனித பத்திரிசியார் கல்லூரி பெற்றது.

19 வயது பெண்களுக்கான போட்டியில் கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியும் மாதகல் சென்.ஜோசப் வித்தியாலயமும் மோதிக் கொண்டன. இப் போட்டியும் மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றது.

போட்டியின் பின் பாதியில் மாதகல் சென்.ஜோசப் ஒரு கோலைப் போட்டு 1:0 என்ற கோல் அடிப்படையில் சம்பியனானது. பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் இம்முறைதான் மாதகல் சென்.ஜோசப் மகா வித்தியாலயம் பங்குபற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

3 ஆம் இடத்தினை மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி பெற்றுக்கொண்டது.

மாதகல் சென். ஜோசப் மகாவித்தியாலய உதைபந்தாட்ட மகளிர் அணி

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும் கிரிக்கெட் சுற்றுப் போட்டி

யாழ். மாவட்டக் கழகங்கள் பங்கேற்பு

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் வருடாந்தம் நடத்தும் 30 ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டி கடந்த சனிக்கிழமை யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகியது.

காலை நடைபெற்ற முதலாவது போட்டியில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் 105 ஓட்டங்களினால் பற்றீசியன் விளையாட்டுக் கழகத்தினை வீழ்த்தியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் 30 ஓவர்களில் 07 விக்கெட்டுக்களை இழந்து 207 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜெனந்தன் 63 ஓட்டங்களையும் நிரஞ்சன் 37 ஓட்டங்களையும் பெற்றனர். பற்றீசியன் விளையாட்டுக்கழக வீரர் அஜித் 06 ஓவர்கள் பந்துவீசி 35 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டைக் கைப்பற்றினார்.

208 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு களமிறங்கிய பற்றீசியன் அணி 102 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 105 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

பிற்பகல் நடைபெற்ற இரண்டாவது போட்டியில் ஈகிள் விளையாட்டுக்கழகம் 05 விக்கெட்டினால் வெற்றிபெற்றது. ஈகிள் விளையாட்டுக் கழகத்திற்கும் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகத்தில் நடைபெற்ற போட்டியில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகம் 26 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 133 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. அஜந்தன் அதிகபட்சமாக 27 ஓட்டங்களைப் பெற்றார். சயந்தன் 06 ஓவர் பந்துவீசி 22 ஓட்டங்களை கொடுத்து 04 விக்கெட்டினையும் பகீரதன் 06 ஓவர் வீசி 12 ஓட்டத்திற்கு 03 விக்கெட்டினையும் வீழ்த்தினார்.

134 ஓட்டத்தினை வெற்றி இலக்காகக் கொண்டு விளையாடிய ஈகிள் அணி 05 விக்கெட்டினை இழந்து வெற்றிபெற்றது. கஜந்திரன் 37 ஓட்டமும் சயதீபன் 23 ஓட்டங்களையும் அணிக்காகப் பெற்றுக்கொடுத்தார்.

கடந்த 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இந்துக்கல்லூரி மைதானத்தில் முதலாவது போட்டியில் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகத்தினை 04 ஓட்டங்களினால் வெற்றிபெற்றுக் கொண்டது.

நாணயச்சுழற்சியில் வெற்றிகொண்ட ஜொனியன்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. 30 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 223 ஓட்டங்களை பெற்றது. அன்புஜன் 68 மயூரன் 30 ஓட்டங்களையும் பெற்றனர். அ.கோகுலன் 06 ஓவர்கள் பந்துவீசி 30 ஓட்டங்களுக்கு 05 விக்கெட்டினை கைப் பற்றினார்.

224 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என களமிறங்கிய ஈகிள் அணி திறமையாக விளையாடியும் 04 ஓட்டங்களினால் தோல்வி கண்டது. 219 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

துளசி - 59, பிரயுதன் - 35 ஓட்டங்களையும் பெற்றனர். லவதி - 06 ஓவர்கள் பந்துவீசி 25 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டினை வீழ்த்தினார்.

மதியம் நடைபெற்ற இரண்டாவது போட்டியில் அரியாலை விளையாட்டுக் கழகமும் மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்டன. முதலில் துடுப்பெடுத்தாடிய அரியாலை விளையாட்டுக்கழகம் விதுசனின் அதிரடியால் 219 ஓட்டங்களை 07 விக்கெட் இழப்பிற்குப் பெற்றது.

விதுசன் 22 பந்தில் 53 ஓட்டங்களும் நிரோஜன்- 42, நவதீபன்- 36 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து -வீச்சில் கரிகரன், திலக் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். 20 என்ற வெற்றி இலக்குடன் ஆடிய மானிப்பாய் பரிஸ் அணியினர் விக்கெட்டுகள் அடுத்தடுத்து வீழ்ந்தன. இறுதியில் 126 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தனர். இதனால், அரியாலை விளையாட்டுக்கழகம் 93 ஓட்டங்களினால் வெற்றிபெற்றது. கவிந்தன், விதுசன் ஆகியோர் தலா 03 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

யாழ் இந்துக் கல்லூரி....

(25ஆம் பக்கத் தொடர்ச்சி...)

கேள்வி:- பாடசாலையின் மாணவர் விடுதியின் செயற்பாடுகள் எவ்வாறு உள்ளன?

பதில்:- மாணவர் விடுதி மீள ஆரம்பிக்கப்பட்டு 50 மாணவர்கள் தங்கியிருந்து கல்வி கற்கின்றார்கள். வன்னியில் இடம் பெற்ற யுத்தத்தில் தாய், தந்தையரை இழந்த 6, 7, 8ஆம் வகுப்புக்களைச் சேர்ந்த 25 மாணவர்கள் விடுதியில் தங்கியிருந்து கற்கின்றார்கள். இவர்களுக்கு உணவு, உடை, கல்வி, ஏனைய செலவுகள் போன்றவை இலவசமாக செய்துகொடுக்கப்பட்டுள்ளன. கல்வி மட்டத்தில் இம் மாணவர்கள் குறைவாக உள்ளபோதும் ஏனைய மாணவர்களின் தரத்திற்குக் கொண்டு வரமுடியும் என்ற நம்பிக்கை காணப்படுகின்றது. இம் மாணவர்களுக்கான உதவியாக லண்டனில் உள்ள பழைய மாணவர் ஒன்றியம் தலா 5,000 ரூபாவினை வழங்கிவருகிறது.

கேள்வி:- நீங்கள் கல்வித் துறையில் நீண்ட காலம் ஈடுபடுபவர் எனும் வகையில் தற்போதைய கல்விப்போக்கு தொடர்பான கருத்து என்ன?

பதில்:- இலங்கையை பொறுத்தவரை 50 வீத மாணவர்கள் க.பொ.த. சாதாரண தரத்தில் சித்தியடையத் தவறுகின்றனர். 50 வீதமானோர் உயர்தரத்தில் சித்தியடையத் தவறுகின்றனர். கல்வியை மட்டும் நம்பியிருக்கும் மாணவ சமுதாயத்தில் அடுத்து என்ன செய்வது என்பது தெரியாதுள்ளது.

எம்மிடையே தொழிற்துறை, வியாபார, வாணிப் கைத்தொழில்துறை அபிவிருத்தியடையாதுள்ளன. எனவே, இத்துறைகளை அபிவிருத்தி செய்யவேண்டுமாயின் பெரிய முதலீட்டு துறையை ஆரம்பிக்கவேண்டிய தேவையுள்ளது.

கல்வியில் க.பொ.த. சாதாரண தரத்தில் சித்தியடையாதவர் எந்த தொழிலை செய்வது என்பது மிகக் கஷ்டமாகவுள்ளது. எனவே, கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைய வைக்கவேண்டிய பொறுப்பு தமிழ்க் கல்விச் சமூகத்திற்கு முக்கியமானது. கல்வியியலாளர்கள் இதனை உணர்ந்து செயற்பட வேண்டிய தேவையுள்ளது. அத்துடன், ஆங்கிலக் கல்வியின் முக்கியத்துவம் மிக இன்றியமையாதது என்பது இன்று சர்வதேசத்தால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கணினிக் கல்வியும் ஆங்கில அறிவும் இல்லாவிட்டால் சமூகத்தில் ஒன்றணைந்து பயனைப் பெறமுடியாது. இவை இரண்டிலும் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

கேள்வி:- நீங்கள் இக் கல்லூரியின் பழைய மாணவனாக இருந்து தற்போது அதிபராக இருக்கின்றீர்கள். இது பற்றிய உங்கள் மனப்பதிவு எவ்வாறுள்ளது?

பதில்:- யாழ். இந்துக் கல்லூரியில் அதிபராக கடமையாற்றுவதை இறைவனால் கொடுக்கப்பட்ட கொடையாகவே நான் கருதுகிறேன். இப்பாக்கியம் எல்லோருக்கும் கிடையாது. இப்பாடசாலை இலங்கையில் உள்ள பாடசாலைகளில் முதன்மையான பாடசாலையாக விளங்குகின்றது. இப்பாடசாலையில் கற்ற நான் இப்பாடசாலையின் அதிபராக வருவேன் என கனவில் கூட நினைக்கவில்லை.

நடுங்க வைக்கும் கர்ப்பினிப் பெண்ணின் மரண ஓலம்...

நமது கிரமத்திலும் பொதுவாக இளம் பெண்கள் அகல மரணம் அல்லது கொலை செய்யப்பட்டு உயிரிழந்தால் நமது பெரியவர்கள் பலர் 'வாழ்வை அனுபவிக்காமல் போன உயிர் சும்மா விடாது. அந்த ஆவி சுற்றித் திரியும். செக்கல் படுகிற நேரம் திரியாதிங்கோ.' என எச்சரிப்பது எனது காதிலும் விழுந்துள்ளது. இப்படியான சம்பவங்கள் எமது ஊர்களில் இடம்பெற்றாலும் அது வெளிவருவதில்லை. தமிழ்நாட்டில் இடம்பெறும் சம்பவங்களிலிருந்து....

நள்ளிரவு 1.30 மணி... எங்கும் நிசப்தம். ஊருக்கு புதுசாக வந்த நெசவுத் தொழிலாளி பழனிச்சாமிக்கு திடீர் வயிற்றுவலி. தண்ணீருடன் அருகில் உள்ள மூன்று கண் ரயில்வே பாலத்தின்கீழ் ஒதுங்கினார். திடீரென யாரோ முதுகுக்கு பின்னால் இருந்து பல்லைக் கடித்தபடி பெருமூச்சு விடும் சத்தம். அடிவயிற்றில் பகீர் என்றது பழனிச்சாமிக்கு. திரும்பிப் பார்த்தார். யாரையும் காணவில்லை. சற்று நேர அமைதி. திடீரென பிரசவ வலியில் துடிக்கும் பெண் அலறுவதுபோல ஒரு ஓலம். வெலவெலத்துப்போன பழனிச்சாமி செம்பை எறிந்துவிட்டு, ஓட்டம் பிடித்தார். வீட்டுக்கு வந்து படுத்தவர்தான். குளிர் காய்ச்சலில் ஒரு வாரம் எழுந்திருக்கவில்லை.

நடந்ததை அக்கம்பக்கத்தினரிடம் கூறினார். 'ஓ... அந்தப் பாலமா? பகல்லயே அங்க யாரும் தனியா போகமாட்டோம். நடுசாமத்துல உன்ன யாரு அங்க போகச் சொன்னது? கர்ப்பிணியோட ஆவி ஒண்ணு அங்க அலைஞ்சிக்கிட்டு இருக்கு' என்று குண்டை தூக்கிப் போட்டனர்.

பழனிச்சாமிக்கு ஏற்பட்ட அனுபவம் அங்கு பலருக்கும் ஏற்பட்டுள்ளது. பல ஆண்டுகளாக இச்சம்பவம் அப்பகுதி மக்களுக்கு பெரும் புதிராகவே இருக்கிறது மூன்று கண் பாலம். நிஜமாகவே அங்கு கர்ப்பிணி ஆவி உலவுகிறா? அதன் பின்னணி என்ன... ஊர் மக்கள் சொல்லும் கதை இதுதான்:

கோவை மாவட்டம் சோமனூர் ரயில்வே ஸ்டேஷன் அருகே உள்ளது மூன்று கண் பாலம். 1862 இல் ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்டது. அந்தக் காலத்தில் நொய்யல் ஆற்றில் 15 அடி உயரத்துக்கு தண்ணீர் பாயும். மேலே ரயில்பாதை, கீழே மூன்று ராட்சத துளைகளில் தண்ணீர் செல்லும் வகையில் பாலம் கட்டப்பட்டது. கட்டி முடியும் தருவாயில் பாலத்தின் ஒரு பகுதி இடிந்து விழுந்தது. அதை சரி செய்தால் மறு பக்கம் இடிந்தது. இப்படியே மூன்று முறை இடிந்தது. காரணம் புரியாமல் திகைத்தனர் பொறியியலாளர்கள். மந்திரவாதிகளிடம் கேட்டனர் அவரக்ள். 'இங்கே செய்வினை இருக்கிறது. அதை அகற்ற உயிர்ப்பலி கொடுக்க வேண்டும். அதுவும் ஈருயிர் ஒருடலை பலியிட வேண்டும்' என்றார். அதன்படி, நள்ளிரவில் ஒருநாள் அந்த வழியாக வந்த கர்ப்பிணியை பிடித்து பாலத்தின் நடுவில் வைத்து உயிரோடு சமாதி கட்டி விட்டார்களாம். அதன்பிறகு பாலம் இடியவில்லை. 150 ஆண்டுகளாகியும் இன்று வரை கம்பீரமாக நிற்கிறது என்கின்றனர் சில பெரியவர்கள். நடுக்கண் பாலத்தில் இருந்து எப்போதும் தண்ணீர் வடிந்து கொண்டிருக்கிறது. கடும் வெயில் கொளுத்தும்போதும் இது தொடர்கிறது. கர்ப்பிணியின் கண்ணீர்தான் அது என விளக்கம் வேறு தருகின்றனர். இரவில் பாலம் அருகே காட்டுப்பகுதியில் கர்ப்பிணி படுத்திருந்ததை பார்த்ததாகவும், பகலில்கூட மரண ஓலம் கேட்டதாகவும் சிலர் கூறுகின்றனர்.

இந்த பாலத்தில் அடிக்கடி உயிர்ப்பலி சம்பவங்களும் தொடர்ந்து நடக்கிறது. சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரே குடும்பத்தை சேர்ந்த 4 பேர் பாலத்தின் மீது ரயில் முன் பாய்ந்து தற்கொலை செய்தனர். அடுத்த ஆண்டு அதே தினத்தில் இவர்களின் நினைவாக மேலும் 2 பேர் தற்கொலை செய்தனர். தற்கொலை செய்தவர்கள், தவறி விழுந்தவர்கள் என இந்த இடத்தில் பலியானோர் எண்ணிக்கை இதுவரை 500க்கும் மேல் இருக்கும் என்று கணக்கு போடுகின்றனர். கர்ப்பிணியின் ஆவிதான் இப்படி பழிவாங்குகிறது என்பது அப்பகுதி மக்களின் நம்பிக்கை.

எனினும் இது தொடர்பாக மாற்றுக்கருத்துகளும் சிலர் கூறுகின்றனர். எது எப்படியோ சோமனூர் மூன்று கண் பாலம் பற்றிய விஷயங்கள் இன்னும் மர்மமாகவே உள்ளது.

'யாழ் ஓசையின்' வார ஜோதிட பலன்

[20.05.11 முதல் 26.05.11 வரை]

கலாநிதி துன்னையூர் ராம் தேவலோகேஸ்வர குருக்கள் (சாரதாபீட ஜோதிடம்)

* மேஷம்

மேஷராசி அன்பர்களுக்கு மிகவும் சிறப்பான பலன் அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் நல்ல வெற்றிகள் கிடைக்கும். தொழில் நிலையில் முன்னேற்றம் சிறப்புக்கள் ஏற்படும். குடும்பத்தில் மகிழ்வும், சுபகாரிய அனுகூலமும் அமையும். பணவரவு மிகவும் திருப்திகரமான நிலையில் அமையும். கடன் நிலைகளில் அனுகூலமான பலன்கள் ஏற்படும். பெண்களுக்கு நன்மை உண்டு. மாணவர்களுக்கு வெற்றியுண்டு.

* இடபம்

இடபராசி அன்பர்களுக்கு சற்று சுமாரான பலனே அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் நிதானமான செயற்பாடு வேண்டும். தொழில் நிலைகளில் அலைச்சல் இழுபறி நிலை இருக்கும். குடும்பத்தில் சற்று சுமாரான மத்திமமான பலனே ஏற்படும். பண வரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் நிலை உண்டு. கடன் நிலைகளில் சற்று மத்திமமான பலனே ஏற்படும். பெண்களுக்கு மத்திம பலன் ஏற்படும். மாணவர்கள் முயற்சி தேவை.

* மிதுனம்

மிதுனராசி அன்பர்களுக்கு ஓரளவுக்கு அனுகூலமுண்டு. தொழில் நிலையில் சிறு சிறு அலைச்சல் இழுபறி நிலை இருக்கும். எடுகின்ற முயற்சிகளில் நிதான செயற்பாடு வேண்டும். குடும்பத்தில் சற்று மத்திமமான சுமாரான பலனே ஏற்படும். பணவரவு மத்திமமான நிலையிலேயே அமைகின்ற பலன் உண்டு. கடன் நிலைகளில் இழுபறி நிலை இருக்கும். பெண்களுக்கு மத்திம பலன் உண்டு. மாணவர்கள் முயற்சி தேவை.

* கடகம்

கடகராசி அன்பர்களுக்கு சிறப்பான பலன்கள் அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் அனுகூலமான வெற்றி ஏற்படும். குடும்பத்தில் மகிழ்வும் அனுகூல பலனும் அமையும். தொழில் நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். பணவரவு மிகவும் திருப்திகரமான நிலையில் அமையும். கடன் நிலைகளில் சுமுகமான பலன்கள் ஏற்படும். பெண்களுக்கு நன்மை உண்டு. மாணவர்க்கு வெற்றியுண்டு.

* சிம்மம்

சிம்மராசி அன்பர்களுக்கு சற்று சுமாரான மத்திமமான பலன்கள் அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் நிதானம் தேவை. தொழில் நிலையில் அலைச்சல் அதிகம் இருக்கும். குடும்பத்தில் ஓரளவிற்கு அனுகூலமான பலன் ஏற்படும். கடன் நிலைகளில் அலைச்சல் இழுபறி நிலை இருக்கும். பணவரவு சுமாரான நிலையிலேயே அமையும் பலனுண்டு. பெண்களுக்கு மத்திம பலனும், மாணவர்களுக்கு வெற்றியும் ஏற்படும்.

* கன்னி

கன்னிராசி அன்பர்களுக்கு மிகச் சிறப்பான பலன் உண்டு. தொழில் நிலைகளில் நல்ல முன்னேற்றம் அமையும். குடும்பத்தில் மகிழ்வும் சுபகாரிய நிலையும் ஏற்படும். கடன் நிலைகளில் சுமுகமான பலன்கள் அமையும். எடுக்கும் முயற்சிகளில் அனுகூலமான வெற்றியுண்டு. பணவரவு தேவைகளை பூர்த்தி செய்யும் நிலையுண்டு. பெண்களுக்கு நன்மை உண்டு. மாணவர்களுக்கு வெற்றியுண்டு.

* துலாம்

துலா ராசி அன்பர்களுக்கு சற்று சுமாரான மத்திமமான பலன்களே அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் நிதானம் வேண்டும். தொழில் நிலைகளில் இழுபறி தாமத பலன் இருக்கும். குடும்பத்தில் சற்று சுமாரான மத்திம பலனே அமையும். சுகயீனங்கள், மருத்துவ செலவுகள் இடையிடையே ஏற்படும். கடன் நிலைகளில் மத்திமமான பலன்களே அமையும். பெண்களுக்கு மத்திம பலனும் மாணவர்களுக்கு முயற்சியும் தேவை.

* விருச்சிகம்

விருட்சிகராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூலமான பலன்கள் ஏற்படும். தொழில் நிலைகளில் சிறு சிறு பிரச்சினை இருக்கும். எடுக்கும் முயற்சியில் நிதானமான செயல் வேண்டும். தொழில் நிலையில் சிறு சிறு சஞ்சலங்கள் அமைந்திருக்கும். கடன் நிலையில் ஓரளவிற்கு அனுகூலம் அமையும் நிலையுண்டு. பணவரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் நிலை உண்டு. பெண்களுக்கு அனுகூலமுண்டு. மாணவர்களுக்கு முயற்சி தேவை.

* தனுசு

தனுசுராசி அன்பர்களுக்கு சற்று சுமாரான மத்திம பலன்களே அமையும். எடுக்கும் முயற்சிகளில் நிதான செயற்பாடு வேண்டும். உடல் நிலையில் சுகயீனம் ஏற்படும். கடன் நிலைகளில் இழுபறி தாமத நிலை அமையும். குடும்பத்தில் சுமாரான மத்திம பலன்களே ஏற்படும் நிலை உண்டு. பணவரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் நிலையுண்டு. பெண்களுக்கு நன்மை உண்டு. மாணவர்கள் முயற்சி தேவை.

* மகரம்

மகரராசி அன்பர்களுக்கு சிறப்பான அனுகூலமான பலன்கள் அமையும் நிலையுண்டு. எடுக்கும் முயற்சிகளில் நல்ல வெற்றிகள் அமையும். தொழில் நிலைகளிலே சிறப்பான பலன் ஏற்படும். குடும்பத்தில் வெற்றி உண்டு. பணவரவு மிகவும் சிறப்பான நிலையிலே அமையும். கடன் நிலைகளில் சுமுகமான பலன்கள் ஏற்படும். பெண்களுக்கு நன்மையுண்டு. மாணவர்களுக்கு வெற்றியுண்டு.

* கும்பம்

கும்பராசி அன்பர்களுக்கு சற்று சுமாரான மத்திமமான பலன்களே அமையும். தொழில் நிலைகளில் அலைச்சல் இருக்கும். எடுக்கும் முயற்சிகளில் சிறு சிறு தடை தாமத நிலையிருக்கும். குடும்பத்தில் ஓரளவிற்கு அனுகூலமான பலன் அமையும். பணவரவு சற்று சுமாரான மத்திமமான நிலையிலேயே அமையும். கடன் நிலைகளில் இழுபறி நிலை இருக்கும். பெண்களுக்கு மத்திம பலன் அமையும். மாணவர்களுக்கு வெற்றியுண்டு.

* மீனம்

மீனராசி அன்பர்களுக்கு சற்று மத்திமமான பலனே அமையும். எடுக்கும் முயற்சிகளில் நிதானம் கொள்ள வேண்டும். குடும்பத்தில் சிறு சிறு பிரச்சினைகள் தொடரும் பலனுண்டு. பணவரவு ஓரளவிற்கு அனுகூலமாய் அமையும் பலனுண்டு. கடன் நிலைகளில் சற்று மத்திமமான பலனே இருக்கும். சகோதரர் வழியில் சிறு சிறு சஞ்சலம் அமையும் நிலை உண்டு. மாணவர்களுக்கு மத்திமபலன், பெண்களுக்கு வெற்றியுண்டு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கடந்த 2005 ஆம் ஆண்டு முதல் வருடாந் தம் மாணவர்கள் இருவர் தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து வந்துள்ளனர். 2005 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரை யான காலத்தில் க.பொ.த. சாதாரண தர பரீட்சை யில் 27 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். அத்துடன், 2010 ஆம் ஆண்டில் 7 மாணவர்கள் சித்தியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சிறந்த கல்விச் செயற்பாட்டை வெளிக்காட்டும் சுன்னாகம் மயிலணி சைவ மகா வித்தியாலயம்

பாடசாலையாக சுன்னாகம் மயிலணி சைவ மகாவித்தியாலயம் விளங்குகின் றது. கடந்த வருடம் நூற்றாண்டு விழா வைக் கொண்டாடிய இப்பாட சாலையில் கற்றும் மாணவர்கள் கல்வி மற்றும் இணைப்பாடவிதான செயற்பா டுகள், விளையாட்டுக்களில் சிறந்து விளங்கிவருகின்றனர்.

தரம்-II பாடசாலையாகக் காணப் படும் இவ்வித்தியாலயம் 1910 ஆம் ஆண்டு தி. குமாரசாமி என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது. இக் காலத் தில் சைவப் பாடசாலைகள் அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் உணரப்பட்டமையி னால் இப்பாடசாலை உருவாக் கப்பட்டதாக வரலாறுகள் தெரி விக்கின்றன.

இவ் வித்தியாலயத்தின் வர லாற்றில் காலத்திற்கு காலம் கடமையாற்றிய அதிபர்கள் பாட சாலையின் பௌதீக வளங்களை விரிவுபடுத்தி மாணவர்களின் கல்வி மற்றும் இணைப்பாட விதான செயற்பாடுகளுக்குப் பெரிதும் உறுதுணையாக இருந்துவந் துள்ளார்கள்.

இவ் வித்தியாலயத்தின் வளர்ச்சிப் பாதையில் கடமையாற்றிய அதிபர்க ளின் சேவைகள் மிகவும் முக்கியமா னவை. ஆரம்பத்தில் பிரம்மஸ்ரீ இரத்தி னேஸ்வரக்குருக்கள் அதிபராக கடமை யாற்றியுள்ளார். தொடர்ந்து சி. நாகநா தர், ச. ஆறுமுகம், மா. குமாரசுவாமி, வே. சின்னையா, வ. பொன்னம்பலம், ப. சுப்பையா, க. திருநாவுக்கரசு, ஐ.மனோகரன், சு. துரைசிங்கம் மற்றும் த. சற்குணசர்மா ஆகியோர் அதிபர்களா கக் கடமையாற்றியுள்ளார்கள்.

கடந்த 2005 ஆம் ஆண்டு முதல் இன்று வரை நா. சிவநேசன் என்பவர் அதிபராகக் கடமையாற்றி வருகின்றார். இப்பாடசாலை மாணவர்களைக் கல் வியின் மூலம் தன்னம்பிக்கையும் கடின உழைப்பையும் கொண்ட சிறந்த ஜன நாயகப் பிரஜைகளாக வளர்த்தெடுத் தல் என்ற தூரநோக்குடனும் வினைத் திறன் மிக்க கற்றலில் ஈடுபாடு கொண்ட மாணவர்களையும், வினைத் திறன் மிக்க கற்றலைத் தூண்டும் ஆசி ரியர்களையும், உண்மையான ஆதரவு தரும் பெற்றோர்களையும் ஒருங்கி ணைப்பதை உறுதிப்படுத்தல் என்ற பணிக்கூற்றுடனும் இயங்கிவருகின் றது.

மாணவர்கள் கல்வியில் மட்டுமல் லாது இணைப்பாடவிதான செயற்பாடு கள் மற்றும் விளையாட்டுத்துறையிலும் மிகவும் சிறந்து விளங்குவதுடன் கோட்ட, வலய மட்டங்களில் முத ன்மை பெற்றுவருவதுடன் மாவட்ட ரீதியிலான போட்டிகளிலும் பங்குபற்றி வருகின்றார்கள். கடந்த 2005 ஆம் ஆண்டு முதல் வருடாந்தம் இரு மாண வர்கள் தரம்-5 புலமைப்பரிசில் பரீட் சையில் சித்தியடைந்துவந்துள்ளார்கள்.

2005 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரையான காலத்தில் க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் 27 மாணவர்கள் சித்தியடைந்துள்ளதுடன் 2010 ஆம் ஆண்டில்7 மாணவர்கள் சித் தியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்பாடசாலை அடிப்படை வசதிகள் பெரும்பாலானவற்றைக் கொண்டிருப் பதுடன் சுற்றாடலில் உள்ள மாணவர் களே இங்கு கல்வி கற்று வருகின் றார்கள். நூலகம் மற்றும் கணினி அறை வசதிகளைக் கொண்டிருப்பதுடன் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் உள்ள பழைய மாணவர்கள் ஒரு சிலர் பாடசாலைக்கு பண உதவி செய்துவரு கின்றார்கள்.

இவ்வித்தியாலயத்தில் கல்வி பயி லும் மாணவர்களின் 80 சதவீதமானோர் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். இம் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு ஊக் கம் அளிக்கப்பட்ட வேண்டும்.

தற்போது இவ்வித்தியாலயத்தில் 250 மாணவர்கள் கல்வி கற்று 15 ஆசிரியர் கள் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடு பட்டு வருகின்றார்கள்.

மாணவர்களின் திறமைகளை வெளிக்கொண்டுவருவதற்கு ஏதுவாக ஆரம்பப் பிரிவு மன்றம், தமிழ் இலக் கிய மன்றம், நுண்கலை மன்றம், சமூ கக்கல்வி மன்றம், கணித-விஞ்ஞான மன்றம், சுகாதார மன்றம் மற்றும் ஆங் கில மன்றம் என்பன இயங்கிவருகின் றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வித்தியாலயத்தின் வளாகத்தில் விவசாய விளைநிலங்கள் உருவாக்கப் பட்டு மரக்கறி வகைகள் செய்கை பண் ணப்படுகின்றன. இதன் மூலம் மாண வர்களுக்கான உணவூட்டல் திட்டத் தின் 20 சதவீத தேவை பூர்த்திசெய்யப் படுகின்றது.

இப் பாடசாலை மாணவர்கள் க.பொ.த. உயர்தரம் கலை, வர்த்தகப் பிரிவுகளைக் கற்பதற்கு வசதியாக தரம்-1 சி பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட வேண் டிய தேவை காணப்படு கின்றது.

இவ் வித்தியாலயத்தில் விளையாட்டு மைதானம், நவீன ஆய்வுகூட வசதி, நவீன இலத்திரனியல் உப கரணங்களான பல்லூடக எறியி மற்றும் போட்டோ கொப்பி இயந்திரம் என் பன தேவைப்படுவனவாக உள்ளன.

கடந்த வருடம் இரு மா டிகள் கொண்ட நூற்றாண்டு விழா ஞா பகார்த்தக் கட்டடம் ஒன்று அமைக்கும் நோக்கில் பொது மக்களின் நிதிப்பங்க ளிப்புடன் அமைக்கப்பட்டு கீழ்த் தளம் மட்டும் அமைக்கப்பட்டுள்ளது. இத னை முழுமையாக அமைக்கவேண்டிய தேவையும் காணப்படுகின்றது.

சுன்னாகம் மயிலணி சைவ மகாவித் தியாலயத்தின் வளர்ச்சிக்கு மெருகூட்டி வலுச்சேர்க்கவேண்டிய தேவைகளைப் பூர்த்திசெய்தால் இப்பாடசாலையும் மாவட்டத்தில் சிறந்த பாடசாலையா கத் திகழும்.

தி.ஞா. செந்தமிழ்ச்செல்வன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடாநாட்டு நிகழ்வுகள்

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் கலாசார நிகழ்வு பிரதேச செயலர் திரும தி.தே.பாபு தலைமையில் இடம்பெற்றது. இதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட வலி. மேற்கு பிரதேச சபை செயலாளர் சு. புத்திசிகாமணி மங்கல விளக் கேற்றுவதைப் படத்தில் காணலாம்.

(படம்:- யாழ். மத்தி நிருபர்)

உலக வங்கி அனுசரணையுடன் மடு கல்வி வலயத்துக்கு 'பிக்அப்' வாகனம் ஒன்று வட மாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறியினால் வட மாகாண ஆளுநர் பணி மனையில் வைத்து மடு கல்விப்பணிப்பாளர் ஜீ.ஏ. குறூஸ்ஸிடம் கையளிக்கப்பட் டது. அருகில் வட மாகாணக் கல்விப்பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரன், மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் திருமதி. பி. செல்வின் இறேனியஸ் ஆகியோர் நிற் பதையும் படத்தில் காணலாம். (படம்:- வண்ணார்பண்ணை நிருபர்)

164.4 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் யாழ்., கிளிநொச்சி குடிநீர் விநியோகத்திட்டத்தை ஆசிய அபிவிருத்தி வங்கி, இலங்கை அரசு மற்றும் பிரெஞ் நிதிப் பங்களிப்புடனான வேலைத்திட்டங்களை ஆசிய அபிவிருத்திப் பிரதிநிதிகள் பார்வையிடுவதை படத்தில் காணாலாம்.

(படம்:- யாழ். மத்தி நிருபர்)

அச்சுவேலிப் பகுதியில் பொலிஸாரால் அண்மையில் நடத்தப்பட்ட நடமா டும் சேவையின் போது பொலிஸ் அதிகாரிகள் மற்றும் கோப்பாய் பிரதேச செயலர் ம. பிரதீபன் ஆகியோர் கொடியேற்றும் நிகழ்வில் கலந்துகொண்டிருப்பதைப் படத் தில் காணலாம். (படம்:- அச்சுவேலி நிருபர்)

ஒருங்கிணைந்த உள்ளூர் அபிவிருத்தித் திட்டம் குறித்து வலி. மேற்கு பிர தேச சபையும் பிரதேச செயலகமும் இணைந்து தயாரிக்கவுள்ள மூலவளத் திரட்டு தொடர்பாக வலி. கிழக்கு பிரதேச சபை செயலாளர் திருமதி. சோமராஜ் ஜெயந்தி விளக்கமளிப்பதை படத்தில் காணலாம். (படம்:- யாழ். மத்தி நிருபர்)

சங்கானை - காரைநகர் பிரதான வீதி பல வருடங்களின் பின்னர் வீதி அபிவி ருத்தி அதிகார சபையினால் செப்பனிடப்படுவதைப் படத்தில் காணலாம்.

(படம்:- சங்கானை நிருபர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தாவாந்துறைப் படிப்பகம்

பிரீமியர் லீக் தொடருக்கு முன்பதாக

இலங்கை கிரிக்கெட்டுக்கு நிர்வாக சபை வேண்டும்

உலகக் கிண்ணத் கிரிக்கெட் தொடர் நிறைவடைந்த கையோடு இலங்கைக் கிரிக்கெட்டுக்குள் பெரும் பூகம்பமே வெடித்து விட்டது. உச்சக்கட்டமாக இலங்கை கிரிக்கெட்டுக்கு நிரந்தரமான நிர்வாக சபை அவசியம் என்பது கிரிக்கெட் வல்லுனர்களால் உணர்த்தப்பட்டதை உயர்நீதிமன்றமும் அங்கீகரித்திருக்கின்றது.

அந்த வகையில் 3 மாத கால அவகாசம் வழங்கிய உயர் நீதிமன்றம் மேற்குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் இலங்கைக் கிரிக்கெட்டின் நிர்வாக சபைக்கான அதிகாரிகளை தெரிவு செய்து கொள்ளுமாறும் அதற்காக தேர்தலொன்றை நடத்துவதன் மூலம் இதனை இலகுபடுத்திக் கொள்ள முடியும் என்றும் அறிவுறுத்தியிருக்கின்றது. உயர் நீதிமன்றத்தின் இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டு ஒரு மாதகாலம் ஆகின்ற நிலையில் அதற்கான முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பது கேள்விக்குறியாகவே இருக்கின்றது.

இந்த சந்தர்ப்பத்தில் நிர்வாக சபையின் தலைமைப் பதவிக்காக முன்னாள் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான திலங்க சுமதிபால போட்டியிடவிருப்பதாகவும் அதேநேரம் இலங்கை கிரிக்கெட்டின் முன்னாள் இடைக்கால நிர்வாக சபையின் தலைவர் ஜயந்த தர்மதாஸ மற்றும் பதுரலிய கிரிக்கெட் கழகத்தின் தலைவர் சுமித் பெரேரா ஆகியோர் இந்தப் பதவிக்காக போட்டியிடவிருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன. ஆனாலும் அதன் உண்மைத் தன்மை குறித்த வெளிப்படை எதுவும் இல்லாதிருக்கின்றது.

ஒரு நாட்டின் அபிவிருத்தியில் விளையாட்டுத் துறை என்பது முக்கியப் பங்கினை வகிக்கின்றது. எனவே விளையாட்டுத்துறை தங்கு தடையின்றி செயல்படுவதற்கும் அதிலுள்ள குறைநிறைகளை அறிந்து செயலாற்றுவதற்கும் நிரந்தரமானதும் அதேநேரம் உண்மையானதுமான அமைப்பாக நிர்வாக சபை அமைகின்றது. அது எந்தவொரு விளையாட்டுக்கும் பொருத்தமாகும்.

இலங்கை கிரிக்கெட்டை பொறுத்தவரையில் கடந்த 2004 ஆம் ஆண்டிலிருந்து இடைக்கால நிர்வாக சபையே இயங்கி வருகின்றது. இது இலங்கை கிரிக்கெட் வளர்ச்சிக்கும் எதிர்காலத்துக்கும் ஆரோக்கியமானதான விடயமல்ல. அத்துடன் அமையவிருக்கின்ற நிர்வாக சபையும் அதன் தலைமைத்துவமும் தூரநோக்குடையதாக செயற்படுவதே சிறந்ததாகும். இதற்கு மத்திய அரசாங்கத்தின் ஒத்துழைப்புக்களும் மிக மிக அவசியமானதே. இந்நிலையில் எதிர்கால கிரிக்கெட்டை நோக்காகக் கொண்டு உடனடியாக நிர்வாக சபை அமைக்கப்பட வேண்டுமென்றும் அனைவரினதும் எதிர்பார்ப்பாகும்.

இது இவ்வாறிருக்க எதிர்வரும் ஜூலை மாதத்தில் ஸ்ரீ லங்கா பிரீமியர் லீக் என்ற தொடரொன்றை நடத்துவதற்கு இலங்கை விளையாட்டு துறை அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. இந்தியாவில் நடைபெறுகின்ற ஐ.பி.எல். தொடரை போன்று இங்கும் நடத்துவது என்பது வரவேற்கத்தக்கதாகும். எனினும் அதற்கான வசதி வாய்ப்புக்கள் அனைத்தும் ஏற்படுத்தப்பட வேண்டும்.

இலங்கையில் இவ்வாறானதொரு தொடர் அறிமுகப்படுத்தப்படுவது எதிர்கால கிரிக்கெட்டுக்கு சிறந்தது. இதன் மூலம் கிராமப் புறங்களில் இருக்கின்ற திறமைமிக்க பல இளைஞர்களுக்கு தேசிய அணியில் இடம்பிடிப்பதற்கான சந்தர்ப்பங்கள் அமையும் என்பதில் சந்தேகமில்லை. என்றாலும் இனப்பாகுபாடின்றி ஏற்றத்தாழ்வுகளின்றி வீரர்கள் தெரிவு செய்யப்படுவது இன்றியமையாத அம்சமாகும். வடக்கு கிழக்கைப் பொறுத்தவரையில் இந்த ஸ்ரீ லங்கா பிரீமியர் லீக் எந்தளவு நன்மையைப் பெற்றுத் தரப் போகின்றது என்பது பொறுத்திருந்து பார்க்க வேண்டிய ஒன்றாகும். ஏனெனில் அரசாங்கம் கூறுகின்ற தேசிய நல்லிணக்கம் என்ற சொற்பதத்துக்குள் வைத்துப் பார்க்கும்போது இந்த பிரீமியர் லீக் நல்லதொரு முன்னேற்றத்தை தருவதற்கான அறிகுறி தென்படுகின்றது. அது நிஜமானதாக மாற வேண்டும் என்பது சகலரினதும் அபிலாஷையாக இருக்கின்றது.

இந்த தொடரில் உள்ளூர் வீரர்களுக்கு

ஜே.ஜி. ஸ்டீபன்

முன்னுரிமை அளிக்கப்படுவதான அறிவிப்பு வரவேற்கத்தக்கதாகும். அந்த வகையில் பரீட்சாத்தமான இந்த தொடர் தொடர்ந்தும் நடத்தப்படுவதற்கும் ஏற்ற வகையில் வழிவகைகள் வகுக்கப்பட வேண்டும். அவ்வாறு நடைபெற வேண்டுமானால் இலங்கைக் கிரிக்கெட் திடமானதொரு அமைப்பாக செயற்பட வேண்டியிருக்கின்றது. அதற்கு நிரந்தரமான நிர்வாக சபை அவசியமாகும். ஜூலை மாதம் நடைபெறவிருக்கின்ற ஸ்ரீ லங்கா பிரீமியர் லீக் தொடருக்கு முன்பதாக இலங்கை கிரிக்கெட்டுக்கு நிர்வாக சபை அமைக்கப்பட வேண்டும்.

அதுமட்டுமல்லாது, இலங்கை கிரிக்கெட்டுக்குள்ளோ அல்லது ஒட்டுமொத்த விளையாட்டுத் துறையினுள்ளோ அரசியல் தலையீடுகளுக்கு இடமளிப்பது ஏற்றுக் கொள்ள முடியாததாகும். விளையாட்டுத் துறைக்கு அரசியல் தனது விளையாட்டினை ஆரம்பித்து விடுமானால் அது விளையாட்டுத் துறையையே குட்டிச்சுவராக்கிவிடும் என்பது மாத்திரம் நிச்சயமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed and published by Express Newspapers (Cey) Ltd. at No. 185, Grandpass Road, Colombo 14. On Friday May 20, 2011